பாதுகாப்புத் திட்டங்கள் பல, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. அனைத்துத் திட்டங்களிலும் பெண்களுக்கு முன்னுரிமை. அனைத்துக்கும் மேலாய் அம்மா திட்டம், அம்மா உணவகம் போன்றவற்றைத் தந்து தமிழக மக்களின் தாயாக விளங்குகின்ற வருங்கால பாரதப் பிரதமர் மாண்புமிகு அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் ஒருமித்த கருத்துக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இலங்கையில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும், பெயருக்குக்கூட இந்தியப் பிரதிநிதிகள் யாரும் பங்கேற்கக் கூடாது என்று வரலாற்று சிறப்புமிக்கத் தீர்மானத்தை முன்மொழிந்து, சட்டப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மாநகராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடந்து கொண்டு வரும் வேளையில், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக தார்ச் சாலைகள் வெட்டப்பட்டு, ஒருசில பகுதிகளில் வெட்டப்பட்ட தார்ச் சாலைகள் போடப்படாமல் உள்ளன. அதனை சீர்செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பகுதிகளில், மாநகரப் பகுதிகளில், பேரூராட்சிப் பகுதிகளில் ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் இதுபோன்ற பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டபோது தொடர்ந்து அந்தப் பகுதிகளுக்கு முழுமையாகச் சாலைகளை சீர்செய்து, தார்ச் சாலைகளைப் போடுவதற்குரிய நிதியை ஒதுக்கவில்லை. அவ்வாறு இல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது இதுபோன்ற பாதாளச் சாக்கடைத் திட்டத்தை

[2013 அக்டோபர் 29

உருவாக்குகின்றபோது, உடைக்கப்படுகின்ற சாலைகளை மீண்டும் மூடி, தார்ச் சாலைகளை அமைப்பதற்குரிய நிதியையும் இணைத்து வழங்கியிருக்கிறார்கள். எனவே, அந்தச் சாலைகள் உடனடியாக சீர் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டவுன் பஞ்சாயத்துக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடர்ந்து வரும் என்று கூறினார்கள். என்னுடைய மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியானது 5 பேரூராட்சிகளை உள்ளடக்கிய பகுதியாகும். நகரப் பகுதி இல்லாதது. புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதி. மாண்புமிகு அம்மா அவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட வட்டம். ஆகவே, சிறப்புக் கவனம் எடுத்து, முன்னுரிமை அடிப்படையிலே மடத்துக்குளம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று அன்போடு வேண்டி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் அன்பு வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அந்த அன்பு வேண்டுகோளை உடனடியாக நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையிலே உட்கார்ந்து தீட்டுகிற திட்டங்களால்



2013 அக்டோபர் 29]

குக்கிராமங்களில் கூலி வேலை செய்கின்றவர்களின் வாழ்க்கை உயர வேண்டுமென்ற அடிப்படையில் தினந்தோறும் பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமங்கலம் நகராட்சி, டி. கல்லுப்பட்டி பேரூராட்சி, பேரையூர் பேரூராட்சி ஏதாவது ஒரு பகுதிக்கு இந்த ஆண்டு பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, ஏற்கெனவே இதற்கான விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. பல ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்குரிய இடங்கள் கிடைப்பதில்லை. அது அரசு நிலமாக இருந்தாலும்கூட, அந்த நிலத்தை நாம் கையகப்படுத்தும்பொழுது, அந்த நிலத்தின் அருகில் குடியிருப்பவர்கள் போராட்டத்திலே இறங்கிவிடுகிறார்கள். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அந்த இடத்தில் வரக்கூடாது என்று தடையாணைகளை வாங்கிவிடுகிறார்கள். இதையெல்லாம் ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 அக்டோபர் 29

**48—**

## குளிர்பதனக் கிடங்கு

***5491—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் பகுதியில் வேளாண் விளை பொருட்களுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் உழவர் சந்தையில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, ஆத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவுகொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. கட்டுமானப் பணிகள் முடிவுற்றவுடன் குளிர்பதனக் கிடங்கு பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

**திரு. சு. மாதேஸ்வரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி கண்ட பெண், பாரதம் இனி உங்கள் பின்னே என்று, பார்போற்றும் பாரதத் தாயாம் எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கோரிக்கையினை நிறைவேற்றும்*



2013 அக்டோபர் 29]

*வகையில் பணிகள் நடைபெற்று வருவதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, தொகுதி மக்களின் சார்பாகவும், விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**49—**

## சொந்தக் கட்டடம்

***3688—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், சௌந்தரபாண்டியபுரத்திலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், தெற்கு கள்ளிக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 384 குடும்ப அட்டைகளுடன் சௌந்தரபாண்டியபுரம் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் இந்நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர ஏதுவாக இடமும், நிதியும் ஒதுக்கக் கோரி, திருநெல்வேலி மாவட்ட திட்ட அலுவலர் அவர்களுக்கு 14–2–2013 அன்று கடிதம் எழுதப்பட்டு, மீண்டும் 21–10–2013 அன்று நினைவூட்டுக் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்திடமிருந்து பதில் வரும்பட்சத்தில், போதிய நிதி ஒதுக்கீடு பெற்ற பின்னர் இந்நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2013 அக்டோபர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இகத்தினால் தமிழ் காக்க இறைதந்த கொடையாக, இயலார்க்கு வழிகாட்ட இலைதந்த விடையாக, சதிகளை சம்ஹாரம் புரிகின்ற சக்தியாக, சந்தியா தாய் ஈன்ற பகுத்தறிவு பக்தியாக, (மேசையைத் தட்டும் ஒலி) வல்லரசும் வாழ்த்துகிற நல்லரசு நாயகமாக, (மேசையைத் தட்டும் ஒலி) வடக்கும் வழி பார்த்துக் காத்திருக்கும் வருங்கால பாரதமாக, (மேசையைத் தட்டும் ஒலி) நதி உரிமை காத்திட்ட நாடுபோற்றும் மீட்பராக, நற்றமிழ் நாட்டுக்கு நல்லதோர் மேய்ப்பராக, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்னும் சத்தியத்தில் வாழ்கிற சரித்திரமாக, சாதனையாக (மேசையைத் தட்டும் ஒலி) வடக்கும் வாழும், ஆனால் இனி தெற்குதான் ஆளும் என்னும் வரலாறு படைத்திட (மேசையைத் தட்டும் ஒலி) காலமும், கடவுளும் கழகத்தின் வழியாய் தந்திருக்கும் எங்கள் தவமே, வரமே, தமிழகத்தின் அருந்தவமே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களே, வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தருவேன் என்று உறுதியளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

*முற்பகல் 10–25*

**திரு. மு.வீ. கருப்பையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட புத்தூர் ஊராட்சியான நாராயணபுரம், பொம்மிநாயக்கன்பட்டி மற்றும் கச்சகட்டி, குற்றாலம்பட்டி ஆகிய பகுதிகளில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்தான் நடத்துகின்றன. இந்தச் சங்கத்தினுடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து, அந்தச் சங்கத்திற்கு இடம் இருக்கும்பட்சத்தில், அந்தச் சங்க இடத்தில் கட்டுவதற்கான வாய்ப்பு வசதிகள் உண்டு. இல்லாதபட்சத்தில் மாவட்ட முகமை நிதியிலிருந்தோ, ஊராட்சி நிதியிலிருந்தோ அல்லது அவர் விரும்பினால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்தோ கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**50—**

**சாலையை அகலப்படுத்துதல்**

*__24657—திரு. சு. குணசேகரன்:__*

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை—சூராணம் சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை—சூராணம் சாலையை வரும் காலங்களில் போக்குவரத்து செறிவிற்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் அகலப்படுத்த பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2013 அக்டோபர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை—சூராணம் சாலை என்பது கிட்டத்தட்ட 100 கிராமங்களை இணைக்கக்கூடிய சாலையாகும். 32 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. அந்தச் சாலையின் இடைப் பகுதியிலே 3 கிலோ மீட்டர் மட்டும் ஊராட்சிக்குச் சொந்தமான சாலையாக இருக்கிறது. அந்தச் சாலையையும் நம்முடைய நெடுஞ்சாலைத் துறையிலே ஏற்று, முழுச் சாலையையும் அகலப்படுத்துவதன் மூலமாக அங்கே இருக்கக்கூடிய சிரமமண்டலக் கிராமத்தில் கொங்கேஸ்வரர்கோயில் என்ற மிகப் பெரிய ஆலயத்தில் வருடந்தோறும் ஒவ்வொரு முகூர்த்த நாட்களிலும் கிட்டத்தட்ட பல ஆயிரம் மக்கள் அங்கே கூடி, பல நூற்றுக்கணக்கான திருமணங்கள் நடைபெறுகின்றன. எனவே, வாகனப் போக்குவரத்து கூடுதலாக இருக்கின்றது. அந்த நேரங்களில் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, அதைக் கருத்திற்கொண்டுதான் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில்,* positive *ஆக, சாதகமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை உறுதிப்படுத்துகின்ற வகையில் வரக்கூடிய நிதியாண்டில் அந்தச் சாலையை அகலப்படுத்தித் தர வேண்டுமென்று நான் தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை முதல் சூராணம் வரை உள்ள சாலையின் நீளம் 41.30 கிலோ மீட்டர் ஆகும். இவ்வழித்தடத்தில் 4 கிலோ மீட்டர் நீளம் தேசிய நெடுஞ்சாலை எண் 226 உள்ளது. 3.8 கிலோ மீட்டர் நீளம் ஊராட்சி ஒன்றிய சாலைப் பகுதி. 0.20 கிலோ மீட்டர் நீளம், நெடுஞ்சாலைத் துறையின் மாநில நெடுஞ்சாலைப் பகுதியாகவும் மற்றும் 33.20 கிலோ மீட்டர் நீளம் நெடுஞ்சாலைத் துறையின் மாவட்டத்தின் இதர சாலைப் பகுதியாகவும் உள்ளன. மேற்கண்ட சாலைகள் ஏற்கெனவே இருவழித்தடமாக அகலப்படுத்தப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளைத் தவிர்த்து, எஞ்சிய*



2013 அக்டோபர் 29]

*37 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலையில் போக்குவரத்துச் செறிவு 2,000 யூனிட்டுக்குக் குறைவாக உள்ளது. தற்போது இச்சாலை போக்குவரத்துச் செறிவுக்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது. வருங்காலங்களில் போக்குவரத்து அதிகரிக்கும்போது, அகலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியதைப்போல, அங்கு இருசக்கர வாகனங்கள் அதிக அளவிலே பயன்படுத்தப்படுகின்ற காரணத்தாலும் அந்தச் சாலையில் பல கிராமங்களை இணைக்கக்கூடிய சந்திப்புக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், அந்தச் சாலை குறுகிய சாலையாக இருப்பதாலும் அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றன. அதனால் மரணம் போன்ற நிகழ்வுகளும் தொடர்ந்து நடக்கின்ற சூழல் ஏற்படுகின்றது. எனவே, போக்குவரத்து நிலைமையைப் புதிதாகக் கணக்கிட்டால் கூடுதலான செறிவு இருக்குமென்று நான் நம்புகின்றேன். அந்த அடிப்படையில், மக்களுடைய நலன் கருதி அந்தச் சாலையை வரும் நிதியாண்டிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அகலப்படுத்துகின்ற பணியை எடுத்துக்கொண்டு செயல்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், போக்குவரத்துச் செறிவைக் கணக்கிட்டு, அதற்கேற்றவாறு சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று இங்கே வினா தொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே போக்குவரத்து செறிவைக் கணக்கிட்டு, போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்தில், அந்தச் சாலையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

முற்பகல் 10–30

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட, தலைவாசல் ஒன்றியத்திற்குட்பட்ட மணிகொண்டான் ஊராட்சி மற்றும் சார்வாய் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் அதிகப்படியான வாகனங்கள் செல்வதால், பொது மக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் சிரமமாக உள்ளது. எனவே, அந்தச் சாலையை அகலப்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றியச் சாலை என்று இங்கே குறிப்பிட்டிருக்கின்றார். நெடுஞ்சாலைத் துறையில் இருந்தால்தான் அந்தச் சாலையை அகலப்படுத்த முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட சாலையா அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சாலையா என்று தெளிவுபடுத்தினால், அதற்கேற்றவாறு அரசு அதனை ஆய்வு செய்து, அங்கே போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கும்பட்சத்தில் சாலையை விரிவுபடுத்த ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியிலிருந்து திருவண்ணாமலை செல்கின்ற அம்மாப்பேட்டை–செங்கம் வழியாக புதியதாக சாலை அமைக்கப்பட்டு வாகனங்களும் இயக்கப்பட்டு வருகின்றன. இடையிலே ஒரு பெரிய பாலம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்துகின்றபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் திருவண்ணாமலைக்குச் செல்கின்றபட்சத்தில் 40 கிலோ மீட்டர் தூரம் குறைவதற்கு வாய்ப்புள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





அதேசமயத்தில், அயோத்தியாபட்டணத்திலிருந்து திருப்பத்தூர் வரை நான்குவழிச் சாலை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு, பணிகள் தொடங்குவதற்குக் காத்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்தப் பணிகள் எப்பொழுது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலையை விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஒரு சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று சொன்னால், அந்தச் சாலையில் செல்கின்ற வாகனங்களுடைய செறிவைப் பொறுத்துதான் விரிவுபடுத்த முடியும். எனவே, அந்தச் சாலையை ஆய்வு செய்து, போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்தில், சாலையை விரிவுபடுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அயோத்தியாபட்டணத்திலிருந்து திருப்பத்தூர் வரை செல்லுகின்ற அந்தச் சாலையை TNRSP திட்டத்தின் மூலமாக உலக வங்கி உதவியுடன் நான்குவழிச் சாலையாக அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, இப்பொழுது பரிசீலனையில் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதியில், அருமனை–பனச்சமூடு சாலையை தற்பொழுது 2 செ.மீ. பலப்படுத்த ஒப்பந்தம்

வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சாலை மிகவும் பழுதடைந்து மரணக் குழிகளாக விளங்குகின்றன. அந்தச் சாலை மிகவும் குறுகிய சாலையாக உள்ளது. போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கக்கூடிய சாலை அது. அதை இருவழிச் சாலையாக அகலப்படுத்தி, அதிக பலத்துடன் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றது, அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, ஒருவழித் தடச் சாலையென்றால், 3.75 மீட்டர் அகலம் கொண்டதாக இருக்கும். இச்சாலையில் போக்குவரத்துச் செறிவு சுமார் 2,000 PCU–க்கு மிகாமல் இருந்தால்தான் 3.75 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக அமைக்கப்படும். அதே வேளையில் இருவழித் தடச் சாலையாக அமைக்க வேண்டுமென்றால், ஒரு சாலையின் போக்குவரத்துச் செறிவு 2,000 PCU அதாவது, Passenger Car Units தாண்டி, 5,500 PCU இருக்கும்பட்சத்தில் அச்சாலையை 5.5 மீட்டர் அகலம் கொண்ட இருவழித் தடச் சாலையாக அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலையை ஆய்வு செய்து, போக்குவரத்துச் செறிவுக்கு ஏற்றவாறு அகலப்படுத்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட கண்டாச்சிபுரம்–வீரபாண்டி சாலை அமைப்பதற்கு 2012–2013 ஆம் நிதியாண்டில் கிராமச் சாலைகள் திட்டம் மூலமாக ரூ.30 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அந்தச் சாலைப் பகுதியின் சிறிது தூரம் வனத்





துறையிலே வருகிறது. அந்தச் சாலை முன்பு நெடுஞ்சாலைத் துறையால் போடப்பட்டது. ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாலை அமைப்பதற்கு வனத் துறை அனுமதிக்கவில்லை. அதனால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். வீரபாண்டியைச் சுற்றியுள்ள 10 கிராமங்களைச் சார்ந்த மாணவர்கள் கண்டாச்சிபுரத்தில் உள்ள அரசுப் பள்ளிக்கு வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதுசம்பந்தமாக அங்கே சாலை மறியல்கூடநடைபெற்றிருக்கிறது. எனவே, உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, இந்தச் சாலையை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். வனத் துறையினுடைய அனுமதி இல்லாத காரணத்தால் அந்தச் சாலை அமைக்கின்ற பணிகள் தடைபட்டுவிட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வனத் துறையினுடைய அனுமதி பெறுவதற்கு அரசு விரைந்து செயல்பட்டு, அனுமதி பெற்று, அந்தச் சாலையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட போரூர் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணிகள் நிதிப் பற்றாக்குறையால் மேற்கொள்ளப்படவில்லை. இதனை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, கூடுதலாக நிதி ஒதுக்கி, அந்தப் பணிகள் துவங்க நடவடிக்கை எடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், அந்தப் பாலத்திற்குக்கீழே 2 பைப் லைன்கள் செல்கின்றன. ஒன்று, 1500 m.m. diameter, அதற்கு design

[2013 அக்டோபர் 29

கொடுக்கப்பட்டுள்ளது; மற்றொன்று, *1200* m.m. diameter, அதற்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து இன்னும் re-design வரவில்லை; காலதாமதம் செய்கிறார்கள். எனவே, அந்தப் பணிகளை விரைந்து முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், போரூர் மேம்பாலத்தை விரைந்து கட்டி முடிக்க முன்வருவீர்களா என்று வினா தொடுத்திருக்கின்றார்கள். மாநகராட்சிக்குச் செல்கின்ற அந்தக் குழாயை மாற்றி, அங்கே பாலம் அமைக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. அந்தக் குழாயைப் பாதிக்காமலேயே அதற்குப் பதிலாக, அங்கே தாங்குத் தூண்கள் அமைக்கப்பட்டு, பாலம் அமைப்பதற்கான நடவடிக்கையைத் தற்பொழுது அரசு மேற்கொண்டு வருகிறது. விரைவில் அந்தப் பாலப் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குன்னம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியத்தில், செந்துறையையும், பெண்ணாடத்தையும் இணைக்கின்ற சாலை நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானதாகும். அதில் *2, 3* கி.மீ. தூரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலை என்கின்ற காரணத்தினால், அதனை அகலப்படுத்த முடியாமல் இருந்தது. ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலையை, ஊராட்சி ஒன்றியத்திலிருந்து, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்வதற்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தச் சாலை அரியலூர் மாவட்டத்தையும், கடலூர் மாவட்டத்தையும் இணைக்கின்ற சாலையாகும். அந்தச் சாலையின் இருபுறமும் சிமென்ட் ஆலைகளும், சர்க்கரை ஆலைகளும் இருக்கின்றன. குறிப்பாக, அந்தச் சாலையை ஒட்டிய பகுதிகளில் சுண்ணாம்புக் கல் சுரங்கங்கள் இருக்கின்றன. இங்கு, போக்குவரத்துச் செறிவு அதிகமாக உள்ளது. போக்குவரத்துச் செறிவு இருக்கிறதா என்பதற்கான போக்குவரத்து அளவீடுகள் அந்தப் பகுதியில்



2013 அக்டோபர் 29]

எடுக்கப்பட்டு, கருத்துருக்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனவே, அந்தச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்திக் கொடுத்தால், எங்களுடைய பகுதிக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். அதைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு, ** கேள்வி கேட்பதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் கூறிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரு மாவட்டங்களை இணைக்கின்ற சாலை; ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்றது. போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தித் தர முன்வருவீர்களா என்று வினா தொடுத்துள்ளார்கள். அந்தச் சாலையை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து, நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்ய வேண்டும். அப்படி மாற்றம் செய்யப்பட்டால், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தினை ஆய்வு செய்து, அங்கே வாகனச் செறிவு அதிகமாக இருக்குமானால், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக சாலை அமைக்கின்ற பணியை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குடியாத்தம் தொகுதியில் இருக்கக்கூடிய குடியாத்தம் நகரத்தில், அனைத்துப் போக்குவரத்தும் கடைவீதிகள் வழியாகத்தான் நடைபெறுகின்றன. இதனால், விபத்துகளும் அடிக்கடி நடைபெறுகின்றன. இதைத் தவிர்ப்பதற்காக குடியாத்தத்தின் மையப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 அக்டோபர் 29

பகுதியில் அமைந்திருக்கின்ற கௌடடின்ய மகாநதியின் கரைமீது மாற்றுச் சாலை அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தத்தின் மையப் பகுதியில் மாற்றுச் சாலை அமைத்துத் தர முன்வருவீர்களா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா தொடுத்துள்ளார்கள். அதை ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருந்தால், நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக முக்கியத்துவம் வாய்ந்த சிவகாசி–விருதுநகர் 22 கி.மீ. சாலையை multi-laning ஆக்குவதற்கு 22 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதனை விரைவில் நிறைவேற்றிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி–விருதுநகர் சாலைப் பணிகளை விரைந்து நிறைவேற்றிட அரசு முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா தொடுத்துள்ளார்கள். ஒவ்வொரு ஆண்டும் எங்கெங்கெல்லாம் சாலைகள் மோசமாக இருக்கின்றனவோ, அவை கண்டறியப்பட்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றது. அதனடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற பகுதியிலும் நிதிநிலைக்கேற்ப சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 29]

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**51—**

## நெல் சேமிப்புக் கிடங்கு

***29385—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தேவூரில் நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், நாரப்பன்சாவடி என்ற இடத்தில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்கு ஒன்று இயங்கி வருகிறது. மேலும், தற்போது தேவூருக்கு அருகில் சுமார் 13 கிலோ மீட்டர் தொலைவில் எடப்பாடி வட்டம், தங்கவூர் கிராமத்தில், 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று கட்டத் திட்டமிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருங்காலங்களில் தேவையின் அடிப்படையில் மேற்படி கிடங்கினைத் தேவூரின் பயன்பாட்டுக்கு உபயோகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

[2013 அக்டோபர் 29

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய சங்கரி தொகுதி, சங்கரி வட்டம், தேவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் பெரும்பாலும் நெல் பயிரிடப்படுகிறது. ஆண்டுக்கு சுமார் 25,000 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படுமென்று இங்கு கூறினார்கள். சங்கரி வட்டம், நாரப்பன்சாவடி என்ற இடத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்கு ஒன்று இருப்பதாகவும், எடப்பாடி வட்டத்தில் ஒரு கிடங்கு கட்டப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

சங்கரி வட்டம், நாரப்பன்சாவடியில் இயங்கிவரும் கிடங்கு தேவூரிலிருந்து சுமார் 28 கிலோ மீட்டர் தொலைவிலும், எடப்பாடி வட்டம், எடப்பாடி பகுதியில் அமைந்துள்ள சேமிப்புக் கிடங்கு 13 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. மக்களுக்குக் கேட்டதையெல்லாம் செய்துகொடுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள விவசாயப் பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று, அதனைப் பரிசீலித்து விரைவாக தேவூரில் நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தேவூரில் நெல் சேமிப்புக் கிடங்கு ஒன்றினைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு சங்கரி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசுக் கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் நெல்லை விற்பனை செய்யக் கொண்டுவருவதில்லை. மேலும், இம்மாவட்டத்தில் அரசு நவீன அரிசி ஆலைகளோ, அரைவை முகவர்களோ இல்லாது இருப்பதால், டெல்டா மாவட்டங்கள் போன்று வெளி மாவட்டங்களிலிருந்து நெல்லைக் கொண்டு வந்து



2013 அக்டோபர் 29]

சேலம் மாவட்டத்தில் சேமித்து வைப்பதற்கான அவசியமும் ஏற்படுவதில்லை. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப அந்தப் பகுதியிலே சேமிப்புக் கிடங்கு தேவையென்று கேட்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற இந்த நேரம் ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் இருப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பின்னர் ஆய்வு செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**52—**

**கறவைக் கூடம்**

***3180—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், கீழஉப்பூரணியில் பால் பண்ணை கறவைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், கீழஉப்பூரணியில் பால் பண்ணை கறவைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களக்காடு ஊராட்சி ஒன்றியம், சிங்கிக்குளம் பஞ்சாயத்து கீழஉப்பூரணி கிராமம் மற்றும் 13 கிராமங்களை உள்ளடக்கியது. கீழஉப்பூரணி கிராமத்தைச் சுற்றிலும் இடையன்குளம், மேலக்கிரியூர் ஆகிய பஞ்சாயத்துக்கள் உள்ளன. சுமார் 30 கிராமங்கள் கீழஉப்பூரணியின் அருகில் உள்ளன. இங்கு 3,000 பசுக்கள் மற்றும் 600 எருமை மாடுகளை வளர்த்து வருகிறார்கள். கிராம மக்களின் அடிப்படையான தொழில் பால் வியாபாரம். மழை, பனி மற்றும் வெயில் காலங்களிலே பால் உற்பத்தியாளர்கள் தங்களது கறவை மாடுகளைக் கொண்டு கறவை செய்ய மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனைத் தவிர்க்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்று கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட களக்காடு ஒன்றியத்தில், கீழஉப்பூரணி கிராமத்தில், கீழஉப்பூரணி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் 70 உறுப்பினர்கள் உள்ளனர்.



இச்சங்கத்தில் நாளொன்றுக்கு 650 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, அதில் 80 லிட்டர் உள்ளூர் விற்பனை போக, மீதமுள்ள 570 லிட்டர் பால், திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை. தற்சமயம் சங்க அலுவலகம் வாடகை இடத்திலும், சங்கக் கறவைக் கூடம் தனியாருக்குச் சொந்தமான 12 சென்ட் நிலத்திலும் செயல்பட்டு வருகின்றன. சங்கத்திற்குச் சொந்தமாக நிலம் வாங்க நிதியாதாரம் ஏதுமில்லை. ஆதலால், கீழஉப்பூரணி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கறவைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், சங்கக் கறவைக் கூடத்திற்கான நிலம் பெறுவதற்குத் தேவையான நிதியாதாரம் சங்க அளவில் ஏற்படுத்தி, கறவைக் கூடம் சட்டமன்ற உறுப்பினர் நிதி பெற்று அல்லது திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் கடன் பெற்று, இச்சங்கத்திற்குக் கறவைக் கூடம் கட்டித் தர இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதெல்லாம் கொடுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சியிலே, கண்டிப்பாக நீங்கள் அதை முன்வந்து செய்துதர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**53—**

### சுத்திகரிப்பு நிலையம்

***3113—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 29

*(அ) ஈரோட்டில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு வட்டத்தில் 154 சாயத் தொழிற்சாலைகளும், 241 சலவைத் தொழிற்சாலைகளும், 186 பிரிண்டிங் தொழிற்சாலைகளும் மற்றும் 42 தோல் தொழிற்சாலைகளும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று, தனித்தனியே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயங்கி வருகின்றன. எனவே, ஈரோட்டில் அரசு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் சாயத் தொழிற்சாலைகளும், தோல் தொழிற்சாலைகளும், சலவைத் தொழிற்சாலைகளும் அதிக அளவில் உள்ளன. அங்கு முக்கியத் தொழிலே ஜவுளித் தொழில்தான். ஆதலால், ஈரோட்டிற்கு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தந்தால், ஜவுளித் தொழில் சிறப்படையும். மேலும், தொழிற்சாலைகள் சுத்திகரிப்பு செய்யமுடியாத நிலை இருப்பதால், அதிகாரிகள் சாயப் பட்டறைகளையும், சலவைப் பட்டறைகளையும் இடித்துத் தள்ளுகிற அவல நிலை அங்கு உள்ளது. எனவே, திருப்பூரில் பொது சுத்திகரிப்பு நிலையம் உள்ளதுபோல, ஈரோட்டிலும் அமைத்துத் தர இந்த அரசு, முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு வட்டத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த சாயத் தொழிற்சாலைகளும், சலவைத் தொழிற்சாலைகளும், பிரிண்டிங் தொழிற்சாலைகளும், 42 தோல் தொழிற்சாலைகளும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று, தனித்தனியே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயங்கி வருகின்றன. இவற்றில் 115 சாயத் தொழிற்சாலைகளும், 33 தோல் தொழிற்சாலைகளும் உயர் நீதிமன்ற நீதிப் பேராணை எண் 5494/1998–ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின்படி, எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) மற்றும் அடர்கசடு மேலாண்மை சுத்திகரிப்பு நிலையத்தை (Reject Management), நிறுவி கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலையைக் கடைப்பிடித்து வருகின்றன. அவ்வாறு பூஜ்ஜிய நிலையை, Zero liquid discharge–ஐக் கடைப்பிடிக்காமல் இருந்த சாய, தோல் தொழிற்சாலைகளை மூடுவதற்கு வாரியத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை முறையாக இயக்காமல், சுத்திகரிக்கப்படாத கழிவுநீரினை நீர்நிலைகளிலோ, நிலத்திலோ வெளியேற்றும்பட்சத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் அமைக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவாலும் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு, தவறு செய்யும் தொழிற்சாலைகள் தங்களது தவறுகளைச் சரிசெய்யும்பட்சத்தில், தொழிற்சாலைகளை மீண்டும் இயக்க அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சூழ்நிலையில், ஈரோட்டில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு அவசியம் ஏதும் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 29

**54—**

**தூண்டில் வளைவு**

*6048—**திரு. கே. குப்பன்:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவொற்றியூர் தொகுதியிலுள்ள மீனவர் கிராமங்களுக்குத் தூண்டில் வளைவுகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதியிலே மீனவர் கிராமங்களுக்குத் தூண்டில் வளைவுகள் அமைத்துக் கொடுக்கப்படுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். தமிழகத்திற்குத் தாயாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்று பாடுபட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்தப் பணிக்காக 31 கோடியே 82 இலட்சம் ரூபாய்க்கு அரசின் நிருவாக ஒப்புதலை வழங்கியிருக்கிறது. விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*

**திரு. கே. குப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுக் காலம் என்னுடைய தொகுதியில் உள்ளவர் மீன் வளத் துறை அமைச்சராக பணியாற்றியும்கூட, ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடாத சூழ்நிலையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் என்னுடைய தொகுதியிலே சின்னகுப்பம், பெரியகுப்பம், இ.ஐ.டி. பாரி அருகில் வீடுகளெல்லாம் கடல் அடித்துச் செல்லக்கூடிய சூழ்நிலை இருந்தபோது, மூன்று மாத காலத்தில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாயை உடனடியாக ஒதுக்கீடு செய்து, அந்த மக்களை கடல் அரிப்பிலிருந்து தடுத்துக் காப்பாற்றினார்கள். அதுபோல, திருவொற்றியூர் தொகுதியில் நேதாஜி நகரிலிருந்து நெட்டுகுப்பம் வரை கடல் அரிப்பைத் தடுக்க 26 கோடியே 58 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுது மீனவர் கிராமங்களுக்கு 10 தூண்டில் வளைவுகள் அமைக்க 31 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் தொடங்கப்படும் என்பதையும், ஆக மொத்தம் 62 கோடி ரூபாயை, மீனவ சமுதாய மக்களின் வாழ்விலே ஒளி ஏற்றக்கூடிய மீனவர்களின் விடிவெள்ளி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து மீனவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்கக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதத்தில் எனது தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைச் சமர்ப்பித்து, இந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறையின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் துறையின் அனுமதி கிடைத்தவுடன் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*

**திரு. கே. குப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜான் ஜேக்கப் அவர்கள்.*

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கிள்ளியூர் தொகுதி, கடற்கரை கிராமங்கள் நிறைந்த பகுதி. அங்கு கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு அடித்த காற்றினாலும், புயலினாலும் அந்தப் பகுதியிலுள்ள கொல்லங்கோடு–திருப்பூர் சாலையை ஒன்றரை கிலோ மீட்டர் கடல் அடித்துச் சென்றுவிட்டது. அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களில் அநேக வீடுகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ஆகவே, அந்தப் பகுதிக்கு தூண்டில் வளைவுகள் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அரசின் ஆய்வில் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**55—**

**கால்நடைக் கிளை மருத்துவமனை**

***22853—திரு. கோவி. சம்பத்குமார்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வாணியம்பாடி தொகுதி, அளிஞ்சிகுளம் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற அளிஞ்சிகுளம் ஊராட்சியிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கத் தேவையான 3,000 கால்நடை அலகுகளுக்குக் குறைவான அலகுகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏங்கி நிற்கும் தமிழகத்தைத் தாங்கி நிற்கும் தமிழகத்தின் தலைமகள், மாற்றம் தந்த தமிழகத்திற்கு நாளும் ஒரு திட்டம் தந்து, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து, பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில், நாட்ராம்பள்ளி ஒன்றியம், அளிஞ்சிகுளம் ஊராட்சி, வாணியம்பாடியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மேலும், அளிஞ்சிகுளம் ஊராட்சி சுற்றிலும் மலைகளால் சூழப்பட்ட பகுதியாக உள்ளதால் விவசாயக் குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்ற பகுதியாக உள்ளது. இந்த ஊராட்சியைச் சுற்றிலும் பத்துக்கும் மேற்பட்ட ஊராட்சிகள் உள்ளன. இப்பகுதி மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றனர். இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் ஆடு, கறவை மாடு, உழவு மாடு போன்ற பல்வேறு கால்நடைகளை வளர்த்து வருகிறார்கள். கால்நடைகளுக்கு சிகிச்சைப் பெற வேண்டுமானால் வாணியம்பாடியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கோ அல்லது பத்து கிலோ மீட்டர் தூரம் உள்ள அம்பலூர் கால்நடை மருத்துவமனைக்கோ சென்று சிகிச்சைபெற வேண்டிய சிரமம் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் 1,500–க்கும் மேற்பட்ட கால்நடைகளை வைத்திருக்கின்ற விவசாயிகளின் நலன் கருதி, அளிஞ்சிகுளம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 29

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறையின் விதிகளின்படி, கால்நடை மருத்துவமனை அமைக்க 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்கிறார், 1,500 கால்நடைகள்தான் இருக்கின்றன என்று. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தின்படி, கிராமப் பகுதிகளில் இருக்கின்ற நிலமற்ற விவசாயிகள் எல்லாம் வாழ்க்கையில் உயர வேண்டுமென்கின்ற நோக்கத்தின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் தொகுதியில் தற்போது விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பகுதியில் எதிர்காலத்தில் அதிகமாக கால்நடைகள் வருகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, அங்கே கால்நடைகள் அதிகமாகும்போது, கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமையும் முக்கியத்துவமும் வாய்ந்த எங்கள் மன்னார்குடி தொகுதியில், தென்பரை ஊராட்சியில், கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். இந்தப் பகுதியில் ஏறத்தாழ 30,000 கால்நடைகள் உள்ளன. தற்போது அந்தப் பகுதியிலுள்ள மக்கள், தங்கள் கால்நடைகளை 5 கிலோ மீட்டர் தூரம் உள்ள திருமக்கோட்டை அல்லது பைங்காநாட்டிற்கு எடுத்துச்செல்ல வேண்டிய நிலையுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு கால்நடை மருத்துவமனை அமைக்க முன் வந்தால், அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனைக் கட்டடம் அமைப்பதற்கான நிதியை ஒதுக்கவும் நான் தயாராக இருக்கிறேன் என்று இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். மேலும், ஏற்கெனவே எடகீழையூர் கிராமத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிளை மருத்துவமனையை அமைத்துத் தருகிறேன் என்று தெரிவித்திருக்கின்றார். அது குறித்து ஏதேனும் விவரம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.*



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமம் கால்நடைத் துறையினுடைய விதிகளுக்குட்பட்டிருக்கும் என்று சொன்னால், அங்கே ஒரு கிளை கால்நடை மருத்துவமனையை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஒரு கால்நடைக் கிளை மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வரும் நிதியாண்டில் கால்நடைக் கிளை மருத்துவமனைகள் அமைக்க நிதி ஒதுக்கப்படும்போது அங்கே கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**56—**

### பஞ்சாலை

***34770—திரு. இ. சுப்பையா:**

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2013 அக்டோபர் 29

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் தொகுதியில் பஞ்சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

**திரு. இ. சுப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்மை, வாய்மை, நேர்மை இவற்றின் முழு வடிவமாகத் திகழும் எங்கள் தாய், தொண்டனுக்கு பரிபூரணத்தை நாளும் வழங்கிடும் எங்களின் அட்சயபாத்திரம், கோடானுகோடி தமிழர்களுக்கு காலம் தந்த கொடையாய் விளங்கும் எங்களின் அன்புத் தெய்வம், எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தற்போது பஞ்சாலை அமைக்க இயலாது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருப்பினும், அம்பாசமுத்திரம் தொகுதியில் 6,000 தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வந்த Madura Coats என்ற தனியார் நிறுவனம், தற்போது சுமார் 1,000 தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. ஆகவே, பஞ்சாலைத் தொழிலாளர்கள் அதிகளவில் உள்ள அம்பாசமுத்திரம் தொகுதியில் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கருணைப் பார்வைக்குக் கொண்டு சென்று, அம்பாசமுத்திரம் தொகுதியில் பஞ்சாலை அமைக்க ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் நூற்பாலைகள் அதிகம் உள்ள மாநிலம் தமிழகம் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக்



2013 அக்டோபர் 29]

கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவில் நூல் உற்பத்தியில் 46.78 விழுக்காடு தமிழகத்தில் உற்பத்தி செய்து, ஏற்றுமதியும் செய்யப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வந்தன. பல்வேறு காரணங்களால் கடந்த காலங்களில் 13 கூட்டுறவு நூற்பாலைகளை மூடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் இந்த அரசுக்கு 486 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு, மூடப்பட்டன. ஓடிக்கொண்டிருக்கும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளும் இதுவரை 132 கோடி ரூபாய் நட்டத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அந்த நூற்பாலைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 22 ஆண்டுகளுக்குப் பின்பு, கடந்த 2012–2013 ஆம் ஆண்டில் 4 கோடியே 72 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளன என்பதையும், இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு ஒரு சாதனை என்பதையும் இங்கே எடுத்துக் கூறி (மேசையைத் தட்டும் ஒலி), வரக்கூடிய காலங்களில்,. . .

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** இந்த நூற்பாலைகளை நவீனப்படுத்துவதன்மூலம் நூலின் தரத்தைக் கூட்டவும், உற்பத்தியைப் பெருக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் 104.41 கோடி ரூபாயை இந்த 5 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் வழங்கியுள்ளார்கள். கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நிதி வழங்கி இலாபத்தை ஈட்டுகின்றபோது அந்தத் தொகுதியிலுள்ள மக்களின் நலன் கருதி மாண்புமிகு அம்மா அவர்களிடம் எடுத்துக்கூறி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

**திரு. இ. சுப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புண்ணியத்தின் பிறப்பு, புரட்சியின் புறப்பாடு, கருணையின் வெளிப்பாடு, துணிவின் தோற்றம், மனித சக்தியைக் கடந்த மகா

[2013 அக்டோபர் 29

சக்தி மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்குக் கொண்டு சென்று, நலிந்த பஞ்சாலைகளைச் சரிசெய்யவும், நிதிநிலையையும் சரி செய்யவும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி எனது சார்பாகவும், அம்பாசமுத்திரம் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**57—**

## பேருந்து வசதி

*__22129—திரு. க. பாலகிருஷ்ணன்:__

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து சேலம் வழியாக கோயம்புத்தூருக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து சேலத்திற்கு நாளொன்றுக்கு 26 பேருந்துகள்மூலம் 55 நடைகளும், சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்கு 77 பேருந்துகள்மூலம் 165 நடைகளும், குறுகிய நேர இடைவெளியில் இயக்கப்பட்டு வருகின்றன. சிதம்பரத்திலிருந்து சேலம் வழியாக கோயம்புத்தூர் செல்ல போதிய பேருந்து வசதிகள் உள்ளன. சிதம்பரம் தொகுதியில் இரண்டு ஆண்டுகளில் 20 புதிய வழித்தடப் பேருந்துகளைத் தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிதம்பரத்திலிருந்து சேலம் வழியாக கோயம்புத்தூருக்கு நேரடிப் பேருந்து இயக்க



2013 அக்டோபர் 29]

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சிதம்பரத்திலே இருந்து சேலத்திற்கு அதிகமான பேருந்துகளும், சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்கு அதிகமான பேருந்துகளும் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். சிதம்பரம் ஓர் ஆன்மீக நகரம். சுற்றுலா நகரம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே 40,000 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கோவை ஒரு சிறந்த தொழில் நகரமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே, சிதம்பரத்திலிருந்து மற்ற முக்கிய நகரங்களுக்கெல்லாம் நேரடியாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால், கோயம்புத்தூர் என்கிற தொழில் நகரத்திற்கு நேரடியாகப் பேருந்து இயக்கப்படவில்லை. எனவே, சிதம்பரத்திலிருந்து சேலத்திற்குச் சென்று, சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்வதைவிட சிதம்பரத்திலிருந்து நேரடியாகவே கோயம்புத்தூர் செல்வதற்கு வெகுவிரைவிலே பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் தொகுதி மக்களுடைய நலன் கருதி இரண்டு ஆண்டுகளில் 20 புதிய வழித்தடப் பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியவாறு சிதம்பரத்திலிருந்து நேரடியாக கோயம்புத்தூருக்கு பேருந்து இயக்க மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூருக்கு பேருந்து விரைவிலே இயக்கப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

**திரு. எஸ். செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழக்குறிச்சி ஊராட்சி, நத்தமாடிப்பட்டியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வந்து செல்ல பொதுமக்களுக்கு குறித்த நேரத்தில் காலை 7 மணி, மதியம் ஒன்றரை மணி, மாலை ஏழரை மணி ஆகிய நேரங்களில் சுப்ரமணியபுரம், பொன்மலைப்பட்டி வழியாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய வழித்தடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியில் இருந்து பூண்டி, புள்ளம்பாடி வழியாக கல்லக்குடிக்கும், அதேபோன்று, அரியலூரில் இருந்து கல்லகம், மால்வாய், திரணிப்பாளையம் வழியாக பாடாலூருக்கும், திருச்சியிலிருந்து சமயபுரம், புரதாக்குடி, கண்ணாக்குடி, தாப்பாய், கல்லக்குடி வழியாக அரியலூருக்கும், அதேபோன்று திருச்சி, புள்ளம்பாடி, தாப்பாய் வழியாக கருடமங்கலத்திற்கும் கலைஞருடைய கடந்த ஆட்சிக்காலத்தில் . . .



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி சிதம்பரம் வழித்தடத்தைப் பற்றியது. நீங்கள் அதையொட்டி கேள்வி கேளுங்கள். தமிழ்நாடு முழுவதற்கும் கேட்காதீர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

*முற்பகல் 11–05*

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** கலைஞருடைய கடந்த ஆட்சிக் காலத்தில் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. ** பொது மக்களின் நலன் கருதி அந்த வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்கிவைக்க. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலுள்ள குளச்சல் பகுதியிலிருந்து வேளாங்கண்ணிக்கு அநேக மக்கள் சென்று வருகிறார்கள். அந்தப் பகுதி மக்கள் அந்தப் புண்ணியத் தலத்திற்கு எளிதில் சென்று வருவதற்குப் பேருந்து வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேரடியாகச் சென்று பணிமனைவாரியாக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களோடு சேர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, எந்தெந்த வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்கின்ற தேவைகளை கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகச் சிறப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவோடு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. முந்தைய மைனாரிட்டி

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 அக்டோபர் 29

*திமுக. ஆட்சியில் இயக்கப்பட்ட மொத்த இயக்கப் பேருந்துகளுடைய எண்ணிக்கை 19,110. இந்த இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள், அடித்தட்டு மக்கள், அனைத்துப் பகுதி மக்களும் சீரான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு இன்று இயக்கப்படுகின்ற இயக்கப் பேருந்துகளுடைய எண்ணிக்கை, 20,584. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் எங்கெல்லாம் பேருந்து வசதி தேவையோ அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்தப் பகுதிகள் படிப்படியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்த வழித்தடங்களிலும் ஆய்வு செய்யப்பட்டு, பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**58—**

### வீட்டுமனைப் பட்டா

***19873—திரு. மு. ராஜநாயகம்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி தொகுதியில் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*



2013 அக்டோபர் 29]

*(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசு இலக்கு நிர்ணயம் செய்தவாறு 400 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் கிராமங்களில் உள்ள தகுதியான புறம்போக்கு நிலங்கள் ஆய்வு செய்யப்பட்டு சொந்த வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

**திரு. மு. ராஜநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறம் தாங்கி ஆட்சி செய்யும் அன்னையின் அருள் திருவடிகளைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால மைனாரிட்டி ஆட்சியிலே மக்களெல்லாம் வருவாய், வருவாய், எப்பொழுது பட்டா தருவாய், தருவாய் என்று காத்துக் கிடந்து, கண்ணீர் மல்கிய காலங்கள் மாறி, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் வருவாய்த் துறையினரே மக்களை நாடி, தேடிச் சென்று பட்டா பெறுவாய், பெறுவாய் என்பது மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறையின் மூலமாக மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்துத் திட்டங்களும் பெருமைக்குரிய அம்மா திட்டத்தின் மூலமாக மக்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதை இந்த அவையிலே நான் பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தாய் குழந்தையின் பசி அறிந்து, அதைப் பூர்த்தி செய்வது போன்று இந்த அவையிலே நான் கேள்வி கேட்டு, அதற்கு பதில் வருவதற்கு முன்பாகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, அறந்தாங்கித் தொகுதி மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்து, அங்கே மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதற்காக, இந்த நல்ல

[2013 அக்டோபர் 29

*நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய தன்னிகரில்லா முதல்வரும், உலகத் தமிழர்களுடைய ஒப்பற்றத் தலைவியும், எங்களை வாழவைக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களை என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் காணிக்கையாக்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், அறந்தாங்கி தொகுதியிலே நீர்நிலைப் புறம்போக்கிலே குடியிருக்கின்ற பொதுமக்களுக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே அரசுப் புறம்போக்கு நிலங்களைக் கண்டறிந்து, வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பதில் சொல்கின்ற வேளையிலே, புரட்சித் தலைவர் அவர்களுடைய பாடல் வரிகளை இங்கே ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். 'அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி, அதன் அருகினில் ஓலை குடிசை கட்டி, பொன்னான உலகென்று பெயரும் வைத்தால் இந்த பூமி சிரிக்கும், அந்த சாமி சிரிக்கும்' என்றார் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள். ஏழையெளிய மக்கள் குடிசையிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று வேதனையோடு பாடுகிறார்கள் ஒரு படத்திலே. அந்த வேதனைகளையெல்லாம் இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதனைகளாக்கி சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பொற்கால ஆட்சியில் வீடில்லாத ஏழையெளிய மக்களுக்கெல்லாம் வருடம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் காலத்திலே மக்களுக்குத் தந்த வாக்குறுதியின் அடிப்படையிலே, அந்த வாக்குறுதிகளையும் மிஞ்சுகின்ற வகையிலே, இந்த 2 ஆண்டு காலத்திலே மட்டும் 4,50,000 வீட்டுமனைப் பட்டாக்களை*



2013 அக்டோபர் 29]

*ஏழையெளிய மக்களுக்குத் தாயுள்ளத்தோடு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்பட்ட அந்தக் காலியிடங்களில் பசுமை வீடுகளையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வாழ்வாதாரத்திற்காக விலையில்லா ஆடுகளையும், கறவை மாடுகளையும் தந்து, வயதான காலத்திலே மாதம் ஆயிரம் ரூபாய் பெறக்கூடிய ஓய்வூதியத் திட்டம் தந்து, கடைக்கோடியிலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களையும் காக்கும் அரசாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி தொகுதியில் கடந்த 2 ஆண்டுகளில் 1,389 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், கிராமங்களில் உள்ள தகுதியான புறம்போக்கு நிலங்கள் ஆய்வு செய்யப்பட்டு, சொந்த வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.*

*நீர்நிலைப் புறம்போக்கிலே வாழக்கூடிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். நீர்நிலைப் புறம்போக்கிலே வாழக்கூடிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக்கூடிய உத்தரவிற்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தடையாணை இருக்கின்ற காரணத்தினாலே, நீர்நிலைப் புறம்போக்கிலே இப்போது வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. அதற்கு மாற்றாக, தகுதியான மாற்று இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியுள்ள நபர்கள் அத்தனை பேருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பட்டா வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்திய நாட்டைப் பொறுத்தவரையிலே, மூன்று புறமும் கடல் சார்ந்த பகுதி. ஒரு புறம் மலை சார்ந்த பகுதி. இடையிலே இருக்கின்ற*

[2013 அக்டோபர் 29

பகுதிகளைப் பிரித்துதான் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பட்டா வழங்கியாகவேண்டும். ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், இருக்கின்ற இடங்களில் 2 ஏக்கர் நிலம் தருவேன் என்று சொல்லித் தகுதியில்லாதவர்களுக்கும், தன்னுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்கிற நிலங்களை எல்லாம் வாரி வழங்கிச் சென்றுவிட்டார்கள். (குறுக்கீடுகள்) ஆக, இந்த அடிப்படையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குற்றச்சாட்டு இல்லை. கடந்த அரசாங்கத்தினுடைய நிலைப்பாட்டைத்தான் அவர் சொல்கின்றார். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது கடந்த அரசாங்கத்தினுடைய நிலைப்பாடுதான். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2 ஏக்கர் நிலம் தருவதாகப் பொய்யான வாக்குறுதியை மக்களுக்குச் சொல்லி தன்னுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அந்த இடத்தை வாரி வழங்கிச் சென்றுவிட்டார்கள். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே கடைக்கோடியிலே வாழக்கூடிய மக்களுக்கும் 'குருவிக்குகூட கூடு இருக்கிறது. மனிதா, உனக்கு கூடு இல்லையா, உனக்கு வாழ்வதற்கு இடம் இல்லையா' என்று சொல்வதைப் போல, அம்மா அவர்கள், கடைக்கோடியிலே வாழக்கூடிய மக்களுக்கும் வீட்டுமனை வழங்கவேண்டுமென்று சொல்லி, கிராமப் பகுதிகளிலே வாழக்கூடிய மக்களுக்கு 3 சென்ட் இடத்தை தன்னுடைய அரசு கட்டாயம் வழங்கும் என்ற அடிப்படையிலே, 2 ஆண்டுகளில் 4,50,000 வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி, வருவாய்த் துறையினுடைய வரலாற்றிலேயே சாதனை படைக்கின்ற அரசாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக்கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.



2013 அக்டோபர் 29]

முற்பகல் 11–15

**திரு. மு. ராஜநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென்று இல்லாமல், தமிழக மக்களுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, இந்த அவையிலே அறந்தாங்கி தொகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஆணை பிறப்பித்த அம்மா அவர்களுக்கு என் ஆயுட்காலம் முழுவதும் என்னுடைய நன்றியையும், தொகுதி மக்களுடைய சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளையும் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**59—**

### கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

***4265—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருநீலக்குடி ஊராட்சியில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமவெளிப் பகுதியில் 30 ஆயிரம் மக்கள் தொகையும் மற்றும் 8 கிலோ மீட்டர் தொலைவில் வேறு அரசு மருத்துவமனையும் இல்லாத கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கலாம் என்ற அடிப்படையில், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக் கோரும் திருநீலக்குடி கிராமம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. இதே திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே முருக்கங்குடி, திருநாகேஸ்வரம், வேப்பத்தூர் ஆகிய 3 இடங்களில்

[2013 அக்டோபர் 29

ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. திருநீலக்குடி கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் திருவிடைமருதூர் அரசு வட்ட மருத்துவமனையும், 4 கிலோ மீட்டர் தூரத்தில் ஆடுதுறை அரசு வட்டம் சாரா மருத்துவமனையும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் திருநாகேஸ்வரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளன. இக்கிராமத்தின் மக்கள்தொகை 5,025 ஆகும். எனவே இங்கு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருநீலக்குடி ஊராட்சியில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும், அதனையொட்டி இருக்கக்கூடிய ஊராட்சியான விட்டலூர், எஸ். புதூர், ஆண்டலாம்பேட்டை ஆகிய ஊராட்சிகளில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் வாழ்கிறார்கள். கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கோரியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இருந்தால் அமைக்கப்படும். அருகருகே மருத்துவமனை இருக்கிறது என்று குறிப்பிட்டு, நான் கேட்டிருக்கக்கூடிய திருநீலக்குடி கிராமம் 8 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது என்ற பதிலையும் தந்திருக்கிறார்கள். எனவே, 8 கிலோ மீட்டர் தூரமுடைய அந்த திருநீலக்குடி கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறத்தில் பரவக்கூடிய சிக்கன்குன்யா, நிமோனியா, மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்படும் கிராமப்புற பாதுகாப்பற்ற மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் சுகாதார நிலையத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறக்கூடிய திருநீலக்குடி கிராமமானது 5,025 மக்கள்தொகை கொண்ட கிராமம். இந்தக் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் (sub-centre) சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் 30 துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துணை சுகாதார நிலையத்திலும் ஒரு கிராம சுகாதார செவிலியர் பணிபுரிகிறார். திருநீலக்குடி கிராமத்திலும் ஒரு துணை சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதோடு, அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்களின் சுகாதாரத் தேவையைக் கருத்தில் கொண்டு உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, புதிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநீலக்குடி ஊராட்சிக்கு ஆராம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு இடம் இருக்கிறது. ஊராட்சியில் தீர்மானமும் போட்டிருக்கிறார்கள். சமீபத்தில் கட்டடமும் கட்டப்பட்டு இருக்கிறது. எனவே, நிதிச் சுமை இல்லாத நிலையில் உடனடியாக அங்கே கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவங்குவார்களா என அறிய விரும்புகிறேன். அதோடு அதற்குரிய கட்டடமும் வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கித் தரவும் நான் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது கட்சிப் பாகுபாடு பார்க்காமல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடுமையாக முழுமையாக உழைக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதை நிரூபித்துத் தருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

[2013 அக்டோபர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கிராமத்தின் மக்கள் தொகை 5,025. ஆகவே, இக்கிராமத்தில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திய காரணத்தினால் துறையின் சார்பாக ஆய்வு செய்து, ஆய்வறிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**60—**

### மாணவர் விடுதி

***17291—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சாத்தூர் தொகுதி, சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக புதிய மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம், எனில் எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைக்கோடித் தொண்டர்களின் கழகப் பணியைக் கனிவுடன் பரிசீலித்து அவர்களை வளர்த்து, ஆளாக்கி, அழகு பார்த்து, அருளாசி வழங்கி, அங்கீகாரம் வழங்கும் எங்கள் வாழ்வின் ஆதாரமே, ஆலமர விருட்சமாக கழகப் பணியையும், ஆட்சிப் பணியையும் வளர்க்கத் தன்னை வருத்திக்கொண்டு ஓயாமல் உழைக்கும் எங்கள் நீரோட்டமே (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் என்று இஸ்லாமிய மக்களை ஏமாற்றும் எத்தர்களின் மத்தியில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்கு உயர்வு தந்து, பாதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களுக்கு வாழ்வு தந்து எங்களின் பாதுகாப்பு அரணாக விளங்கும் இறை தந்த எங்கள் கொடையே! (மேசையைத் தட்டும் ஒலி) எளிய தொண்டனாகிய என்னை ஆவடி சட்டமன்ற உறுப்பினராக்கி, ஒரு சாதாரண தொண்டனான என்னை சரித்திரத் தலைவியின் தலைமையின்கீழ் உள்ள மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்று வருணிக்கப்படும் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தங்களின் அமைச்சரவையிலே பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சராக்கிய தங்களின் தாயுள்ளத்திற்குத் தங்கள் மலர் பாதம் தொட்டு என்னுடைய வணக்கத்தை நன்றியோடு தெரிவித்துக்கொண்டு, எனது வாழ்நாள் முழுவதும் எனது செயல்பாடுகளால் தங்களின் மக்கள் சேவைக்கு உறு துணையாக இருப்பேன் என்ற உறுதியைத் தந்து இந்த வினாவிற்கு பதிலை இந்த அவையில் தெரிவிப்பதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2013 அக்டோபர் 29]

*முற்பகல் 11–20*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சாத்தூர் தொகுதிக்குட்பட்ட சாத்தூர் ஒன்றியத்தில் பிற்பட்டோர் நலத் துறை சார்பில் புதியதாக விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா என்று கோரியுள்ளார்கள். கேட்காமலே கொடுக்கும் கருணையுள்ளம் கொண்ட கருணைத்தாய் கொடைவள்ளல் இன்றைய தமிழகம், (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாத்தூர் தொகுதிக்குட்பட்ட சாத்தூர் ஒன்றியத்தில் இயங்கி வரும் சாத்தூர் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஆகியவற்றுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண்77, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்*

[2013 அக்டோபர் 29

*சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 15–6–2012–ல் ஆணையிட்டுள்ளார்கள். தற்போது, இதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் ரூ.125.66 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து"*

*ஒருவர் ஒரு பிறப்பிலே கற்கின்ற கல்வியானது அப்பிறப்பில் மட்டுமல்லாது தொடர்ந்து வரக்கூடிய ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பு அளிக்குமென்ற தெய்வப் புலவர் வள்ளுவனின் குறளுக்கு உயிர் கொடுக்கின்ற வகையிலே இப்பிறப்புக்கு மட்டுமன்றி ஏழேழு பிறவிகளுக்கும் பயன் தரக் கூடிய தரமான கல்வியைத் தடையின்றி ஏழைஎளிய மாணவ மாணவியருக்கு வழங்கி காலங்காலமாக, கேள்விக்குறியாகத் தலைகுனிந்து நின்றிருந்த இளைய சமுதாயத்தை கல்விப் புரட்சியினால் ஆச்சரியக்குறியாகத் தலைநிமிர வைத்திருக்கிற கலைமகளே, கல்விக்கடலே அம்மா, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சாத்தூர் தொகுதிக்குட்பட்ட சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மாணவ மாணவியர் நலன் காத்திட, புதிய மாணவ மாணவியர் விடுதி வேண்டுமென்ற கோரிக்கை வைத்து அந்தக் கோரிக்கை, இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன்னரே நிறைவேற்றித் தந்திருக்கின்ற வானத்து மின்னலைவிட விரைவாக நாட்டுமக்களின் கோரிக்கையைக் கனிவோடு நிறைவேற்றி வருகின்ற, சாதனை சரித்திரம் படைத்து வருகின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) இளைய சமுதாயத்தின் ஒரே பாதுகாவலர் இந்தியத் திருநாட்டின் ஒரே வழிகாட்டி, வாழும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி*



2013 அக்டோபர் 29]

*நன்றி மலர்களை இளைய சமுதாயத்தின் சார்பிலே காணிக்கையாக்கி, வணங்கி அமைகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, அதற்கெல்லாம் அனுமதி இல்லை. நீங்கள் திடீரென்று வந்து பேசக்கூடாது. இதுமாதிரி திடீரென்று வந்து கேட்கக்கூடாது. அனுமதி வாங்கிக்கொண்டுதான் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னை மாநகரில் விடியற்காலை 4 மணி அளவில். . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *இல்லை, இதையெல்லாம், அறிவிப்புக் கொடுக்காமல் திடீரென்று எழுப்பினால் அனுமதிக்கமுடியாது. அதற்கு அரசாங்கத்திடமிருந்து பதில் வர வேண்டும். திடீரென்று கேட்கக் கூடாது, உட்காருங்கள். அதற்கு முறையான அறிவிப்புக் கொடுங்கள். முறையாக அறிவிப்புக் கொடுத்தால் அரசாங்கத்திடம் பதில் வாங்கி, பிறகு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள், திடீரென்று இப்படியெல்லாம் கேட்க முடியாது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதற்கெல்லாம் அரசாங்கத்திடமிருந்து பதில் வர வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் எழுதிக் கொடுங்கள். அரசாங்கத்திடமிருந்து அறிக்கை கேட்டு வாங்கித் தருகிறேன். (குறுக்கீடுகள்) இதைவிட எனக்கு வேறு அலுவல் இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். முக்கியமான பிரச்சினைகளை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–25*

## 3. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் மீதான உரிமை மீறல் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதில், 25–10–2013 மற்றும் 28–10–2013 ஆம் நாட்களில் அவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளியில் சென்று உண்மைக்குப் புறம்பாக பேட்டி அளித்தது அவை உரிமை மீறல் செயலாக இருப்பதால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேலும், அந்த அறிவிப்பில் "கேவலம், பஸ் கண்டக்டர்" என்று தான் கூறாத வார்த்தையை கூறியதாக உண்மைக்கு மாறாகப் பேட்டி அளித்ததுடன், உறுப்பினர்கள் பேரவையில் உரையாற்ற வாய்ப்பளிக்கும் பேரவைத் தலைவரின் தனிப்பட்ட உரிமையை உள்நோக்கம் கற்பித்து கொச்சைப்படுத்தும்வகையிலும், அவைக்கு ஒவ்வாத சொற்கள் பயன்படுத்தப்படவில்லை என்று ஏற்கெனவே பேரவைத் தலைவர் தீர்ப்பளித்த பிறகு, அதனைக் கேள்வி கேட்கும்வகையிலும், தி.மு.க. உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் ஆகியோர் பேட்டி அளித்திருப்பது, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது உரிமையையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் உரிமையையும், ஒட்டுமொத்தமாக இப்பேரவையின் உரிமையையும் மீறிய செயலாக உள்ளதால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதில் மேலெழுந்தவாரியாக, உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், இதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காகப் பேரவை விதி 226–ன்கீழ் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடுகள்)



## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு மற்றும் கூலி நிர்ணயம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 100 நாள் வேலை மற்றும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஏ. லாசர், திரு. பீம்ராவ் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. வே. பொன்னுப்பாண்டி ஆகியோரும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரெங்கராஜன், திரு. ஜேஜி. பிரின்ஸ் ஆகியோரும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும் சட்டப் பேரவை விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளவர்களில் கட்சிக்கு ஒருவர் என்கிற முறையில் சுருக்கமாக மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

முதலில் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 நாள் வேலை திட்டப் பணிகள் குறித்து தமிழக அரசினுடைய மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்தையும் ஈர்ப்பதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். தமிழகத்தில் பல இலட்சக்கணக்கான கிராமப்புற உழைப்பாளிகளுக்குப் பலன்தரத் தகுந்த திட்டம் இந்தத் திட்டம். இந்தத் திட்டத்தை 2006 இல் தமிழகத்தில்

[திரு. ஏ. லாசர்] [2013 அக்டோபர் 29

அறிமுகப்படுத்துகின்றபோது, இந்தத் திட்டத்தை வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் அறிமுகப்படுத்துவதில் முறையான கவனம் செலுத்தப்படவில்லை. அதனுடைய விளைவாக வேலையின் அளவை அளந்து, வேலை முடிந்தபின் குறித்த கூலியைத் தீர்மானித்து ஜாப் கார்டில் கொடுக்கக்கூடிய நடைமுறை இல்லாததனால், பஞ்சாயத்துகளில் அவரவர் நினைத்த கூலியைக் கொடுப்பது என்கிற முறையில் இது துவக்க காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக அந்த நல்ல திட்டம் பற்றி ஒரு தவறான அறிமுகம் தமிழகத்தில் ஏற்பட்டுவிட்டது. இப்போது அதன் அளவான 57 கன அடியைக் குறைக்க வேண்டுமென்கிற நீண்டநாள் கோரிக்கையை தமிழக அரசு ஏற்று 42 கன அடியாகக் குறைத்திருக்கிறது. இப்போதும் 42 கன அடி என்பதை ஒரு சாதாரண பெண் தொழிலாளியால் செய்ய முடியாது. கடினமான, வறட்சியான காலத்தில் பெண்ணால் கடப்பாறையால் மண்ணைக் குத்தி, மண்வெட்டியால் இரண்டு டன் மண்ணை வெட்டி எடுத்து அப்புறப்படுத்துவது என்பது சாதாரண காரியம் அல்ல. அதற்கு 148 ரூபாய் கூலி என்று இப்போது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கூலியும் அவர்களுக்குப் பெரும்பகுதியான இடங்களில் கிடைக்கவில்லை. இந்த 42 கன அடியை 24 கன அடியாகக் குறைக்க வேண்டுமென்பது எங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு. அதுதான் ஒரு பெண்ணுக்கு சாத்தியமானது. ஆண்கள் கூலி 148 ரூபாயாக இருப்பதனால் வர மறுக்கிறார்கள். எனவே, கடந்த 2009 தமிழக அரசின் குறைந்தபட்ச கூலிச் சட்டம் என்பதை தமிழ்நாட்டில் மாற்றி அதை இன்றைய விலைவாசி உயர்வுக்கேற்ப 300 ரூபாய் என்று அறிவித்தால் ஆண்களையும், பெண்களையும் இணைக்கின்றபோது, வேலைகளை காலையில் அளந்து கொடுத்து, மாலையில் அந்த வேலையை அளந்து எடுத்து ஜாப் கார்டில் கொடுத்தால் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் இலட்சக்கணக்கான மக்களுக்குச் சென்று சேரும்.

இப்போதுகூட 19–9–2013–ல் மத்திய அரசு இந்தக் கூலிச் சட்டத்தைத் திருத்தி B-Class மாவட்டங்களுக்கு ரூ.184 என்றும், C-Class மாவட்டங்களுக்கு ரூ.182 என்றும் கூலியைத் தீர்மானித்து இப்போது அரசாங்க உத்தரவை அனுப்பி இருக்கின்றது. அந்த அடிப்படையில் இன்றைக்கு இதையும் அமல்படுத்த வேண்டுமென்று சொன்னால், அரசுத் தரப்பிலே இந்த முக்கியமான கிராமப்புற



2013 அக்டோபர் 29] [திரு. ஏ. லாசர்]

உழைப்பாளிகளுக்கான திட்டத்தின்மீது அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய இந்தத் திட்டத்தின்மீது உரிய கவனத்தைச் செலுத்துவது அவசியம் இவை, குறித்த தவறான அபிப்பிராயங்கள் இருப்பதையும் மாற்றுவதற்கு இது உதவியாக இருக்கும். எனவே கிராமங்களிலே இதற்கான வங்கிக் கணக்குகள் திறப்பது, ஏழைகளைத் தீர்மானிப்பதற்கு அந்த வேலைத் தளங்களிலே பொறுப்பாளர்களைத் தீர்மானிப்பது அவர்களுடைய ஜாப் கார்டுகளிலே வேலைகளைக் குறிப்பது, இவர்களுடைய கூலியை . . .

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகக் கவனத்தை ஈர்க்க வேண்டும். நீண்ட உரை வேண்டாம். சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல நோக்கத்தோடு இந்தியாவில் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தைத் தமிழகத்தில் அதனுடைய கடந்தகால தவறுகளைக் களைந்து, மக்களுக்குப் பயன் அளிக்கத்தகுந்த விதத்தில் மாற்றி, கவனித்து இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் என்பது இன்றைக்கு மண்வெட்டுகின்ற திட்டம், அதேபோன்று கண்மாய் வெட்டுகின்ற திட்டம். இன்னும் சொல்லப்போனால், 100 நாள் வேலை என்று கிராமப்புறத் தொழிலாளர்களால் கூறப்படுகிறது. இந்தத் திட்டத்தினுடைய முழுமையான பெயர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை

உறுதியளிப்புத் திட்டம் என்பது. இதுகுறித்து கிராமப்புறத் தொழிலாளர்கள் மத்தியிலே எப்படித் தெரியவில்லையோ, அதேபோலதான் இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவமும் இன்றைக்குத் தெரியாமல் இருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது ஆரம்ப காலங்களில் இந்தத் திட்டத்தினுடைய முழுமையான நோக்கங்களை விளக்காததன் விளைவாக, இந்தத் திட்டத்தினுடைய பயன்கள் பயனாளிகளுக்குத் தெரியாததன் விளைவாக, இந்தத் திட்டம் சுருக்கப்பட்டு, திட்டத்தினுடைய முழுமையான பயன்கள் அந்தத் தொழிலாளர்களுக்குத் தெரியாததன் காரணத்தினாலே இந்தத் திட்டம் கிராமப்புறங்களில் மிகவும் கொச்சையாகப் பார்க்கப்படுகின்றது. எனவே, மத்திய அரசினுடைய சமூகத் தணிக்கை கிராமப்புறங்களிலே சென்று 6 மாதங்களுக்கு முன்பு வெட்டப்பட்ட அந்த இடங்களுக்குச் சென்று பார்வையிடுகின்றபோது, சில பஞ்சாயத்துகளில் ரூ.20, ரூ.30, இன்னும் சொல்லப்போனால் ரூ.40 என்கின்ற அளவிற்குக் குறைவாக கூலி நிர்ணயம் செய்து வழங்கப்படுவதால் அது தமிழகத்தில் பல்வேறு மிகப்பெரிய போராட்டங்களுக்கு வழிவகுத்தது. இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய சம்பளமான ரூ.148 முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை. காரணம் இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கின்ற சிற்றூராட்சிகளுக்குச் சென்று பார்ப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களில் போதிய அளவுக்கு ஓவர்சீயர்கள் இல்லாத நிலைமை. 30 பஞ்சாயத்துகள் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களில் 3 ஓவர்சீயர்கள் மட்டும் இருக்கின்றார்கள் என்று சொன்னால், அளந்து பார்த்து அந்தந்த வாரங்களில் சம்பளத்தைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் முறையாக இல்லாததன் விளைவு, இதுபோன்ற காரணங்களினால் சம்பளம் ரூ.148 என்பது வழங்கப்படாமல் இருக்கின்றது. மாவட்டத்திற்கு மாவட்டம் மண்ணின் தன்மை வேறுபடுகின்றது. இன்னும் சொல்லப்போனால், தமிழகத்தில் தொடர்ச்சியாக வறட்சி ஏற்பட்டிருந்த நிலைமையில் அரசு நிர்ணயித்த அளவுக்குத் தொழிலாளர்களால் மண்ணை வெட்டி எடுக்க முடியாத நிலை இருந்தது. இதுபோன்ற நடவடிக்கைகள் காரணமாக முழுமையாக அவர்களுக்கு ரூ.148 சம்பளம் என்பது கிடைக்காமல் இருக்கிறது. இதுபோன்ற குறைபாடுகள் எல்லாம் இருக்கின்றன. இதை நீக்குவதற்கான முயற்சியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச்சென்று செயல்படுத்த வேண்டும் என்று கூறி அரசின் கவனத்தை ஈர்த்து





இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி சார்பாக பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

*முற்பகல் 11–35*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம், அன்புக்குரிய தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், பட்டினியைப் போக்குவதற்கும் ஏழை மக்களுக்குப் பணி கொடுப்பதற்காகவும் இந்தத் திட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்திருக்கின்றது. இந்தத் திட்டத்தை மாநில அரசு ஓரளவு செயல்படுத்தி இருக்கிறது என்று மத்திய அரசும் தமிழக அரசைப் பாராட்டியிருக்கின்றது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் 148 ரூபாய். ஆனால், 148 ரூபாய் ஊதியமாக மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டால்கூட அது சரியாக பயனாளிகளுக்கு வழங்கப்படுவதில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. சில பஞ்சாயத்துகளிலே ரூ.50/–, ரூ.65/–, ரூ.75/–, ரூ.100/– என்று மாறுபட்ட சம்பளம் கொடுக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதை சரியாகக் கண்காணிக்கவில்லை. இந்தப் பணிகள் வழங்குவதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. பணியாளர்கள் தேர்வு செய்வதிலே பிரச்சினை இருக்கிறது. ஆகவே, அதற்குரிய தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டிய கடமையிருக்கிறது. எல்லோருக்கும் சீராகப் பணி வழங்க வேண்டும். சில இடங்களிலே பணிகள் சரியாக நடைபெறவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. கண்காணிப்பு சரியில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. ஆகவே, தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருவது, சரியான பணிகளை வழங்குவதற்கும், ஊதியம் கொடுப்பதற்குமான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தங்களின் மேலான கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

[2013 அக்டோபர் 29

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் நிலவுகின்ற வேலையில்லாத் திண்டாட்டம், கொத்தடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து விடுதலை செய்கின்ற நோக்கத்தோடு ஏறக்குறைய 8 ஆண்டு காலத்திற்கு முன்பு மத்திய அரசால் 100 நாள் வேலைத் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்வாயிலாக இப்பொழுது இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ஏழையெளிய, அடித்தட்டு விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் குறைந்தபட்சம் 100 நாளாவது வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பும், அதன்மூலமாக சிறிய வருவாயை ஈட்டக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அண்மைக்காலமாக தமிழகத்தில் இந்த 100 நாள் வேலைத் திட்டத்தில், வேலைப் பளு ஒருவர், ஒரு நாளைக்கு இத்தனை அடி நீளம், இத்தனை அடி அகலம், இத்தனை அடி ஆழத்திற்கு குழி தோண்ட வேண்டுமென்று வேலையின் அளவை நிர்ணயம் செய்கிறார்கள். குறிப்பாக இந்தப் பணிகளிலே பெண்கள்தான் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை, தென்மேற்குப் பருவமழை இரண்டும் பொய்த்துவிட்ட நிலையில், மண் இறுகியிருக்கக்கூடிய நிலையில், அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவு ஆழத்தைக்கூட அவர்களால் நிச்சயமாகத் தோண்ட இயலாது. இயந்திரங்களால்கூட தோண்ட முடியாது என்ற நிலை இருக்கக்கூடிய சூழ்நிலையில், பெண்களுக்கு அந்த அளவு வேலைப் பளுவை நிர்ணயம் செய்கின்றபோது அவர்களால் அதைச் செய்ய முடியாத காரணத்தினாலே மிகப் பெரிய கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். அதன்காரணமாக சில பகுதிகளில், தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் போன்ற மாவட்டங்களில் 20 ரூபாய்கூட சம்பளம் பெற முடியாத ஒரு மோசமான நிலையிருக்கிறது. ஏற்கெனவே மழை இல்லாத காரணத்தினாலே பாதிப்புக்கு ஆளாகிறார்கள். எனவே, அந்த வேலை பளுவைக் குறைத்து சம்பளம் ரூ.148/–ஐயும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், அதன்மூலமாகத்தான் கிராமப்புற மக்களுடைய வாழ்க்கையிலே ஒரு சில மாற்றங்கள் வருவதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள். விளக்கமாகப் பேச வேண்டாம்; விரிவாக உள்ளே போக வேண்டாம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எனவே, அவர்களுக்கு 148 ரூபாய் சம்பளத்தைக் கொடுப்பதற்கும், வேலை பளுவைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிது காலமாக எதிர்க்கட்சிகளுக்கு எந்த வாய்ப்பும் இல்லாத காரணத்தால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் சில குறைபாடுகளை எதிர்க்கட்சித் தலைவரும், பல்வேறு கட்சி உறுப்பினர்களும் பத்திரிகைகளிலும், இன்று கவன ஈர்ப்பாக இங்கே அவையிலேயும் கொண்டு வந்திருக்கிறார்கள். முதலில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்கள் ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். 2006 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்ட இந்தத் திட்டம் சரியான முறையில் திட்டமிடாத காரணத்தினால், இது குளறுபடியில் அமைந்தது என்று சொன்னார்கள். அது உண்மை. கடந்தகால ஆட்சியில், 2006–2011 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபோது மொத்தமாக உருவாக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு இவர்கள், ஒரு நாளைக்கு 80 ரூபாய் கூலி கொடுத்தார்கள். அடுத்து, 2009 ஆம் ஆண்டில் 100 ரூபாய் கொடுத்தார்கள். ஆக, அந்த 5 ஆண்டுகால ஆட்சியில் 69.25 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு, 5,760 கோடி ரூபாய் ஊதியமாக அந்தள 5 ஆண்டுகால ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்பு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டம் செயலாக்கப்பட வேண்டுமென்று சொன்னாலும் அது மத்திய அரசு திட்டமா, மாநில அரசு திட்டமா என்று பாகுபாடு பார்க்காமல் தனக்கே உரிய தொலைநோக்குப் பார்வை, தனக்கே உரிய சிந்தனையில் எந்தெந்தத் திட்டங்களை முன் நிறுத்தி எடுத்துச் சென்றால் ஏழை மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை ஆய்ந்து உணர்ந்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்தகால ஆட்சியில் 66 கன அடி தோண்டினால்தான் ரூ.100 கூலி என்று நிர்ணயம் செய்யப்பட்டதை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடனேயே ‘66 கன அடி என்பது அதிகம், பெண்கள் வேலை செய்வதால் அது 42 கன அடியாக குறைக்கப்படவேண்டும்’ என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 69.25 கோடி மனித சக்தி நாட்கள் உழைப்பு—அதற்கு ஊதியமாக வழங்கப்பட்டது ரூ.5,760 கோடி ஆகும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக்கொண்ட காரணத்தினால் இந்த இரண்டரை ஆண்டுகால ஆட்சியில் 97.11 கோடி மனித சக்தி உழைப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். அதற்காக ஊதியமாக வழங்கப்பட்ட நிதி ரூ.9,264 கோடி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஐந்து ஆண்டுகால ஆட்சியில் அல்ல. இரண்டரை ஆண்டுகால ஆட்சியில். ஐந்து ஆண்டுகளில் அவர்கள் செய்த பணிகளோடு ஒப்பிடும்போது இரண்டரை ஆண்டுகால ஆட்சியில் 27.86 கோடி மனித சக்தி நாட்கள் கூடுதலாக, இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில், தமிழகத்தில் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மட்டும் இந்த இரண்டரை ஆண்டுகால ஆட்சியில் 5,760 கோடி ரூபாயோடு சேர்த்து, கூடுதலாக ரூ.3,504 கோடி நிதியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, கடந்த கால ஆட்சியோடு ஒப்பிடும்போது ஊதியம் 2 மடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. பணியின் அளவு மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு இந்தத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் ஊழியர்கள் அதிகளவில் ஊதியம் பெறவேண்டும் என்பதற்காக மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் மற்ற பணிகளைப்போல அல்லாது, இந்தத் திட்டத்திற்கு மட்டும் தனியாக ஊரக விலைப்புள்ளிப் பட்டியல் முறையில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அதோடு, மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; '24 கன அடி மண் எடுத்தால் போதும். அதுதான் இன்றைய நிலைமை' என்று சொன்னார்கள். நான்





இங்கே ஒன்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 42 கன அடி என்று சொன்னாலும்கூட பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணியினை இப்பொழுது நாம் ஆரம்பித்திருக்கிறோம். அப்படி பண்ணைக் குட்டைகளை ஆரம்பிக்கின்றபோது ஒரு மீட்டருக்கு ஒரு மீட்டர் என்று அளவு வருகின்ற நேரத்தில், ஒரு மீட்டர் நீளத்தில் ஒரு மீட்டர் ஆழம் என்று வருகின்றபோது, முதல் 1 அடி மண் எடுக்கின்றபோது அதற்கு ஒதுக்கப்படுகின்ற அளவு 42 கன அடியாகும். அடுத்த 1 அடி குறைக்கப்படுகின்றபோது அதற்கு 34 கன அடி இருந்தால் போதும். அதற்கடுத்ததாக ஓர் அடி குறைக்கப்படுகின்றபோது 32 கன அடி இருந்தால் போதும். ஆக, இவற்றை ஒட்டுமொத்தமாக கூட்டுகின்றபோது ஒரு மீட்டர் ஆழம் எடுக்கின்றபோது, 36 கன அடி மண் இருந்தாலே 148 ரூபாய் வழங்கவேண்டுமென்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு, கடந்தகால ஆட்சியில் பணி செய்ய விரும்பும் தொழிலாளர்களுக்கு உபகரணங்கள் ஏதும் வழங்கப்படவில்லை. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பணிக்கு வருகின்ற தொழிலாளர்களுக்குத் தேவையான உபகரணப் பொருட்களுக்கு எங்கே செல்வார்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, அதற்காக சுய உதவிக் குழுக்களிடத்தில் நிதியாதாரத்தை உருவாக்கி, அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்து கிட்டத்திட்ட 26,000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடப்பாரை, மண் வெட்டி, மண் சட்டி போன்ற உபகரணப் பொருட்களை வாரி வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்ல, பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படவேண்டும்; அவர்களுக்கு கூலி கூடுதலாக வரவேண்டும் என்பதற்காக 20 தொழிலாளர்களைக்கொண்ட குழுக்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கு அங்கே இருக்கின்ற பணி தள பொறுப்பாளர்கள் 'இந்த அளவிலே நீங்கள் ஒரு மீட்டருக்கு ஒரு மீட்டர் ஆழம் எடுத்தால் உங்களுக்கு இவ்வளவு கூலி கிடைக்கும்' என்று

அவர்களுக்கு அறிவுரையைச் சொல்லி அதற்கேற்றவாறு பணிகளை வழங்கி, அந்தப் பணிகளை நிறைவேற்றுகின்றபோது ரூ.148/– கூலியை அந்தத் தொழிலாளிகளுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

மேலும், இந்தத் துறையினுடைய மத்திய அமைச்சர் திருமிகு ஜெயராம் ரமேஷ் அவர்கள் டில்லியில் இருக்கின்றபோது ஒரு கருத்தைச் சொல்கிறார். சென்னைக்கு வருகின்றபோது ஒரு கருத்தைச் சொல்கிறார். டில்லியில் நடக்கின்றபோது ஆய்வுக் கூட்டத்திற்கு அனைத்து மாநிலங்களினுடைய செயலாளர்கள் வருகின்றபோது 'நீங்கள் தமிழ்நாட்டிற்குச் சென்று பாருங்கள்' 'இந்தப் பணி தமிழ்நாட்டில் எவ்வளவு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று பாருங்கள்' என்று சொல்கிறார். அதோடுமட்டுமல்ல, வெளி நாட்டிலேயிருந்து வருகின்றவர்களைக்கூட தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கிறார். கடந்த மாதத்திலேகூட, நேபாளத்திலே இருந்து ஒரு குழு வந்தது. அந்தக் குழு தமிழகத்திலே நடைபெறுகின்ற இந்தப் பணிகளை ஆய்வு செய்து, இந்தப் பணி மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று அவர்கள் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மற்ற மாநிலங்களில் நடைபெறும் இந்தப் பணியை மேற்கோள் காட்டுகின்றபோது, தமிழ்நாட்டிலுள்ள அலுவலர்களை, அதிகாரிகளை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பி அவர்களுக்கு இந்தப் பணியை எப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்று, சொல்லி வர வேண்டுமென்று அங்கேயிருந்து உத்தரவு பிறப்பிக்கின்ற மத்திய அமைச்சர், சென்னைக்கு வருகின்றபோது சென்னை மண் வாசனைக்கேற்றவாறு இங்கே அவருடைய மனதே மாறிவிடுகிறது. இங்கே வந்து குறை சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். நான் அவரிடத்திலே ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நான் ஒப்புநோக்குகிறேன். அதாவது தமிழகத்தில். . . (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாகக் கேட்க வேண்டும். நான் ஆதாரத்தோடு பேசிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) ஏன், நான் காங்கிரஸ் அமைச்சரைத்தான் சொல்லுகிறேன். பழைய உறவு





போகவில்லையா? (குறுக்கீடு) ஒதுங்கி வந்துவிட்டீர்களே, பழைய உறவு போகவில்லையா? (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் ஆதாரத்தோடு சொல்லிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) அதை உண்மைக்கு மாறாக என்று மாற்றிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குள்ளே பேசிக்கொள்ளக்கூடாது. எல்லோரும் பேரவைத் தலைவரைப் பார்த்துதான் பேச வேண்டும். உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அவருடைய மாநிலத்தில், அதாவது இந்திய நாட்டினுடைய மொத்த ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களில் 4.46 விழுக்காடு தமிழ்நாட்டிலுள்ள ஊரகப் பகுதிகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கர்நாடகத்திலே 4.51 விழுக்காடு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர் அந்த மாநிலத்துக்குச் சொந்தக்காரர். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 4.46 விழுக்காடு உள்ள தமிழகத்தில் 42.85 கோடி மக்கள் சக்தி உழைப்பை 2013 ஆம் ஆண்டிலே உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், கர்நாடக மாநிலத்தில் 2013 இல் மக்கள் சக்தி உழைப்பு எவ்வளவு என்று சொன்னால், 6.91 கோடி மக்கள் சக்தியுடைய உழைப்புதான் உருவாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே 55 இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். கர்நாடகத்தில் வெறும் 3.53 இலட்சம் தொழிலாளர்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு தமிழகத்திலே இந்தத் திட்டம் மிக நல்ல நிலையிலே ஈடுபாட்டோடு அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூலி உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கூலியை மேலும் உயர்த்துவதற்கு, பணியாற்றுகின்ற தொழிலாளர்களுடைய உழைப்பின் அளவைக் கணக்கிட்டு, அதற்கேற்றவாறு மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா

*அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். எனவே, இந்தியத் துணைக் கண்டத்தில், எந்த நிலையில் எடுத்துக்கொண்டாலும், மனித உழைப்பும் தமிழகத்தில்தான் கூடுதலாக இருக்கின்றது. 42.85 கோடி மனித உழைப்பு நாட்கள். அதேபோல ஓர் ஆண்டுக்கு ஒரு குடும்பத்திற்கு 58 நாட்கள் மனிதர்கள் உழைக்கக்கூடிய வேலைவாய்ப்பைக் கொடுத்தது தமிழகம் மட்டும்தான். மற்ற மாநிலங்களைப் பார்ப்பீர்கள் என்று சொன்னால், ஏன், மேற்கு வங்கத்தில்கூட மொத்தம் 27 நாட்கள்தான் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். தமிழகம் மட்டும்தான் இந்தியாவிலேயே அதிக நாட்கள் வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த மாநிலம் என்பதை இந்த நேரத்திலே இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதேபோல, 148 ரூபாய் கூலி கிடைக்க வேண்டுமென்பதற்காக பணித்தள பொறுப்பாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு, ஒவ்வொரு தொழிலாளியும் எப்படி பணியாற்ற வேண்டுமென்பது அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு 148 ரூபாய் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.*

*மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் 20 ரூபாய் என்று சொன்னார். (குறுக்கீடு) ஆதாரத்தோடு சொல்லுங்கள். ஆதாரத்தோடு சொன்னால், நான் எதற்கு கேட்கிறேன் என்று சொன்னால், குறையாக இல்லை. (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். ஒரேயொரு நிமிடம் நான் பேசி முடிக்கிறேன். குறையாகச் சொல்லவில்லை. எந்தப் பகுதியில், எந்த ஊராட்சியில் இதுபோன்ற நிலைமை இருக்கிறது என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.*

*முற்பகல் 11–50*

*நீங்கள் சொல்வதை நான் குறையாக எடுத்துக்கொள்ளவில்லை. எங்களுடைய கவனத்திற்கு வந்தவரையில், அது இல்லையென்று கருதுகிறோம். உங்கள் கவனத்திற்கு வருகின்றபோது, அதை ஆதாரமாக எடுத்துச்சொல்வீர்களென்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு உதவியாக இருக்கும் என்பதற்காகத்தான் உங்களிடத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.*



*எனவே, இந்தியத் துணைக் கண்டத்திலே எந்தத் திட்டமானாலும், அது மத்திய அரசின் திட்டமானாலும் சரி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உருவாக்கப்பட்ட திட்டமானாலும் சரி, எந்தத் திட்டமானாலும், தமிழகத்திற்கென்று அடியெடுத்து வைக்கின்றபொழுது அதற்கு தனி அழகு வந்துவிடுகின்றது. மைய அரசின் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்மாதிரியான பணிகள் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.*

## 5. கவன ஈர்ப்பு

### மழைக் காலத்தினையொட்டி டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. ஏ. லாசர், திரு. க. பீம்ராவ், திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஜெ. அன்பழகன், முனைவர் கோவி. செழியன், திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. பி.எல். சுந்தரம் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

***திரு. க. பீம்ராவ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மழைக் காலத்தினையொட்டி தமிழகத்தில் டெங்குக் காய்ச்சல் பரவாமல் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 அக்டோபர் 29

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ள கவன ஈர்ப்புத் தொடர்பான விவர அறிக்கை உறுப்பினர்களின் மேஜைகளில் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிக்கை**

வடகிழக்குப் பருவமழை பெய்து வருவதையொட்டி, சென்னை உள்ளிட்டு, தமிழகம் முழுவதும் அரசால் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்பாடுகள் காரணமாக மழைக் காலங்களில் ஏற்படும் அனைத்து வகையான காய்ச்சல்களும் கட்டுப்பாட்டில் உள்ளன. டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் அதன் தாக்கம் குறைவாகவே உள்ளது.

பெரும்பாலான இடங்கள் விரைவாக நகரமயமானதாலும், கொசு உற்பத்தியாகும் இடங்கள் பெருகியதாலும், கொசுவினால் பரவும் டெங்கு காய்ச்சல் இந்திய அளவில் அதிகரித்துக் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு, குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்ட கடையநல்லூர் மற்றும் சங்கரன்கோவில் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் காணப்பட்டது. இதையடுத்து டெங்கு மற்றும் பிறவகையான காய்ச்சல் மற்ற பகுதிகளில் இங்கும் அங்குமாகத் தமிழ்நாடு முழுவதும் கடந்த ஆண்டு ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெங்கு மற்றும் தண்ணீரினால் பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்துவது குறித்து தொடர் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள்.

டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கும், அதை முழுமையாக ஒழிப்பதற்கும் அரசு தீவிரமாகப் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

1. குறும்படம் மற்றும் விளம்பரங்கள் வெளியீடுமூலம் கொசு உற்பத்தியைத் தடுப்பதற்கான மக்களின் பங்கு குறித்தும், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அரசால் வழங்கப்படும் மருத்துவ உதவிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உதவியோடு கொசு உற்பத்தியைத் தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



2013 அக்டோபர் 29] [திரு. கே.சி. வீரமணி]

2. எலிசா முறையில் டெங்கு காய்ச்சலைக் கண்டுபிடிக்கும் சோதனை மையங்கள் 31–ல் இருந்து 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் ஆய்வக பரிசோதனைக்காக நுண்ணுயிரியல் வல்லுநர்கள் (Microbiologists) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

3. டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்கத் தேவையான இரத்த அணுக்கள், பரிசோதனைக் கருவி, மருந்துகள், இரத்தக்கூறுகள் மற்றும் இரத்தம் ஆகியவை போதிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

4. சிறப்பு காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

5. பூச்சியியல் கண்காணிப்பு அறிக்கையின் அடிப்படையில் தக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிவதற்காகவும், அதனை ஒழிப்பதற்காகவும், ஒரு வட்டாரத்திற்கு 10 நபர்கள் சுகாதாரத் துறை மூலமாகவும், 20 நபர்கள் ஊரக வளர்ச்சித் துறை மூலமாகவும், தேவைக்கேற்ப கூடுதல் பணியாளர்கள் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சியில் தற்காலிகமாகப் பணியமர்த்தி கொசு உற்பத்தி இடங்களைக் கண்டறிந்து அழிக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக அரசு கடந்த 2012–2013 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 17.61 கோடி நிதி ஒதுக்கியது. இந்தப் பணிகளை மேற்கொள்ள நடப்பாண்டிற்கு இதுவரை ரூபாய் 7.57 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

7. மேலும் தேவைக்கேற்ப ரூபாய் 20 கோடி வரையில் செலவிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனைப்படி திட்டமிடப்பட்டுள்ளது.

8. கொசு உற்பத்தியைத் தடுக்கத் தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் போதிய அளவில் வழங்கப்படுகின்றன.

9. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்பேரில் இந்திய மருத்துவ முறை, பாரம்பரிய மருந்துகள் நிலவேம்புக் குடிநீர், பப்பாளி இலைச் சாறு மற்றும் மலைவேம்புச் சாறு போன்றவை மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு இயற்கையாகக் குணமடைய ஊக்குவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் காய்ச்சல் நிலைமை நாள்தோறும் கூர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மொத்த மக்கள் தொகையில் ஒரு விழுக்காடு மக்களுக்கு அன்றாடம் காய்ச்சல் ஏற்படுவது வழக்கமான நிகழ்வாகும். இந்த அளவு மழைக் காலங்களில் இரண்டு விழுக்காடாக அதிகரிக்கக்கூடும். இவ்வாறு வரும் காய்ச்சல் அனைத்தையும் டெங்கு காய்ச்சல் என்று கருத முடியாது. அனைத்து மருத்துவமனைகளிலும் எலிசா இரத்தப் பரிசோதனையின் மூலமாக டெங்கு காய்ச்சலை உறுதி செய்யும் வசதி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், விரைவு இரத்தப் பரிசோதனைகளின் மூலமாக டெங்கு காய்ச்சலை உறுதிப்படுத்த இயலாது என்பதும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் நோய் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தவும், புகை மருந்து அடிக்கவும், கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அழிக்கவும் பொது மக்களுக்குத் தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அரசு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி தமிழகம் முழுவதும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் போர்க்கால அடிப்படையில் டெங்கு மற்றும் இதர வகையான காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொசுக்கள்மூலம் பரவும் டெங்கு காய்ச்சலைத் தடுக்கும் வகையில், வீடுகளில் நீர் தேங்காவண்ணம் பார்த்துக் கொள்வது, குடிநீரைக் காய்ச்சிப் பருகுதல், தண்ணீர் சேமிக்கும் பாத்திரங்களில் கொசுக்கள் நுழையாவண்ணம் மூடி வைத்தல் போன்ற கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து மாத்திரை மற்றும் மருந்துகள் போதிய அளவில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்ளன. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் போதிய அளவில் இரத்தம் தயார் நிலையில் உள்ளது.

மேலும், டெங்கு காய்ச்சல் தடுப்புப் பணி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும், கண்காணிக்கவும் மாநில அளவில் அரசுத்





தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு கூடி மழைக் காலங்களில் காய்ச்சலைக் கட்டுப்படுத்த துறைகள் ஒருங்கிணைந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைக் கண்டறிந்தது. இதன்படி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 26–8–2013 அன்று கோரப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகராட்சியால் 30–6–2013 அன்று நடத்தப்பெற்ற டெங்கு விழிப்புணர்வு முகாமில் மாணவ, மாணவிகள், பொது சேவை நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு டெங்கு இல்லா சென்னையாக மாற்ற உறுதிமொழி எடுக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசால் எடுக்கப்பட்ட முயற்சிகளால் மாநிலம் முழுவதும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் சராசரியாக தினமும் 800 என்ற நிலையில் இருந்து, தற்போது 150 ஆகக் குறைந்துள்ளது. இந்நோய் தற்போது முழுக் கட்டுப்பாட்டிலும், கண்காணிப்பிலும் உள்ளது.

சென்னையில், குறிப்பாக வட சென்னை பகுதியில் டெங்கு ** காய்ச்சல் மற்றும் காலரா போன்ற நோய்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பொறுத்தவரை சென்னை மாநகராட்சி, நோய் பரப்பும் கொசுக்களைக் கட்டுப்படுத்துதல், கொசுப் புழு ஒழிப்பு மற்றும் நீரின் தரத்தை ஆய்வு செய்வது போன்ற தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்நடவடிக்கைகளினால் கடந்த வருடம் அக்டோபர் வரை 1,885 ஆக இருந்த மலேரியா நோயின் தாக்கம் 1,573 ஆகக் குறைந்துள்ளது. கடந்த வருடம் அக்டோபர் வரை 110 ஆக இருந்த டெங்கு நோயின் தாக்கம் 11 ஆகக் குறைந்துள்ளது.

வடசென்னை பகுதியில் 920 பணியாளர்கள் கொசுத் தடுப்புப் பணிக்காகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கொசுப் புழுக்கள் மற்றும் கொசுக்கள் உற்பத்தியைக் குறைக்க 113 கைத்தெளிப்பான்களும், கொசுக்களைக் கட்டுப்படுத்த 76 சிறிய புகை பரப்பும் இயந்திரங்களும், 20 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகை பரப்பும் இயந்திரங்களும் களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே.சி. வீரமணி] [2013 அக்டோபர் 29

ஒவ்வொரு வாரமும் 235.38 கிலோ மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால்வாய்களிலும் 7,497 தெருக்களிலும் புகை பரப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 64.14 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கால்வாய்களில் கொசுப் புழு நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது.

நீரினால் பரவும் நோய்களைத் தடுப்பதற்காக ஒவ்வொரு நாளும் குடிதண்ணீரில் குளோரின் அளவு சுகாதார ஆய்வாளர்களால் பரிசோதிக்கப்பட்டு குளோரின் அளவு குறைவான தண்ணீர் வரும் இடங்கள் உடனடியாக சென்னை மாநகரக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்குத் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அவ்விடங்களில் குளோரின் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. கடந்த மாதத்தில் (செப்டம்பர்–2013) வடசென்னையில் உள்ள 22 குடிநீர் வழங்கும் நிலையங்கள், 202 குடிநீர் கொண்டு செல்லும் லாரிகள் மற்றும் 15,906 குடிநீர்க் குழாய்கள் நீரின் குளோரின் அளவிற்காக ஆய்வு செய்யப்பட்டன. மேலும் தரக் குறைவாக உள்ள குடிநீர் பாக்கெட்டுகள் மற்றும் கேன்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகராட்சி, வடசென்னையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் போதுமான அளவில் குளோரின் மாத்திரைகள், மருந்துகள் மற்றும் நோய்த் தடுப்பு உபகரணங்களைத் தயார் நிலையில் வைத்துள்ளது. வடசென்னையில் உள்ள சென்னை மாநகராட்சியின் தொற்றுநோய் மருத்துவமனை போதுமான மருந்துகள் மற்றும் மருத்துவர்களுடன் மழைக் காலத்தில் பரவும் நோய்களுக்குச் சிகிச்சை அளிக்க தயார் நிலையில் உள்ளது. மழைக் காலத்தில் நோய்கள் பரவாமல் தடுக்கவும், நோய்களைக் கட்டுக்குள் கொண்டு வரவும் போதுமான மருத்துவ அலுவலர்களும், துப்புரவு அலுவலர்களும் மற்றும் இதர அலுவலர்களும் உள்ளனர். இவர்கள் அனைவரும் அவசரக் காலங்களில் பணிபுரிய பணிக்கப்பட்டுள்ளனர். இந்நடவடிக்கையின் காரணமாக டெங்கு ** காய்ச்சல் மற்றும் காலரா போன்ற அனைத்து நோய்களும் கட்டுப்பாட்டில் உள்ளன.

எனவே, டெங்கு ** காய்ச்சல் மற்றும் காலரா போன்ற நோய்கள் குறித்து பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை; அதைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவையில் வைக்கப்பட்ட அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சமீபத்தில் பெய்திருக்கக்கூடிய மழை மற்றும் வடிகால் வசதிகள் இல்லாத காரணத்தால், கொசுக்கள் கூடுதலாகப் பண்ணைகளைப்போல் உற்பத்தியாகக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. குறிப்பாக, சென்னை நகரையொட்டிய பகுதிகளில், அது புறநகர் பகுதியானாலும் சரி அல்லது மையப் பகுதியானாலும் சரி, வடிகால் வசதிகள் மிகவும் குறைவாக உள்ளன. எனவே, முறையான வடிகால் வசதிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம். சிறிய, சிறிய பிளாஸ்டிக் கப்புகள் ஆங்காங்கு சிதறிக் கிடக்கக்கூடிய நிலை இருக்கிறது. கொசுக்கள் நன்னீரில்தான் உருவாகக்கூடியதாக இருக்கின்றன. சமூக ஆய்வாளர் திரு. சாய்நாத் அவர்கள் சொல்லும்போதுகூட, இந்தியாவில் எய்ட்ஸ் நோயினால் இறப்பவர்களைவிட கொசுக் கடியினால் ஏற்படும் காய்ச்சலால் இறப்பவர்கள் அதிகம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது நம்முடைய தமிழகத்தில் என்று அல்ல, பொதுவாக இந்தியாவில் இருக்கக்கூடிய சூழ்நிலை. கொசுக்களை ஒழிப்பதன் மூலமாக பல்வேறு நோய்களை ஒழிக்க முடியும். எனவே, கொசுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும், குறிப்பாக ELISA முறையில் நோயைக் கண்டுபிடிப்பதற்கான மையங்களைக் கூடுதலாக்க வேண்டும். அதற்கான Microbiologist–களைக் கூடுதலாக நியமிப்பதன் மூலமாக உடனடியாக நோயின் தன்மையைக் கண்டுபிடித்து, நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக மருத்துவ சேவை அளிக்க முடியும்.

அதேபோல, கடையநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய இரு பகுதிகளிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். எனவே, வரக்கூடிய காலங்கள் மழை மற்றும் வெள்ளக் காலங்கள் என்பதால், தமிழகம் எங்கும் கிராமப் பகுதி முதல் மாநகர் வரை முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள். சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்துவிடுங்கள். கேள்வியை மட்டும்தான் கேட்க வேண்டும்.

**திரு. ஜெ. அன்பழகன்:** பேசலாமா, வேண்டாமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேட்கலாம்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் இன்று ஏற்பட்டிருக்கின்ற அசாதாரணமான சூழ்நிலையில், பல்வேறு நோய்கள் தாக்கி மக்கள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில், மாநகராட்சி செயல்படாததை சுட்டிக்காட்டுவதற்காகத்தான் கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருக்கிறோம். டெங்கு காய்ச்சல், மலேரியா காய்ச்சல் மற்றும் பல்வேறு நோய்கள் மக்களைத் தாக்குகின்றன. மழை பெய்தால், மழை நீரை அப்புறப்படுத்துவதற்கு நேரம் இல்லாத காரணத்தால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு சம்பந்தமாகக் கேள்வியைக் கேளுங்கள் அல்லது அறிக்கையைப் படித்துவிட்டு அந்த அறிக்கையிலிருந்து ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** கேள்வியைத்தான் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்ச்சலில் படுத்திருக்கின்ற நோயாளிகளுக்கு மருத்துவமனையிலுள்ள மருத்துவர்கள் மருத்துவம் செய்கிறார்கள். ஆனால், டெங்கு காய்ச்சல் போன்ற காய்ச்சலால் இறந்துபோனால், ** என்று அறிவிக்கிறார்கள். ஆனால், ** இந்த ஆட்சியிலே நிறைய இருக்கிறது. அமாவாசைக்கும், பவுர்ணமிக்கும்கூட ** வருவதாகத் தெரிகிறது.

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், இப்படியெல்லாம் பேசக் கூடாது. அந்த அறிக்கையிலிருந்து ஒரு கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை தயவு செய்து கேள்வியைக் கேட்கச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினருடைய அறிவெல்லாம் வேறெங்கோ crossஆகி போய்க் கொண்டிருக்கிறது. கேள்விக்கு வரச்சொல்லுங்கள். தேவையில்லாமல், மாநகராட்சி செயல்படவில்லை என்று கூறினால் என்ன அர்த்தம்? அவரை கேள்விக்கு வரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், கேள்வியைக் கேளுங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று எந்த நோயும் இல்லை. (குறுக்கீடு) பொறுங்கள். (குறுக்கீடு) பொறுங்கள். ** நிறைய இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதில் ஆதாரம் இருந்தால், அதனை அவைக் குறிப்பில் ஏற்றலாம். (குறுக்கீடு) இல்லையெனில் அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், கேள்வி கேளுங்கள். ஆதாரம் இல்லாமல் பேசக் கூடாது. (குறுக்கீடு) இல்லை, இல்லை கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையில் ** என்று இருப்பதால், நான் அதைப் பற்றிக் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** ** என்று சொல்கின்ற இந்த அரசாங்கம், ** என்று அறிக்கையிலே தெரிவித்திருக்கிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம், நிறைய உங்களிடம் பேச முடியாது. ஒரேயொரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகின்றேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் கூறிய வார்த்தைகள் அவைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2013 அக்டோபர் 29

குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) இதுபோன்று பேசுவது முறையற்றது. அது, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெங்குக் காய்ச்சல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாமல் எதுவும் பேசியிருந்தால் அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீக்கிவிட்டேன். மாண்புமிகு அமைச்சர் பேசியது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெங்குக் காய்ச்சல் தமிழகமெங்கும் பரவியிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், கிராமங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் தகுந்த சிகிச்சை பெறாமல் இருக்கிறார்கள். எனவே, அதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்பதை நான் கேள்வியாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சல்கள் தமிழ்நாட்டில் பரவி வரக்கூடிய நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 அக்டோபர் 29] [திரு. சு. குணசேகரன்]

பல நடவடிக்கைகள் எடுத்திருப்பதை வரவேற்கிறேன். அதேநேரத்தில், நல்ல தண்ணீர்மூலம் உருவாகும் கொசுக்கள்மூலம் பரவும் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த வேண்டும். தமிழ்நாடு முழுவதும் பரவலாக சின்டெக்ஸ் தொட்டிகளைத் தற்பொழுது அமைத்திருக்கின்றோம். சின்டெக்ஸ் தொட்டிகளில் உடைப்பு ஏற்பட்டிருக்கும் நிலையில் அங்கிருந்தும் கொசுக்கள் டெங்கு காய்ச்சலை பரப்புவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, பழுதடைந்துள்ள சின்டெக்ஸ் தொட்டிகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலேரியா காய்ச்சலைப் பரப்பும் கொசுக்கள் ஏற்கெனவே இந்தியாவில் ஒழிக்கப்பட்ட நிலையில், தற்பொழுது பரவி வருவது ஆபத்தான விஷயம். எனவே, மலேரியா காய்ச்சலைப் பரப்பும் கொசுக்களை ஒழிப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சல்களுக்கு அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைகள் அளித்தாலும்கூட, அதற்கான தனியான வார்டுகள் உருவாக்கி, தொடர் சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், டெங்கு காய்ச்சலைப் பரப்பும் கொசு உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைக்கிறது. அதனால், உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற அச்சத்தில் சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் என எல்லோரும் தனியார் மருத்துவமனைகளுக்கு சிகிச்சை பெற செல்கின்ற நேரத்தில், பல இலட்ச ரூபாய்கள் கட்டணங்களாக செலவழிக்க வேண்டியிருக்கிறது. எனவே, தனியார் மருத்துவமனைகளில் டெங்கு காய்ச்சல் சிகிச்சைக்கான கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவது என்பது பெரிய விஷயமல்ல; குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி, மீண்டும் ஏறிவிடும். ஆனால், அதனை பயமுறுத்தி, அச்சுறுத்தி தனியார் மருத்துவமனைகள் இலட்சக்கணக்கான ரூபாய்களை கட்டணமாக வசூலிக்கிறார்கள். இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என வசூலிக்கிறார்கள். எனவே, அரசு அதில் கவனத்தைச் செலுத்தி, தனியார் மருத்துவமனைகளில், டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதற்கு, அதற்கான கட்டணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சு. குணசேகரன்] [2013 அக்டோபர் 29

கடந்த முறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சித்தா மருத்துவத்தைப் பயன்படுத்தி, பப்பாளி இலைச்சாறு, நிலவேம்புக் கஷாயம் ஆகியவற்றை கிராம மக்களுக்குக் கொடுத்ததால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து டெங்குக் காய்ச்சல் குறைக்கப்பட்டது. அதை தொடர் சிகிச்சையாகக் கொடுக்கலாம். ஏனெனில், பப்பாளி இலைச்சாறு, நிலவேம்புக் கஷாயம் போன்றவை நாம் சாதாரணமாகப் பயன்படுத்தக்கூடியது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலங்களில் அவற்றைப் பள்ளிக் குழந்தைகள் உட்பட அனைவருக்கும் கொடுப்பதன் மூலமாக இந்த நோயை எதிர்க்கக்கூடிய தன்மை இயல்பாகவே அவர்களுடைய உடலில் ஏறும். எனவே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து அதிகப்படுத்தி, டெங்கு, மலேரியா இல்லாத ஒரு மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகிழக்குப் பருவமழை பெய்து வருவதையொட்டி, சென்னை உள்ளிட்ட தமிழகம் முழுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்பாடுகள் காரணமாக மழைக் காலங்களில் ஏற்படும் அனைத்து வகையான காய்ச்சல்களும் கட்டுப்பாட்டில் உள்ளன.

டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளால் அதன் தாக்கம் குறைவாகவே உள்ளது. டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கும், அதை முழுமையாக ஒழிப்பதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி அரசு தீவிரமாகப் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

நண்பகல் 12–00

குறும்படம் மற்றும் விளம்பரங்கள் வெளியீடுமூலம் கொசு உற்பத்தியைத் தடுப்பதற்கான மக்களின் பங்கு குறித்தும், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அரசால் வழங்கப்படும் மருத்துவ உதவிகள், உள்ளாட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் உதவியோடு கொசு உற்பத்தியைத் தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



2013 அக்டோபர் 29] [திரு. கே.சி. வீரமணி]

எலிசா முறையில் டெங்கு காய்ச்சலைக் கண்டுபிடிக்கும் சோதனை மையங்கள் கடந்த காலங்களில் 31 இடங்களில் இருந்தன. தற்போது அது 60ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும், ஆய்வக பரிசோதனைக்காக நுண்ணுயிரியல் வல்லுநர்கள்-Microbiologists பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். டெங்கு காய்ச்சலுக்குச் சிகிச்சை அளிக்கத் தேவையான இரத்த அணுக்கள், பரிசோதனைக் கருவிகள், மருந்துகள், இரத்தக் கூறுகள் மற்றும் இரத்தம் ஆகியவை போதிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களில் 100–ல் ஒருவருக்கு வைரஸ் தாக்கத்தினால் திடீரென இரத்தத் தட்டணுக்கள்–platelets குறையத் தொடங்கி சராசரியாக ஒன்றரை இலட்சத்திற்கும்மேல் இருக்க வேண்டிய இரத்தத் தட்டணுக்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கிறது. இந்த இரத்தத் தட்டணுக்கள் 20,000–க்கும் கீழாக குறையும்போது இரத்தத் தட்டணுக்கள் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த நிலையில், இரத்தத் தட்டணுக்களைச் செலுத்த வேண்டியுள்ளதால் இரத்தத்தை இரத்தப் பகுப்பு நிலையங்களில் தட்டணுக்களை மட்டும் பிரித்தெடுத்துப் பயன்படுத்தப்படுகிறது. Plasma, இரத்த சிவப்பணுக்கள் போன்றவை கூடுதலாக தேவைப்படுவோருக்குப் பயன்படுத்தப்படுகிறது. இரத்தப் பிரிவுகளைப் பிரிப்பதற்கு Blood Component Separator என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது.

சிறப்புக் காய்ச்சல் முகாம்கள் ஆங்காங்கே நடத்தப்பட்டு வருகின்றன. பூச்சியியல் கண்காணிப்பு அறிக்கையின் அடிப்படையில் தக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறியவும், அவற்றை ஒழிப்பதற்காகவும் ஒரு வட்டாரத்திற்கு 10 நபர்கள் சுகாதாரத் துறையின் மூலமாகவும், 20 நபர்கள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகவும், தேவைக்கேற்ப கூடுதல் பணியாளர்களைப் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தற்காலிகமாக பணியமர்த்தி கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அழிக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடந்த 2012–2013 ஆம் ஆண்டிற்கு ரூ.17.61 கோடி நிதி ஒதுக்கியது.

இந்தப் பணிகளை மேற்கொள்ள நடப்பாண்டிற்கு இதுவரை ரூ. 7.57 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தேவைக்கேற்ப ரூ.20 கோடி வரையில் செலவிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்படி திட்டமிடப்பட்டுள்ளது.

கொசு உற்பத்தியைத் தடுக்கத் தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் போதிய அளவிலே வழங்கப்படுகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்பேரில், இந்திய மருத்துவ முறையின் பாரம்பரிய மருந்துகள் நிலவேம்புக் குடிநீர், பப்பாளி இலைச் சாறு மற்றும் மலைவேம்புச் சாறு போன்றவை மருத்துவமனைகளில் தொடர்ந்து வழங்கப்பட்டு இயற்கையாக குணமடைய ஊக்குவிக்கப்படுகிறது.

மொத்த மக்கள் தொகையில் ஒரு விழுக்காடு மக்களுக்கு அன்றாடம் காய்ச்சல் ஏற்படுவது வழக்கமான நிகழ்வாகும். இந்த அளவு மழைக் காலங்களில் இரண்டு விழுக்காடாக அதிகரிக்கக்கூடும். இவ்வாறு வரும் காய்ச்சல் அனைத்தையும் டெங்கு காய்ச்சல் என்று கருத முடியாது. அனைத்து மருத்துவமனைகளிலும் எலிசா இரத்தப் பரிசோதனையின் மூலமாக டெங்கு காய்ச்சலை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், விரைவு இரத்தப் பரிசோதனைகளின் மூலமாக டெங்கு காய்ச்சலை உறுதிப்படுத்த இயலாது என்பதும் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் நோய் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தவும், புகை மருந்து அடிக்கவும், கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அழிக்கவும், பொதுமக்களுக்குத் தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, தமிழகம் முழுவதும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் போர்க்கால அடிப்படையில் டெங்கு மற்றும் இதர வகையான காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக 2,188 பெரிய புகைத் தெளிப்பான்கள், 1,940 சிறிய புகைத் தெளிப்பான்கள், 162 வாகனத்தில் பொருத்தப்பட்ட புகைத் தெளிப்பான்கள் ஆக மொத்தம் 4,290 புகைத் தெளிப்பான்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையிலே, கொசுப் புழுக்கள் மற்றும் கொசுக்கள் உற்பத்தியைக் குறைக்க 332 கைத்



தெளிப்பான்களும், கொசுக்களைக் கட்டுப்படுத்த 523 சிறிய புகை பரப்பும் இயந்திரங்களும், 67 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகை பரப்பும் இயந்திரங்களும் களப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வாரமும் 235.38 கிலோ மீட்டர் நீளமுள்ள மழைநீர்க் கால்வாய்களிலும், 7,497 தெருக்களிலும் புகை பரப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 64.14 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கால்வாய்களில் கொசுப் புழு நாசினி தெளிக்கப்பட்டு வருகிறது. இவை தவிர, நீர்வழிகளில் 8 கட்டுமரங்களைக் கொண்டு, கொசு மற்றும் கொசுப் புழுக்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிற்பகல் 12–05

கொசுக்கள்மூலம் பரவும் டெங்கு காய்ச்சலைத் தடுக்கும் வகையில், வீடுகளில் நீர் தேங்காவண்ணம் பார்த்துக்கொள்வது, குடிநீரைக் காய்ச்சிப் பருகுதல், தண்ணீர் சேமிக்கும் பாத்திரங்களில் கொசுக்கள் நுழையாவண்ணம் மூடி வைத்தல் போன்ற கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து மாத்திரை மற்றும் மருந்துகள் போதிய அளவில் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்ளன. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் போதிய அளவில் இரத்தம் தயார் நிலையில் உள்ளது. போதுமான, பாதுகாப்பான, தரமான இரத்தம் மற்றும் இரத்தக் கூறுகள் நோயாளிகளின் தேவைக்கேற்ப உரிய நேரத்தில் கிடைக்கச் செய்வது இன்றியமையாததாகும். மாநிலத்தில் 274 அரசு அங்கீகாரம் பெற்ற இரத்த வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த இரத்த வங்கிகள் மட்டுமல்லாது, 253 இரத்த சேமிப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இரத்தப் பாதுகாப்பை உறுதி செய்ய, தன்னார்வ இரத்த தானம் ஊக்குவிக்கப்பட்ட 94 விழுக்காடு இரத்தம் தன்னார்வ கொடையாளர்களிடமிருந்து பெறப்படுகிறது. இரத்தப் பயன்பாட்டினை மேலும் திறம்படச் செய்யும்பொருட்டு, இரத்தக் கூறுகளின் பயன்பாடு ஊக்குவிக்கப்படுகின்றது. தமிழகத்தில் 86 இரத்தப் பகுப்பாய்வகங்கள்

செயல்பட்டு வருகின்றன. ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனை ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. சென்னை அல்லாத பிற பகுதிகளான கன்னியாகுமரி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருச்சி, சேலம், வேலூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேலும், டெங்கு காய்ச்சல் தடுப்புப் பணி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும், கண்காணிக்கவும் மாநில அளவில் அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு கூடி, மழைக் காலங்களில் காய்ச்சலைக் கட்டுப்படுத்த துறைகள் ஒருங்கிணைந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் கண்டறிந்தது. இதன்படி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு 26–8–2013 அன்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியால் 30–6–2013 அன்று நடைபெற்ற டெங்கு விழிப்புணர்வு முகாமில் மாணவ, மாணவிகள், பொது சேவை நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்துகொண்டு, டெங்கு இல்லா சென்னையாக மாற்ற உறுதிமொழி எடுக்கப்பட்டது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் எடுக்கப்பட்ட முயற்சிகளால் மாநிலம் முழுவதும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் சராசரியாக தினமும் 800 என்ற நிலையிலிருந்து, இந்த ஆண்டு தற்போது 150 ஆகக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்நோய் தற்போது முழுக் கட்டுப்பாட்டிலும், கண்காணிப்பிலும் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி, தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியதையொட்டி, சுகாதாரத் துறை சார்பாக சென்னையில் 24 மணி நேரமும் செயல்படும் அவசர கால கட்டுப்பாட்டு மையம் திறக்கப்பட்டுள்ளது. நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மாநிலத்தில் எந்தப் பகுதியிலிருந்தும் 044–24350496 என்ற எண்ணில் தொடர்பு கொண்டால், நோய்களுக்குச் சிகிச்சை எங்கு பெறுவது, யாரைத் தொடர்பு கொள்வது போன்ற பல்வேறு தகவல்களைத் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





அதேபோன்று, இன்றைய தினத் தந்தி நாளிதழிலே, சுகாதாரத் துறை, பள்ளிக் கல்வித் துறை இரண்டும் இணைந்து, டெங்கு நோயைப் பரப்பும் கொசுவை ஒழிக்க பள்ளி மாணவ, மாணவியரிடையே உறுதிமொழி மற்றும் Aedes கொசுவைப்பற்றிய வீடியோ அவர்களுக்குக் காண்பிக்கப்படுகிறது என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்ற தகவலோடு, இன்றைக்கு டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வெகு விரைவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனவே, டெங்கு போன்ற பிற காய்ச்சல்கள் மற்றும் காலரா போன்ற நோய்கள் குறித்து பொது மக்கள் பீதியடையத் தேவையில்லை என்பதையும், அதைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, மனுக்கள் குழுவின் தலைவர்.

**திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தமிழுக்குச் சந்தனத் தொட்டில் கட்டும் தலைவியே! ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் எங்கள் அன்னையே! இருக்கும் தலைமுறைக்கும், பிறக்கும் தலைமுறைக்கும்

[திரு. ஆர். மனோகரன்] [2013 அக்டோபர் 29

*சீரிய திட்டங்கள் தந்திடும் சிந்தனைத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் மக்கள் மனதில் நிற்கும் எங்கள் மகத்துவமே, அன்புத் தாயே, அம்மா அவர்களே, உருவான நாள் முதலாய் உருக்குலையா மனம் கொண்டு உயர்வான களம் காணும் உன்னதத்தின் உயிர் மூச்சே, துயர் நீக்கும் நம் அரசின் தூய்மை மிகு மணிமுடியே, நாளை இந்தியாவை ஆளப்போகும் மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

*பிற்பகல் 12–10*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 30 முதல் 35 முடிய 6 அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*



2013 அக்டோபர் 29] [ பேரவைத் தலைவர்]

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*(மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## 3. அறிவிப்புகள்

### (ஆ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013–2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் தொடர்ச்சி. மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டின் முதல் துணை நிதிநிலை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே கலந்துகொண்டு, தமிழக மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற வகையிலே தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சட்டமன்ற உறுப்பினரான எனக்கு உரையாற்றும் வாய்ப்பு வழங்கிய, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி அழகுபார்க்கும் எங்கள் அரசியல் ஆசான், ஏழை, எளிய மக்களின் பாதுகாவலர், இளைஞர்களின் நம்பிக்கை நாயகன், எதற்கும் அஞ்சாத துணிவும், நேர்மையும்,



கொடையுள்ளமும் கொண்ட, தமிழக சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மானியத்தின் மீதான எனது விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், 2013–2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினத்திற்காக, சுமார் ரூ.5,898.19 கோடிக்கு முதல் துணை நிதிநிலை அறிக்கையை இப்பேரவை முன்பு தாக்கல் செய்திருக்கின்றார். இவற்றில் 4,829 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 1,068 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். இந்தக் கூடுதல் செலவினங்கள் மாநில வரி வருவாய் மூலமாகவும், செலவினங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் ஈடுசெய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார். சட்டமன்றத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் படித்த உரையிலே தெரிவிக்கப்பட்டுள்ள தொகை சுமார் ரூ.3,000 கோடி அளவிற்கு உள்ளது. மீதமுள்ள கூடுதல் மதிப்பீடுகள் எதற்காக என்பதை இப்பேரவைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு நிதி அமைச்சரின் உரையிலே 4–வது பக்கம், 6–வது பத்தியில் போக்குவரத்துத் துறைக்காக 297.60 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்காக 579.62 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டு கூடுதல் செலவினங்களுக்கான கோரிக்கை அறிவிப்பில் இயற்கைப் பேரழிவுச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பதற்காக ரூ.1,458.73 கோடி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு நிதி அமைச்சர் ஆற்றிய உரையில் 454 கோடி ரூபாய் குறைவாக, 1,004.86 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டுள்ளார். குறைத்து அறிவிக்கப்பட்டுள்ள தொகையான 454 கோடி ரூபாய் வேறு இயற்கைச் சீற்றங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதை இப்பேரவைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 48, வருவாய்த் துறை, நாள் 13–2–2013–ன்படி, டெல்டா மாவட்டங்களுக்கு வறட்சி நிவாரணம் முறையே நெல் பயிரின் இழப்பீட்டிற்கு 3,52,613 விவசாயிகளுக்கு 524.26 கோடி ரூபாயும், குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக 37.25 கோடி ரூபாயும் மற்றும் கால்நடைத் தீவனம் வழங்க 30 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 591.57 கோடி ரூபாய் சென்ற நிதியாண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்டது. காவேரி டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் அரசாணை எண் 123, வருவாய்த் துறை, நாள் 25–4–2013–ன்படி வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி நெல் போன்ற பயிர் இழப்பீட்டிற்கு 17,94,350 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் 835.21 கோடி ரூபாயும், கால்நடைத் தீவனம் வழங்க 24.65 கோடி ரூபாயும், குடிநீர் வசதி செய்து கொடுக்க 145 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 1,004.86 கோடி ரூபாய் நடப்பு நிதியாண்டில் வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மிக்க நன்றி. கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே கைத்தறித் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேசியபோது, நெசவாளர்களுக்கு சூரிய சக்தி மூலமாக இயங்குகின்ற இலவச மின்விசிறி மற்றும் இரண்டு மின் விளக்குகள் அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் கட்டுவதற்கு 260 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டதற்கு தமிழக அரசுக்கு நான் என்னுடைய நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழக அரசு அரசாணை வெளியிட்டு,



நெசவாளர்கள் பயன்பெற உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 2014 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி விலையில்லா வேட்டி சேலைகள் வழங்குவதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் 350 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. நூல் விலை ஏறியிருப்பதால் ஒதுக்கப்பட்ட அந்தத் தொகை போதுமானதாக இல்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட பசுமை வீடுகள் கட்டும் பணி துவக்கப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் கட்டும் பணி துவங்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்காகத்தான் நான் கேட்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் இதுகுறித்துச் சொன்னார்கள். கட்சிப் பாகுபாடே கிடையாது. ஏழ்மையான நெசவாளர்கள் யார் இருக்கிறார்களோ, அவர்கள்மீது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வை உடனடியாகப் போய்விடும். நீங்கள் சொல்லவே தேவையில்லை. ஏழை நெசவாளர்களுக்கு, சரியாக, நேராக உரிய பணம் போய்ச் சேர்ந்துவிடும்; வீடுகளைக் கட்டிக்கொடுப்பார்கள். அதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் விலை ஏற்றத்தினால் ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதாக இல்லையென்பதால், மேலும் 136.36 கோடி ரூபாய் கைத்தறித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்பதற்காக, அவர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ்மூலம் வேலைவாய்ப்புகள் வழங்க வேண்டுமென்பதற்காகவே மறைந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆணை கொண்டுவந்தார்கள். சென்ற ஆண்டு நெசவாளர்களுக்குத் தாமதமாக நூல் பாவு வழங்கப்பட்டதாலும், அவர்களிடமிருந்து விலையில்லா வேட்டி, சேலைகள் கொள்முதல் செய்ய முடியாததனாலும், வெளி மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. ஆகையால், இந்த ஆண்டு கோ–ஆப்டெக்ஸ் மூலமாக அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும், விசைத்தறி நெசவாளர்களுக்கும், துணிநூல் பாவு வழங்கப்பட்டுவிட்டதா என்பதையும், விலையில்லா வேட்டி, சேலைகள் உற்பத்தி நடைபெறுகிறதா என்பதையும் அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் இந்த ஆண்டு நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட விலையில்லா வேட்டி, சேலைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வருடம் முழுவதும் வேலைவாய்ப்பினை உறுதி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கைத்தறி திட்டத்தினை விரிவுபடுத்தி, இலவச வேட்டி, சேலைகளை வழங்குவதற்கு நல்ல பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். கைத்தறி நெசவாளர்கள் வருடம் முழுவதும் நெசவு செய்து எவ்வளவு வேட்டி, சேலைகளைத் தருவார்கள் என்பதைக் கேட்டறிய முற்படும் போது அவர்களால் முடியாது என்று சொன்ன பிறகுதான் வெளியிலிருந்து வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் அதிக அளவில் நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரை துணி நூல் பாவு வழங்கப்படவில்லை என்பதனால்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்குகின்ற இலவச வேட்டி, சேலைகள் புதிதாக டை செய்யப்பட்ட 60 ஆம் நூலைக்கொண்டு சிறப்பான முறையில் தயாரிக்கப்படுகிறது. இலவச வேட்டி, சேலைகள் ஏழையெளிய மக்களுக்குப் பயன்படுகின்ற முகமாக, அதன் தரத்தினை உயர்த்தியிருக்கின்றார்கள். அதற்காக டெண்டர் விடப்பட்டபோது, விலை உயர்வு காரணமாக இரண்டு முறை டெண்டர் இரத்து செய்யப்பட்டது. மீண்டும் டெண்டர் விட்டு, கொள்முதல் செய்யப்பட்டு, சிறப்பான முறையில் எல்லா நெசவாளர்களுக்கும் நூல் கொடுக்கப்பட்டு, உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

பிற்பகல் 12–20

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ–ஆப்டெக்ஸ் மூலமாகக் கொடுக்கப்பட்டதா என்பதைத்தான் நான் தெளிவுபடுத்தக் கோருகிறேன். கிரானைட் கொள்ளையை உலகிற்கு உணர்த்திய திரு. சகாயம் அவர்கள், கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநராக இருக்கின்றார். அவர் திறமையான அதிகாரி. கோ–ஆப்டெக்ஸ் மூலமாக கொடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை இயக்குவதே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீக்க வேண்டுமென்று சொல்லவில்லை. திறமையான அதிகாரி என்றுதான் சொன்னேன். தமிழக அரசினுடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதன்பேரில்தான் அப்போதைய ஆட்சித் தலைவராக இருந்தவர் நடவடிக்கை எடுத்தார். ஆட்சித் தலைவர் இரண்டு ஆண்டு காலம் அங்கே இருந்தபோது அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதற்குப் பின்னால்தான் அதில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.



**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய பல துறைகளில் வருவாயைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்திலே, மதுரையிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கிரானைட் கற்கள் கொள்ளை போனதைத் தடுத்து நிறுத்தியதன் மூலமாக தமிழக அரசுக்கு வர வேண்டிய ஏறக்குறைய 15 ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளை போனதைத் தடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் செய்திகள் வருகின்றன. அதைப்போலவே, மணல் லாரி உரிமையாளர் சங்கத்தினர் மணல் மூலமாக 188 கோடி ரூபாய் மட்டும் அரசுக்கு வருவாய் வந்துள்ளதாகவும், 15 ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். இந்த வருவாயைப் பெருக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போலவே, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மணல் மூலமாக என்ன வருமானம் வந்தது என்பது தெரியாது. மணல் லாரி அதிபர்கள் சொன்னதை மட்டும் வைத்துக்கொண்டு பொத்தாம்பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றார்கள். மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் இறுதி ஆண்டின் (2010–2011) வருமானம் வெறும் 150 கோடி ரூபாய். ஆனால் இயங்கிய குவாரிகள் 196. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் 2011–2012 ஆம் ஆண்டில் 188 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வந்திருக்கின்றது. இயங்குகின்ற குவாரிகள் வெறும் 42 தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் உண்மையான கணக்கு மக்களுக்குப் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொத்தாம்பொதுவாகச் சொல்லவில்லை. மணல் லாரி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தது ஊடகங்களில் வந்ததைத்தான் நான் சொன்னேனே தவிர, பொத்தாம்பொதுவாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி உரிமையாளர்கள் சொல்லியதாக ஊடகங்களில் வந்தது அதிகாரப்பூர்வமான செய்தி இல்லை என்பதை நீங்கள் முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும். அரசின் சார்பாக வெளியிடப்படும் அறிக்கைதான் அதிகாரப்பூர்வமான செய்தி என்பதை நீங்கள் முதலிலே புரிந்துகொண்டு பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுகூட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தினத்தந்தி பேப்பரைக் கையில் வைத்துக்கொண்டுதான் ஊடகத்தில் வந்தது எனக் காண்பித்தார். அதை நாங்கள் காண்பித்தால் தப்பு என்கிறீர்கள். அதைப்போலவே, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பல இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு தாது மணல் கொள்ளை போனதாக ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. சுந்தரம் அவர்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதமே இந்த அரசின் தொழில் துறை செயலாளர் திரு. பழனியப்பன் அவர்களிடம் தெரிவித்துள்ளதாகக் கூறியிருந்தார். அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அதற்குப் பின்னால் ஒன்றரை வருடம் கழித்து, தூத்துக்குடி தாது மணல் கொள்ளை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாது மணல் எடுக்கப்படுவது குறித்து சில புகார்கள் எழுந்ததால், ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் தாது மணல் எடுக்கப்படுவதே இந்த அரசால் நிறுத்தப்பட்டுள்ளது.



(மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக ஒரு விசாரணைக் குழுவை அமைத்திருக்கிறோம். அந்த விசாரணைக் குழு தாது மணல் எடுக்கப்படும் இடங்களில் எல்லாம் ஆய்வு மேற்கொண்டு, அரசுக்கு அறிக்கையை அளித்த பின்னர், இந்த அரசு மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்று திட்டமிட்டுள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது இயற்கை வளங்களான கனிம வளம், நீர் வளம், நில வளம், எரிபொருள் வளம், வன வளம் ஆகியவற்றை முறைப்படி பயன்படுத்திக் கொள்வதைப் பொறுத்தே அமையும். இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வளங்கள் அரசின் முன் அனுமதியின்றியோ அல்லது அரசு அனுமதித்த அளவுக்கு மேல் வரம்பு மீறியோ சுரண்டப்படுவது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். சட்டவிரோதமாக தாது மணல், அதாவது Beach Minerals எனப்படும் கார்னெட், இல்மனைட் மற்றும் ரூட்டைல் போன்றவை அள்ளப்படுகின்றன என்பது குறித்த விவரங்களை, உண்மை நிலையை இந்த மாமன்றத்தில் எடுத்துரைப்பது எனது கடமையெனக் கருதுகிறேன்.

பிற்பகல் 12–25

கடற்கரை கனிம மணல் மற்றும் ஆற்றுப் படுகைகளில் கிடைக்கக்கூடிய தாது மணல் கனிமங்களான கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான், லுகாக்சின் மற்றும் மோனசைட் போன்ற கனிமங்களுக்கு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (அபிவிருத்தி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957 மற்றும் கனிமச் சலுகைகள் விதிகள், 1960 ஆகியவற்றின்கீழ் சுரங்கக் குத்தகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. குத்தகை ஒப்பந்தம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஏற்படுத்தப்படுகிறது.

இச்சட்டத்தின் அட்டவணை–I, பகுதி 'B'–ன்கீழ் வரும் அணுசக்தி கனிமங்களான இல்மனைட், ரூட்டைல், சிர்கான், லுகாக்சின் மற்றும் மோனசைட் போன்ற கனிமங்களுடன் கார்னெட் மற்றும் சிலிமனைட் ஆகிய கனிமங்களும் கலந்து இருக்கும்பட்சத்தில், அணுசக்தி ஆணையத்தின் தடையில்லாச் சான்றிதழ் பெற்ற பிறகு, மேற்படி சட்டத்தின் பிரிவு 5 உட்பிரிவு (i)–ன்கீழ் மைய அரசின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே மாநில அரசால் கனிமக் குத்தகை உரிமம் வழங்க இயலும்.

இந்தத் தாது மணல் கனிமங்கள் அடங்கிய பெரும் கனிமங்களுக்கான (Major Minerals) குத்தகைப் பகுதி, 5 ஹெக்டேர் முதல் 50 ஹெக்டேர் வரை இருந்தால், மாநில சுற்றுச்சூழல் அமைப்பிடமிருந்து சுற்றுச்சூழல் சான்றிதழ் பெற்றால் போதும். குத்தகைப் பகுதி, 50 ஹெக்டேருக்கும் மிகைப்பட்டிருந்தால் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் சான்றிதழைப் பெற வேண்டும்.

கடலோரப் பகுதிகளில் கடற்கரை உயர் அலை மட்டத்திலிருந்து 500 மீட்டர் அளவு வரை கடல் முறைப்படுத்தப்பட்ட பகுதி (Coastal Regulatory Zone) என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் கனிமச் சுரங்கங்களுக்கு, 1991 ஆம் ஆண்டு கடற்கரை முறைப்படுத்துதல் மண்டல அறிவிக்கையின்படி, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெற வேண்டும்.

குத்தகைக்கு விண்ணப்பிக்கப்பட்ட பரப்பு 5 ஹெக்டேருக்கும்கீழ் இருக்குமாயினும், வரையறுக்கப்பட்ட கடற்கரை முறைப்படுத்துதல் மண்டலத்திற்குள் வரும்பட்சத்தில், 1991 ஆம் ஆண்டு கடற்கரை முறைப்படுத்துதல் மண்டல அறிவிக்கையின்படி, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் தடையில்லா சான்று பெற வேண்டும்.

கார்னெட் மற்றும் சிலிமனைட் ஆகிய கனிமங்களுக்கான சுரங்கத் திட்ட, அதாவது (Mining Plan) ஒப்புதலை அளிக்கும் அதிகாரம் மத்திய அரசின் இந்திய சுரங்கக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய கனிமங்களான ரூட்டைல், இல்மனைட், சிர்கான் போன்ற கனிமங்களுக்கான சுரங்கத் திட்ட ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மத்திய அரசின் அணு சக்திக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட சுரங்கத் திட்டத்தின்படி, அதாவது, Approved Mining Plan–ன்படி கனிம அகழ்வு மேற்கொள்ளப்படாவிடின், கனிமச் சலுகை மற்றும் மேம்படுத்துதல் விதிகள், 1988–ன் விதி 13, உட்பிரிவு (2)–ன்படி மைய அரசைச் சேர்ந்த இந்திய கனிமக் குழுமத்தின் மண்டல கனிமக் கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலருக்கு, அதாவது, Regional Controller of Mines, Indian Bureau of Mines அவர்களுக்கு மேற்படி கனிமக் குத்தகையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க



அதிகாரமுள்ளது. இத்தவறுகள் சரிசெய்யப்படும்பட்சத்தில் அதே விதிகளின்கீழ் கனிமக் குத்தகையைத் தொடர ஆணையிடவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மைய அரசு நிர்ணயித்தவாறு கார்னெட் கனிமத்திற்கு ராயல்டி தொகையாக இந்திய கனிமக் குழுமம் மாதந்தோறும் வெளியிடும் விற்பனை மதிப்பில் 3 சதவிகிதம் என்ற கணக்கில் வசூலிக்கப்படுகிறது. இல்மனைட், ரூட்டைல் போன்ற கனிமங்களுக்கு விற்பனை விலையில் அட் வேலரம் அடிப்படையில் (Ad Valorem basis) 2 சதவிகிதம் ராயல்டி நிர்ணயிக்கப்படுகிறது. இந்நேர்வுகளில் மைய அரசு மட்டுமே ராயல்டி தொகையை நிர்ணயம் செய்ய முடியும்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தன்னுடைய 6–8–2013 நாளிட்ட கடிதத்தில், கார்னெட், இல்மனைட், ரூட்டைல் மற்றும் மோனசைட் போன்ற கனிமங்களை எடுப்பதற்காக வழங்கப்பட்ட குத்தகை இடங்களில் முறைகேடாக இவை எடுக்கப்பட்டுள்ளன. எனவே, இது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்திருந்தார்.

பிற்பகல் 12–30

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின்படி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் 8–8–2013 அன்று அரசுக்கு தனது பரிந்துரையை அனுப்பி வைத்தார். இவற்றை பரிசீலித்த எனது அரசு, வருவாய்த் துறை செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையின்கீழ் ஒரு சிறப்புக் குழுவை அமைத்து, தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள 6 சுரங்கக் குத்தகைகளையும் ஆய்வு செய்து, அறிக்கை அளிக்க வேண்டுமென 8–8–2013 அன்று ஆணையிட்டது. மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் தாது மணல் சுரங்க நடவடிக்கைகளை முழுவதுமாக நிறுத்தி வைக்கவும், மேற்படி சிறப்புக் குழு ஒரு மாதத்திற்குள் அறிக்கையை அரசுக்கு அளிக்க வேண்டும் எனவும் எனது அரசு ஆணையிட்டது. அதன்படி சிறப்புக் குழு, தனது ஆய்வறிக்கையை 17–9–2013 அன்று என்னிடம் சமர்ப்பித்தது. இந்த அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளோம் என்பதை விவரித்துக்கொண்டிருக்கிறேன்.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் தனது 17–9–2013 நாளிட்ட கடிதத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் 52 தாது மணல் கனிமக் குத்தகைகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 11 தாது மணல் கனிமக் குத்தகைகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 தாது மணல் கனிமக் குத்தகைகள் மற்றும் மதுரை மாவட்டத்தில் 2 தாது மணல் கனிமக் குத்தகைகள் என மொத்தம் 71 தாது மணல் கனிமக் குத்தகைகள் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும், இந்தக் குத்தகைகள்மூலம் கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான், லுகாக்சின் மற்றும் மோனசைட் போன்ற கனிமங்களை அகழ்ந்தெடுக்க தனியார்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

மேலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர், தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவே, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்டங்களில் தனியாருக்கு வழங்கப்பட்ட கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான், லுகாக்சின் மற்றும் மோனசைட் போன்ற தாது மணல் கனிமங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகைப் பகுதிகளை ஆய்வு செய்து ஒருமித்த ஆய்வறிக்கையை அளிக்க ஆணையிடலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தார்.

இதன் அடிப்படையில், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்டங்களில் கார்னெட், சிலிமனைட், இல்மனைட், ரூட்டைல், சிர்கான், லுகாக்சின் மற்றும் மோனசைட் போன்ற தாது மணல் கனிமங்களை அகழ்வு செய்ய தனியாருக்கு வழங்கப்பட்ட 71 சுரங்கக் குத்தகைப் பகுதிகளிலும் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க வருவாய்த் துறைச் செயலர் தலைமையின்கீழ் சிறப்புக் குழு அமைத்திடவும், மேற்படி மாவட்டங்களில் இயங்கிவரும் தாது மணல் குவாரிகளின் செயல்பாட்டினை நிறுத்திவைக்கவும் நான் ஆணையிட்டேன். என்னுடைய உத்தரவிற்கிணங்க, 17–9–2013 நாளிட்ட தொழில் துறை அரசாணை வெளியிடப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட சிறப்புக் குழு, ஆய்வினை முடித்து அது தொடர்பான அறிக்கையை அரசுக்கு விரைவாக அளிக்க வேண்டுமெனவும் ஆணையிட்டுள்ளேன்.

வருவாய்த் துறைச் செயலரின்கீழ் அமைக்கப்பட்ட சிறப்புக் குழு, தனது புலத் தணிக்கையை 17–10–2013 அன்று திருநெல்வேலியில் உள்ள தாது மணல் குவாரிகளில் தொடங்கியுள்ளது.



திரு. ஆர். அப்பு நடேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தனது 21–12–2008 நாளிட்ட மனுவில், திரு. டி. தயாதேவதாஸ் அவர்களுக்குச் சொந்தமான நிறுவனங்களான திருவாளர்கள் சதர்ன் எண்டர்பிரைசஸ் மற்றும் இந்தியன் கார்னெட் சாண்டு கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு, திருச்சி மாவட்டத்தில் அரசுப் புறம்போக்கு நிலங்களில் வழங்கப்பட்ட கனிமக் குத்தகைகளில் சுற்றுச்சூழல் விதி மீறல்கள் உள்ளதாகக் கூறி அதன்மீது நடவடிக்கை எடுக்கும்படி அரசைக் கேட்டுக்கொண்டார். மேலும், அவர் 9–2–2010 அன்று தொடர்ந்த ரிட் மனுவின்படி, மேற்கூறிய நிறுவனங்களுக்கு வழங்கிய கனிமக் குத்தகைகளில் அரசு தணிக்கை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் ஆணையையும் பெற்றார்.

இதன் தொடர்ச்சியாக, திருச்சி மாவட்ட ஆட்சியர் ஒரு குழுவினை அமைத்து, புலத் தணிக்கை செய்து மேற்கூறப்பட்ட நிறுவனங்களால் அனுமதியின்றி பல கோடி ரூபாய் மதிப்புள்ள கார்னெட் மணல் வெட்டி எடுக்கப்பட்டதை அரசுக்குத் தெரிவித்திருந்தார். இம்முறைகேடுகள் குறித்து 14–11–2011 அன்று அரசு கடிதம்மூலம் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளைக்கு தெரியப்படுத்தப்பட்டது. இவ்வறிக்கையை அடிப்படையாகக்கொண்டு, நீதிப் பேராணை மனுமீது 18–11–2011 அன்று இறுதி ஆணை வழங்கிய உயர் நீதிமன்றம், இவ்வழக்கில் தொடர்புடையவர்களுக்கு உரிய வாய்ப்பு அளித்து, சட்டத்திற்கு உட்பட்டு திரு. ஆர். அப்பு நடேசன் அவர்களின் 21–12–2008 நாளிட்ட மனுவின்மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம் எனத் தீர்ப்பளித்தது.

பிற்பகல் 12–35

இந்தச் சூழ்நிலையில், திரு. டி. தயாதேவதாஸ் மேற்கண்ட உயர் நீதிமன்ற ஆணையை எதிர்த்து மறுபரிசீலனை வழக்கினைத் தொடுத்துள்ளார்.

இருப்பினும், திருச்சி மாவட்ட ஆட்சியர் அறிக்கையின்மீது எனது அரசு நடவடிக்கை எடுத்து மேற்கண்ட நிறுவனங்களுக்கு திருச்சி மாவட்டத்தில் அரசுப் புறம்போக்கு நிலத்தில் வழங்கப்பட்ட ஐந்து சுரங்கக் குத்தகைகளை 1–2–2013 தேதியிட்ட அரசாணைகள்மூலம் இரத்து செய்து ஆணையிட்டது.

இந்த ஆணைகளை எதிர்த்து 5 வழக்குகள் இந்நிறுவனங்களால் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் எதிர் வாதுரை அரசால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை 6–2–2013 அன்று வழங்கிய இடைக்கால ஆணையில், மேற்படி சுரங்கங்களில் முறைகேடாக வெட்டியெடுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள கார்னெட் மணலை அப்புறப்படுத்தக்கூடாது என்றும், மனுதாரரும் அம்மணலுக்கு இடையூறு செய்யக்கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது. இந்த இடைக்கால ஆணை தற்போது நடைமுறையில் உள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் இருந்த மறுபரிசீலனை மனு மற்றும் அனைத்து வழக்குகளும் ஒரே தொகுப்பு வழக்காக (Batch Case) மாற்றப்பட்டு சென்னை, உயர் நீதிமன்ற அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில், முறைகேடுகள் குறித்து அனைத்து குவாரிகளையும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வருவாய்த் துறைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் பெருங்கனிமக் குவாரிகள் குறித்து ஒரு கொள்கை முடிவு எனது அரசால் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட அந்த விசாரணை அறிக்கையினை தமிழக அரசு வெள்ளை அறிக்கையாகப் பேரவையிலே தாக்கல் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நான் சொன்னதை கவனமாகக் கேட்க வேண்டும். அந்தக் குழுவின் அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது என்பதை ஏற்கெனவே தெரிவித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தமிழகத்தில் நடைபெறுகின்ற கிரானைட் தாது மணல் கொள்ளைகளைத் தடுக்க முறையான நடவடிக்கைகள் எடுப்பதன்மூலம் அரசுக்கு வருவாயைப் பெருக்கி, தமிழக மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுத்து, வரியில்லாத ஒரு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய முடியும் என்று நம்புகின்றேன்.

இந்திய திரைப்பட நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்காக தென்னிந்திய திரைப்பட வர்த்தகச் சங்கத்திற்கு மானியமாக ரூபாய் 10 கோடி கொடுத்திருப்பதை வரவேற்கின்றேன். அதேநேரத்திலே அந்த விழாவை அரசும், தென் இந்திய திரைப்பட வர்த்தக சங்கமும் ஏற்று நடத்துவதாக விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால், திரைப்படத் துறையிலே பணியாற்றிய பல புகழ்பெற்ற கலைஞர்களுக்கும், திரைப்படத் தொழிலை வளர்த்த பெருமக்களுக்கும் முறையான அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை என்று சொல்லப்படுகின்றது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், உட்காருங்கள், (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு என்னுடைய தொகுதியில் நடைபெறும் ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். குற்றமாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், அதை எழுதிக் கொடுங்கள்.

பதிவு செய்து கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி உட்காருங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேலம் (வடக்கு) சட்டமன்றத் தொகுதிக்குத் தேவையான கோரிக்கைகளை எழுத்து மூலமாகக் கொடுக்கிறேன்.

2011–2012 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட அணைமேடு இரயில்வே மேம்பாலம், லீ பஜார் இரயில்வே மேம்பாலம், முள்ளுவாடி கேட் இரயில்வே மேம்பாலப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அறிவித்த இந்தப் பணிகளை உடனடியாகச் செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, 7 சிப்பங்களாக டெண்டர் விடப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தன. அதில் பூமிக்கடியில் சாக்கடைக் குழாய்களைப் பதிக்கும் இரண்டு சிப்பங்களை செய்து வந்த ஒப்பந்ததாரர் சரியாக பணியினை செய்யாததால் அவருடைய டெண்டர் இரத்து செய்யப்பட்டது. ஆதலால், சாக்கடை தோண்டுவதற்காக மாநகரம் எங்கும் குழிகள் தோண்டப்பட்டு சரியாக மூடப்படாததாலும், பணிகள் நடைபெறாததாலும் மழைக் காலமாக இருப்பதால் குறிப்பாக முதியவர்கள், குழந்தைகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றார்கள். ஆகவே, பாதாளச் சாக்கடை பணிக்கு உடனடியாக மாற்று ஒப்பந்ததாரரை ஏற்பாடு செய்து, அந்தப் பணியினை முடித்துத் தருமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகரில் குடிநீருக்காக அவதிப்படும் காட்சி மிகவும் வருத்தப்படக்கூடியதாகும். குடிநீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டத்தைத் தாங்கிக்கொள்ளலாம். ஆனால், தேவையான குடிநீர் இருந்தும் சீரான விநியோகம் இல்லாததால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே, முறையான, சீரான குடிநீர் விநியோகத்திற்கு அரசு நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், கடந்த கால ஆட்சியில் உலக வங்கி நிதி உதவியுடன் தீட்டப்பட்ட சேலம்–மேட்டூர் தனிக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.





சேலம் பொது மருத்துவமனை மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, சேலம் மாவட்டம் மட்டுமல்லாமல் நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் பயன்படுத்தக்கூடிய ஒரு பெரிய அரசு பொது மருத்துவமனையாகும். அந்த மருத்துவமனையில் மெடிக்கல் பிளாக்கில் இரண்டு லிப்ட்களில் ஒன்று அமைக்கப்படவில்லை. ஜெனரேட்டர் வசதி செய்யப்படவில்லை. அறுவை சிகிச்சை அரங்கம் இருந்தும் ஜெனரேட்டர் வசதி இல்லாததால் அறுவை சிசிக்சை செய்ய முடியவில்லை. அதுமட்டுமல்லாமல், சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் பெரியது, சிறியதாக 13 அறுவை சிகிச்சை அரங்குகள் இருந்தும் முழுவதுமாக செயல்படவில்லை. அதுமட்டுமல்லாமல், ஏழையெளிய மக்கள் மனக்கஷ்டத்தோடு வருவதால் சுற்றுப்புறச்சூழல் சரியாக பராமரிக்கப்படுவதில்லை. ஆகவே, தமிழக அரசு மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக ஏழையெளிய மக்கள் சுற்றுப்புறச்சூழலை தூய்மையாக வைத்திருக்க ஏதுவாக தனியார் ஏஜென்சி மூலமாக பராமரிப்புப் பணிகள் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏறக்குறைய 56 துறை அலுவலகங்கள் இயங்குகின்றன. 4 லிப்ட்களில் 2 மட்டுமே செயல்படுகின்றன. பொதுமக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு மீதமுள்ள 2 லிப்ட்களும் முறையாக செயல்பட ஆவன செய்து நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசால் மக்களைத் தேடி அதிகாரிகள் செல்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால், இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கைவிடப்பட்ட பெண்கள் உதவித்தொகை, குடும்ப அட்டை ஆகியவற்றை எனது சேலம் மாவட்ட வடக்குத் தொகுதிக்குட்பட்ட 6–வது கோட்டம் பெரியார் நகர், பெரிய கொல்லப்பட்டி மாரியம்மன் கோவில், 12–வது கோட்டம் ஜான்சன்பேட்டை தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் உள்ள பகுதி, காக்காயன் சுடுகாடு பகுதி, 14, 15–வது கோட்டம், 28–வது கோட்டம் ஆகிய இடங்களில் 30, 40 ஆண்டுகளாக வசிக்கின்ற ஏழையெளிய மக்கள் வீட்டு வரி இரசீது இருந்தும், வாக்காளர் அடையாள அட்டை இருந்தும் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகையால், அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, தகுதியான நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2013 அக்டோபர் 29

சேலம் மாநகரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்திருந்தபோது 30, 40 ஆண்டுகளாக கிச்சிப்பாளையம் பகுதியிலே உள்ள குப்பைமேட்டை அகற்றுவதாக தேர்தல் வாக்குறுதியாக அறிவித்தார்கள். ஆனால், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. சேலம் மாநகரத்தில் செட்டிசாவடியிலே 100 ஏக்கரில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும்கூட குப்பை சேகரிப்பதற்குண்டான போதிய உபகரணங்கள் (Dustbins) இல்லாத காரணத்தினால், குப்பைகளை முழுமையாக அகற்ற முடியாமல் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் முழுமையாகச் செயல்படாமல் உள்ளது. ஆகவே, போதிய நிதியை ஒதுக்கி சேலம் மாவட்டத்தை குப்பையில்லா மாநகரமாக மாற்ற அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகரத்தில் பெருகிவரும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த சேலம் இரும்பாலை மெயின் ரோட்டில் இருந்து சீலநாயக்கன்பட்டி, தாதகாப்பட்டி கேட் வரை உயர்மட்டச் சாலையும், அதைப்போல மிகவும் அகலமான சாலையாக இருக்கின்ற ஏற்காடு மெயின் ரோட்டிலிருந்து அம்மாப்பேட்டை ஹோலி கிராஸ் பள்ளி வரை உயர்மட்டச் சாலை அமைக்குமாறும் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

9 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டு, தற்போது ஆமை வேகத்தில் பணிகள் நடைபெறுகின்ற சேலம் மையப் பகுதியில் உள்ள ஆனந்தா மேம்பாலத்தையும், நியூ சினிமா தியேட்டர் அருகில் உள்ள மேம்பாலத்தினையும் விரைந்து முடித்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எனது தொகுதிக்குட்பட்ட சேலம் பெண்கள் மற்றும் ஆண்கள் கலைக் கல்லூரிகளில் போதிய இடவசதி உள்ளதால் தலா ஒரு கலையரங்கம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே பங்கேற்கச் செய்த என்னுடைய பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய அரசியல் ஆசான் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.



2013 அக்டோபர் 29]

பிற்பகல் 12–40

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு ராஜ்யம் வாகைசூட்டி, வரவேற்கக் காத்திருக்கும் வரலாற்றுத் தாயே, வறியவரின் வாழ்வோடு வாழ்வாகக் கலந்திட்ட எங்களின் உயிருக்கு நிகராக உரியவரே, தமிழர்தம் நலம் காக்கும் தமிழகத்தின் வளம் காக்கும் வற்றாத ஜீவ நதியே, வாழ்விக்க வந்த வான் மழையே, வசந்தப் புயலே, விந்தியம் வியக்க, இந்தியம் சிறக்க வந்துதித்த சந்தியத் தாயின் திருமகளே, (மேசையைத் தட்டும் ஒலி) பகை வெல்ல படை நடத்தி பரணி கண்டு தரணி வென்ற புறநானூற்றுப் போர்த் தமிழே, பிறவிப் பெருங்கடலில் தத்தளித்து வாழ்ந்து வந்த ஒட்டுமொத்தத் தமிழினத்தின் உயிர்த்துடிப்பே, உய்விக்க வந்த பரம்பொருளே, எம் பாட்டுடைத் தலைவியே, அம்மா அம்மா, உமைத் தொழுது உயிர் வாழ்ந்து உயர்வறியா ஒருவருண்டோ இல்லை, இல்லவேயில்லை. இமைக்கும் இடைவெளிக்குள்ளே, கண்ணிமைக்கும் இடைவெளிக்குள்ளே ஈராயிரம் பேரை வாழ்விக்கும் வான் புகழே, (மேசையைத் தட்டும் ஒலி) எழு பிறப்பின் தலைவியே, ஏழைப் பிள்ளைகளுக்கு விலையில்லாத் திட்டங்கள் தந்து எழுத்தறிவிக்கும் இறைவனே, எழுந்தருளிய அருந்தவமே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி என்னுடைய உரையை நான் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனை மட்டும் உயிர் மூச்சாகக் கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், நிருவாக நலன் கருதியும், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டும், முக்கியத் திட்டங்களுக்காக இந்தத் துணை நிதிநிலை அறிக்கைமூலம் 5,898.19 கோடி ரூபாய் நிதியைக் கூடுதலாக ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளமைக்கு, தமிழக மக்களின் சார்பில் ஒட்டுமொத்த நன்றியை நான் காணிக்கையாக்குகின்றேன். கூடுதல் ஒதுக்கீடுக்கான நிதித் தேவை மாநில வரி வருவாய் வளர்ச்சியின் மூலமாகவும், செலவினங்களைத் துல்லியமாகக் கண்காணித்து கட்டுப்படுத்துவதன் மூலமாகவும், ஈடுசெய்யப்படும் என்று தெரிவித்திருப்பது நிதி மேலாண்மையில் நிகரற்ற தலைவியாக விளங்குபவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தியாவின் எந்த மாநிலத்திலும் வெள்ளம் வந்தால் நிவாரணம்

கொடுப்பார்கள். இயற்கைச் சீற்றம் வந்தால் நிவாரணம் கொடுப்பார்கள். புயல் வந்தால் நிவாரணம் கொடுப்பார்கள். ஆனால், இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக வறட்சிக்கு நிவாரணம் அளித்து, (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை தவிர்த்து தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, ஏக்கருக்கு ரூ.5,000 முதல் ரூ.15,000 வரை நிவாரணம் வழங்கி ஏழை விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றியவர், ஏழை விவசாயிகளுடைய வயிற்றில் பால் வார்த்தவர் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சி நிவாரணத்திற்கான செலவுத் தொகை ரூ.1,004.86 கோடி. விலையில்லா வேட்டி, சேலையைத் தடையில்லாமல் தமிழ் மக்கள் பெற்றிட ரூ.136.36 கோடி. மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பேருந்துப் பயணச் சலுகைக் கட்டணங்களால் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய ரூ.297.60 கோடி. பசிப் பிணியை அடியோடு அறுத்து 13 வகையான கலவை சாதங்களை சத்துணவுத் திட்டத்திலே அறிமுகப்படுத்தி அன்னமிட்டு அகமகிழ்ந்து வரும் அம்மா அவர்கள் குழந்தைகளுக்கு இணை உணவு அளிக்க ஏற்படும் கூடுதல் செலவுக்கு ரூ.228.36 கோடி ஒதுக்கினார்கள். சூரிய சக்தி பம்புசெட்டுகளை விவசாயிகள் நிர்மாணித்துப் பயன்பெற ரூ.68 கோடி. நெசவாளர்மீது நேசம் கொண்ட, நெசவாளர்மீது பாசம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், சட்டமன்றத்திலே அறிவித்தபடி சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டித் தர ரூ.260 கோடி. கிருஷ்ணா நதி நீரைத் தொடர்ந்து பெற ஆந்திர அரசுக்கு ரூ.100 கோடி மூலதன மானியம் என இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்து ஆணை வெளியிட்டுள்ளார்கள்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய தே.மு.தி.க.–வினுடைய சட்டமன்ற உறுப்பினர் நெசவாளிகளுக்கு வீடு, நெசவாளிகளுக்கு நூல் எனத் தொடர்ந்து ஏதோ திட்டங்கள் மக்களுக்குச் சென்றடையவில்லை என்ற கருத்தை முரண்பாடுகளாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்துக்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் துவக்கப்படவில்லை என்று சொன்னார். நான் உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு பொருளுக்கு உரிய விலையிருக்கும்; அந்த உரிய விலையைத் திடீரெனக் குறைத்து வெளியிட்டால் அது மற்றவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். உதாரணத்திற்கு, நாட்டில்



சர்க்கரை விலையை எடுத்துக்கொண்டால், சர்க்கரை விலையைக் குறைத்தால் அனைவருக்கும் அது இனிப்பான செய்தியாக இருக்கும். ஆனால், ஒரு சிலருக்கு அந்தச் செய்தி இனிக்காது. யாருக்கு இனிக்காது? சர்க்கரை நோயிருப்பவர்களுக்கு அந்தச் செய்தி இனிக்காது. அப்படித்தான், இது அவர்களுடைய நோயின் வெளிப்பாடு.

*பிற்பகல் 12–45*

உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. ஏனென்று சொன்னால், நீங்கள் வந்த வழி அப்படி. நீங்கள் துக்க வீட்டிற்குச் சென்றால்கூட, அங்கே நான் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன் என்று சொல்வதற்குப் பதிலாக, ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றல்லவா சொல்லிக்கொள்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நடந்ததைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) நான் அவர்கள் சொன்னதைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடந்ததைத்தான் அவர் சொல்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள், இதில் பேசுவதற்கு ஒன்றுமில்லை. (குறுக்கீடு)

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த நிகழ்ச்சியை நாடே அத்துணை தொலைக்காட்சிகளிலும் பார்த்தது. பார்த்த செய்தியை நான் அவையில் பதிய வைத்தேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தபின் சொல்லுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) சத்தம் போட்டுப் பேசாதீர்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் நிற்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். பேரவைத் தலைவர் நிற்கும்போது, நீங்கள் நிற்பது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் பார்த்துச் சொல்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களுக்கெல்லாம் மகுடம் சூட்டுகின்றவகையில் இந்திய திரைப்படத் துறையின் நூற்றாண்டு விழாவினை இந்தியாவின் எல்லா மாநிலங்களையும்விட, ஏன், மத்திய அரசையும் விஞ்சுகின்றவகையில் ரூபாய் 10 கோடியை

மானியமாகத் தாயுள்ளத்தோடு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய சினிமாவின் மாண்பை, பெருமையை, சிறப்பை உலகிற்குப் பறைசாற்றி கலைத் தாயின் தலைமகளாய் விளங்குபவர் நம் அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலேயே தலைசிறந்த காவல் துறையாகத் திகழும் ஸ்காட்லாந்து யார்டு காவல் துறையே வியந்து உற்றுநோக்கும் அளவிற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு காவல் துறையை நவீனப்படுத்தி உயர்நிலைக்குக் கொண்டு வந்ததோடு, விடுமுறை என்பதே அறியாது மழையிலும், வெயிலிலும் கடமை உணர்வோடு பணியாற்றும் நம் காவலர்களின் பணிகளைப் போற்றும் வகையில், காவலர்களுடைய பணிகளைப் பாராட்டுகின்ற வகையில் 'உங்கள் சொந்த இல்லம்', 'own your house' என்னும் அற்புதமான வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டத்தை அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத சிறப்பு நிகழ்வாக ரூபாய் 284.20 கோடியை ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல், 26–10–2013 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூர் அருகே மேலகோட்டையூரில் 47.6 ஏக்கர் அரசு நிலத்தை ஒதுக்கி, பன்னிரண்டே மாதத்தில் பணிமுடிக்க ஆணையிட்டுள்ளார்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். காவலர்களுக்கு தின உணவுப் படியை இரு மடங்காக உயர்த்தி ரூபாய் 59.65 கோடியையும் வாரி வழங்கியுள்ளார்கள் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். ஆந்திர மாநிலம் புத்தூரில் ஒரு வீட்டில் ஒளிந்துகொண்டு சதித் திட்டம் தீட்டிக்கொண்டிருந்த பயங்கரவாதிகளை கடமை உணர்ச்சியோடு தன் உயிரையும் துச்சமென மதித்து, போராடி வெற்றி கண்ட இன்ஸ்பெக்டர் இலட்சுமணன் அவர்களை மருத்துமனைக்கே நேரடியாகச் சென்று, (மேசையைத் தட்டும் ஒலி) ஐசி.யு. வார்டுக்குச் சென்று அங்கே அவருக்கு ஆறுதல் சொல்லி, 15 இலட்சம் ரூபாயை ரொக்கப் பரிசாக அளித்து, பதவி உயர்வு அளித்ததோடு மட்டுமல்லாமல் அந்தப் பணியிலே ஈடுபட்ட அத்துணைப் பேருக்கும் பரிசுகளையும், பதவி உயர்வுகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் மனமார வாரி வழங்கி, காவலர்களுக்கெல்லாம் காவலராக,



காவலர்களின் காவலராக விளங்குகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையிலே நான் பதிய வைக்க விரும்புகிறேன். ஆனால், இதைக் கண்டு பொறுக்காத ஒரு தள்ளு வண்டி, எனக்கு உடன்பாடில்லை என்று கட்டுரை எழுதுகிறது. உண்மைதான். காக்கிச் சட்டைகளுக்கு உயர்வு அளித்தால் களவாணிகளுக்கு எரிச்சல்தானே வரும். உடன்பாடு எப்படி வரும்? (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் பொதுவாகத்தான் சொல்லியிருக்கிறார். அவர் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் பேசிக்கொண்டிருக்கின்றார். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காக்கிச் சட்டைகளுக்கு உயர்வு அளித்தால், களவாணிகளுக்கு எரிச்சல்தானே வரும் என்று நான் பொதுவாகச் சொன்னேன். நான் யார் பெயரையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உடன்பாடு எப்படி வரும். குற்றம் செய்வதையே குடும்பத் தொழிலாகக்கொண்டவர்கள் ஆயிற்றே. எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடுரோட்டில் குண்டு வீசி, வெட்டப்பட்டு குற்றுயிரும், குலைஉயிருமாய் தண்ணீர், தண்ணீர் என்று உயிருக்குப் போராடிய வெற்றிவேல் என்ற ஒரு காவல் அதிகாரிக்கு தண்ணீர்கூட தர மறுத்த கல்நெஞ்சக் காட்சியை இந்தத் தமிழகம் இன்னும் மறக்கவில்லை. எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதநேயம் வேண்டும். மனிதநேயத்துடன் கூடிய நிருவாகத் திறன் வேண்டும். ஆளுமை வேண்டும். 4–8–2013 அன்று தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் காவேரி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் திரு. மாதப்பன் என்பவர் அடித்துச்செல்லப்பட்டு மரக்கிளையிலே தொற்றிக்கொண்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார்; அவரைக் காப்பாற்ற 3 பரிசல் ஓட்டிகள் விரைந்து செல்கின்றார்கள்; அங்கு அவர்களும் வெள்ளத்தில் சிக்கிய வேதனை அரங்கேறுகிறது. ஆகமொத்தம் 4 உயிர்கள் அங்கே ஆபத்தில் பரிதவித்துக் கொண்டிருந்தன. எப்படிப்பட்ட சூழ்நிலை அது? நொப்புநுரையுடன்கூடிய காட்டாற்று வெள்ளம் ஒரு புறம்; வெளிச்சமே இல்லாத கும்மிருட்டு ஒரு புறம். கொட்டும் மழை, குளிர்ந்த காற்று, ஆற்றின் வேகம் ஒரு புறம்; காற்றின் வேகம் ஒரு புறம், பற்றியிருக்கும் மரக்கிளைகூட எப்போது படக்கென உடையுமோ என்ற பதைபதைப்பு, மரண பயம் அவர்களைக் கவ்விக்கொள்கிறது. குற்றுயிரும், குலைஉயிருமாய் முக்கி முனகி யாரேனும் இந்த நாட்டிலே என்னைக் காப்பாற்ற இருக்கின்றீர்களா என்ற ஏக்கத்தோடு விரக்தியின் விளிம்பிலே, கதறும் அந்தக் குரல், கோட்டையிலே இருக்கக்கூடிய இதய தெய்வம் நம்முடைய அம்மா அவர்களுக்குக் கேட்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு செய்தி கிடைக்கின்றது. இந்தச் செய்தி எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் கவனத்திற்கு வந்தவுடன் துடிதுடித்த மாண்புமிகு அம்மா அவர்கள் மறுகணமே உயிர்காக்கும் உத்தரவை உயர் அதிகாரிகளுக்குப் போர்க்கால அடிப்படையிலே பிறப்பிக்கின்றார். மாண்புமிகு அம்மாவின் உத்தரவு வந்த மறுகணம், அரக்கோணத்திலிருந்து தேசியப் பேரிடர் மேலாண்மை மீட்புக் குழுவினர் 47 பேர் அந்தச் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்கிறார்கள். மீட்புப் பணியிலே ஈடுபடுகின்றார்கள். அந்தப் பணியிலே சிக்கல் நீடிக்கின்றது. இரவு முழுக்க சிக்கல் நீடிக்கின்றது. இரவு முழுக்க கண் விழித்து அந்த நிலையைக் கேட்டறிந்த நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதிகாலை நேரத்திலே கோயம்புத்தூர். சூலூர் விமானப் படையிலிருந்து இரண்டு ஹெலிகாப்டர்களை அனுப்பி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த 4 மனித உயிர்களை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றுகின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழகத்தில் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய



ஆட்சிக் காலத்தில் தனி மனித உயிருக்குப் பாதுகாப்பு தரக்கூடிய உத்தம தலைவியாக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படிப்பட்ட மனிதநேயம்! எப்படிப்பட்ட நடவடிக்கை! எப்படிப்பட்ட உயிர் காக்கும் மீட்புப் பணி! யாரால் செய்ய முடியும்? யாரால் செய்ய முடியும்? எண்ணிப் பாருங்கள். இதே நேரத்தில், முந்தைய ஆட்சியாளர்கள் ஆட்சியிலே இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்கள்? ஒன்றைச் செய்திருப்பார்கள். இறந்த பின்பு, 'இரங்கற்பா' எழுதியிருப்பார்கள். இறந்த பின்பு இரங்கற்பா எழுதியிருப்பார்கள். ஏனென்று சொன்னால், துடிதுடித்த உயிரை விரைந்துசென்று காப்பாற்றிய வரலாறு அவர்களுக்குக் கிடையாது. இலங்கையிலே தமிழ் உயிர்கள் அழிக்கப்பட்டபோது, இலட்சோபலட்சம் தமிழ் உயிர்கள் கொத்துக்கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்டபோது, உண்ணாவிரத நாடகம் நடத்தி ராஜபக்சேவுக்கு செருப்பாக இருந்து பொறுப்பாக பணியாற்றியவர்கள்தான் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினாலே அவர்களிடத்தில் மனிதநேயத்தை எதிர்பார்க்க முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் தான் அவர் பேசிக்கொண்டிருக்கின்றார். (குறுக்கீடுகள்) என்னவென்று கேட்கச் சொல்கின்றீர்கள்? நீங்கள் எல்லோரும் இப்படி எழுந்து பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மட்டும் அல்ல. 'பைலின்' புயலிலே சிக்கிய . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யார் பெயரையும் சொல்லவில்லையே? (குறுக்கீடு) அவர் யாருடைய பெயரையும் சொல்லாமல்தான் பேசுகிறார். நீங்களே உங்களைத்தான் சொல்வதாக நினைத்து எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடாதபோது உங்களைத்தான் சொன்னதாக ஏன் எடுத்துக்கொள்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) முந்தைய ஆட்சியாளர்கள் என்றால் உங்களைச் சொல்வதாக அர்த்தம் அல்ல. அவர் பெயரைக் குறிப்பிடாத

வரையில் அவரிடம் எதையும் கேட்க முடியாது. பெயரைக் குறிப்பிட்டால் அவரை நாம் ஏதாவது கேட்கலாம். அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடாதபோது நாம் ஒன்றும் பேசுவதற்கு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. அவர் பொதுவாக பேசிக்கொண்டிருக்கின்றார். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 12—55*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் பெயரையும் குறிப்பிடாமல், மனித நேயத்தோடு எங்களுடைய இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்கள் எப்படிப்பட்ட மீட்புப் பணிகளை மேற்கொண்டார்கள் என்ற கருத்தை மட்டும் இந்த அவையிலே நான் வலுவோடு பதிய வைத்துக் கொண்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும்கூட சொல்கின்றேன், 'பைலின்' புயலில் சிக்கி ஒடிசா மாநிலத்தின் கடல் பகுதியிலே நட்ட நடுக்கடலிலே தத்தளித்த 18 தமிழக மீனவர்களை மீட்டெடுத்து, அவர்களை அழைத்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் யாருடைய பெயரையும், இன்னாருடைய ஆட்சி என்றும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) சொல்லாதபோது நீங்களாகவே கற்பனையாக நினைத்துப் பேசுவதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன் நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. அவர் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இன்னாருடைய ஆட்சி என்று சொன்னால்தான் நான் கேட்க முடியும். (குறுக்கீடுகள்) இன்னாருடைய ஆட்சி என்று அவர் சொல்லாதபோது அவரை நீங்கள் ஒன்றும் கேட்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்.



(குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இன்னாருடைய ஆட்சி என்று அவர் சொல்லாதபோது என்னவென்று கேட்பீர்கள்? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள் முதலில். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையில்லை. நான் மீண்டும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) இல்லை. இது முறையில்லை. அவையை நடத்தவிடாமல் நீங்கள் குந்தகம் விளைவிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்துவதற்கு நீங்கள் ஒத்துழைக்க மறுக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்த ஒத்துழைக்க மறுக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அவையை நடத்துவதற்கு ஒத்துழைக்காமல் தொடர்ந்து அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே இரண்டு முறை நான் வெளியேற்றிவிட்டேன். (குறுக்கீடுகள்) இரண்டு முறை வெளியேற்றியும் நீங்கள் அவையை நடத்தவிடாமல் இடையூறு செய்து கொண்டிருக்கிறீர்கள். இது முறையில்லை. (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் அவர் குறிப்பிடாதபோது, அதை நான் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் அவர் குறிப்பிடவில்லை, எந்த ஆட்சி என்றும் அவர் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) எந்த ஆட்சி என்று அவர் சொல்லாதபோது நான் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) ஆகவே, எந்த ஆட்சி என்று அவர் சொல்லியிருந்தால்தான், நான் கேட்க முடியும். (குறுக்கீடுகள்) ஆகவே, யாருடைய பெயரையும் அவர் குறிப்பிடாதபோது நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சென்று உங்கள் இடத்தில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்கார்ந்து கேளுங்கள். இந்த மாதிரி முறையில்லாமல் பேசுவது முறையற்ற செயல். நான் ஏற்கெனவே இரண்டு முறை உங்களை வெளியேற்றியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதுபோன்று இடையூறு செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் சென்று அவரவர்கள் இடத்தில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவரவர்கள் இடத்தில் உட்காராமல் இந்த மாதிரி செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) அவர் யாருடைய பெயரையாவது குறிப்பிட்டால்தான் நான் விளக்கம் கேட்க முடியும். (குறுக்கீடுகள்) யாருடைய ஆட்சி என்று அவர் சொல்லாதபோது என்னால் விளக்கம் கேட்க முடியாது.

*(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. அவர் இன்னார் ஆட்சி என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)* எந்த ஆட்சி என்று அவர் சொல்லாதபோது என்னால் விளக்கம் கேட்க முடியாது. *(குறுக்கீடுகள்)* முதலில் நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லவில்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். *(குறுக்கீடுகள்)* எச்சரிக்கிறேன். உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* இது முறையில்லை. *(குறுக்கீடுகள்)* அவைத் தலைவரிடத்தில் இந்த மாதிரி நடந்து கொள்வது சரியில்லை. *(குறுக்கீடுகள்)* நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். *(குறுக்கீடுகள்)* மறுபடியும் நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லவில்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். *(குறுக்கீடுகள்)* நான் இவ்வளவு சொல்லியும் கேட்காத காரணத்தினால், அவைக் காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

பிற்பகல் *1—00*

ஏற்கெனவே இரண்டு முறை வெளியேற்றப்பட்டு, இன்று மூன்றாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிற காரணத்தால், பேரவை விதி 120—ன்கீழ் அவர்கள் இந்தக் கூட்டத்தொடரின் எஞ்சியுள்ள நாட்களில் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முடியாது என்று உத்தரவிடுகிறேன். அவர்களை அவையைவிட்டு வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

*(கோஷமிட்டுக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை லாபியில் இருந்து அமைதியாக வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது என்றும் உத்தரவிடுகிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நான் உண்மையான கருத்துகளை மட்டும்தான் பதிய வைத்தேன். துடிதுடித்த உயிரை மாண்புமிகு அம்மா அவர்கள் காப்பாற்றியதும் உண்மை. ஒரு இலட்சம் அப்பாவித் தமிழர்கள் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்டதும் உண்மை. கொல்லப்பட்டபொழுது உண்ணாவிரத நாடகம் நடத்திக்கொண்டிருந்ததும் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் லாபியில் கோஷமிட அனுமதிக்காமல் அவர்களை அமைதியாக வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமட்டுமல்ல, 'பைலின்' புயலில் சிக்கி ஒடிசா மாநில கடல் பகுதியில், நட்ட நடுக்கடலிலே தத்தளித்த 18 தமிழக மீனவர்களையும் மீட்டெடுத்து, அவர்களுடைய மறுவாழ்வுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கிய மீட்பர் நம் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதேபோல ஈரான் சிறையிலே வாடிய 16 தமிழக மீனவர்களை மீட்டெடுத்து தாயுள்ளத்தோடு 16 பேருக்கும் 30 இலட்சம் ரூபாயை மானியத்தோடு மறு ஜென்மம் வழங்கிய மனிதப் புனிதர் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது? மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசின் அலட்சியத்தாலே, தவறான பொருளாதாரக் கொள்கையாலே அதலபாதாளத்திலே பரிதவிக்கிறது அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு. இதனால் விண்ணை முட்டுகின்றது விலைவாசி உயர்வு. இருந்தாலும், அந்தத் தாக்கம் எங்கள் தமிழக மக்களைத் தாக்காத அளவிற்குப், பாதுகாப்பு அரணாக நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களைக் காப்பதோடு, இந்தச் சூழ்நிலையிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை ஒரு லிட்டர்

ரூ.10/–க்குத் தந்து மகத்தான சாதனையைப் படைத்திருக்கும் மகராசிதானே எங்கள் அம்மா? (மேசையைத் தட்டும் ஒலி)

அகிலமே போற்றும் 'அம்மா உணவகங்கள்' மூலம் ஒரு ரூபாய்க்கு ஒரு இட்லி வழங்கி ஏழை மக்களின் பசியாற்றுவதோடு மட்டுமல்லாமல், உலகத்தின் பார்வைக்கு ரூபாயின் மதிப்பை உயர்த்திக் காட்டியவர் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவைமட்டுமல்ல, எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள் ஏராளம், தாராளம். இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தால் நேரம் போதாது.

இருந்தாலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தீபாவளி நேரம். ஒரு நகைச்சுவையான உணர்வை, நகைச்சுவையான கருத்துகளை நான் உங்களோடு இந்த அவையிலே பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். இன்னும் ஓரிரு தினங்களில் தீபாவளித் திருநாளை நாம் கொண்டாடவிருக்கின்றோம். தீபாவளி என்றால் பட்டாசுதான். பட்டாசு என்றால் தீபாவளிதான். தீபாவளி நெருங்கிவிட்டதே என்று இரண்டு பேர் பட்டாசு வாங்க கடைவீதிக்குப் போகிறார்கள். அங்கேயிருந்த பட்டாசுக் கடைக்குள் அவர்கள் நுழைகிறார்கள். அவர்களும் இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். அந்தக் கடையினுடைய பெயர் திருக்குவளை ஃபயர் ஒர்க்ஸ் லிமிடெட். அந்தக் கடையிலே முதலில் ஒரு வெடியைப் பார்க்கிறார்கள். அது ஒரு ராக்கெட் வெடி. அண்ணே, இந்த வெடிக்கு என்ன பெயர்? என்று கேட்கிறார். கடைக்காரர் சொல்கிறார் 'இது 2ஜி ராக்கெட்'. 'இது எப்படி அண்ணே வெடிக்கும்' என்று இவர் கேட்கிறார். கடைக்காரர் பொறுமையாடு சொல்கிறார், 'இது கூட்டு ராக்கெட், ஜாயிண்ட் ராக்கெட், இதை இங்கே பற்ற வைத்தால் ஜோடியாகப் பறந்துபோய் திஹார் ஜெயிலில்தான் வெடிக்கும்' என்று கடைக்காரர் சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 'இது வேண்டாம் அண்ணே' என்று சொல்லிவிட்டு, அதே திருக்குவளை ஃபயர் ஒர்க்ஸ் லிமிடெட்–ல் அடுத்த வெடியைப் பார்க்கிறார். அடுத்த வெடி, சிலோன் வெடி, ஸ்ரீலங்கா வெடி. அந்தத் திருக்குவளை கடையிலே இருக்கிற சிலோன் வெடி. இந்த வெடி, நிமிடத்திற்கு நிமிடம் கலர் மாறும். நிமிடத்திற்கு நிமிடம் கலர் மாறும், நொடிக்கு நொடி நிறம் மாறும். இந்த வெடியைப் பற்ற வைத்தால், மாண்புமிகு



பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெடியைப் பற்ற வைத்தால் வெடிக்கிறது மாதிரி இருக்கும், ஆனால் வெடிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) பற்றுகிற மாதிரி இருக்கும், ஆனால் பற்றாது. ஏனென்றால் இது திருக்குவளை கடையிலே இருக்கக்கூடிய சிலோன் வெடி. அதையும் தாண்டி இந்த வெடியைப் பற்ற வைத்து கிளப்பிவிட்டோம் என்றால், போன வேகத்திலே திரும்பி வந்துவிடும். இதையும் தாண்டி திருக்குவளை கடையிலே அடுத்த வெடியைப் பார்க்கிறார்கள். இது இந்தக் கடையினுடைய ஸ்பெஷல் வெடி. இந்த வெடியினுடைய பெயர் கொள்கை வெடி. இந்த வெடியினுடைய பெயர் கொள்கை வெடி. இந்தக் கொள்கை வெடியைப் பற்ற வைத்து, பற்ற வைத்துப் பார்த்தால் பற்றவே மாட்டேன் என்கிறது. வெடிக்க வைக்கப் பார்த்தால் வெடிக்கவே மாட்டேன் என்கிறது. சரி, வெடிக்கவே மாட்டேன் என்கிறதே என்ன என்று பிரித்து பார்த்தால், இந்த வெடிக்குள்ளே மருந்தே இல்லை, வெறும் மண்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கொள்கை வெடி வெடிக்கவே மாட்டேன் என்கிறது. "என்னப்பா உள்ளே மண்தானே இருக்கிறது" என்று கேட்டதற்கு "அட போங்கண்ணே, இந்த மண்ணை உள்ளே வைத்துதான் ஐம்பது வருடமாக நாங்கள் அமோகமாக விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். இப்போது வந்து இதை எங்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே" என்று கடைக்காரர் சொல்கிறார்.

பிற்பகல் 1–05

இந்தக் கடை நமக்கு சரிப்பட்டு வராது என்று, இரண்டுபேரும் கடையைவிட்டுத் தாண்டி வேகமாக நடையைக் கட்டி, பக்கத்தில் இருக்கின்ற கடைக்குப் போகிறார்கள். பக்கத்தில் இருக்கிற கடை புதுக் கடை–Koyambedu Fire Works Limited. இந்தக் கடை பெயர், Koyambedu Fire Works Limited. ஆனால், இந்தக் கடையை மச்சான்கிட்ட wholesale-ஆக in-charge-ல் விட்டுவிட்டு, முதலாளி ரவுண்டுக்குப் போய்விட்டார். இந்தக் கடையை மச்சான்கிட்ட in-charge-ல் விட்டுவிட்டு, முதலாளி ரவுண்டுக்கு போய்விட்டார். மச்சான்கிட்ட மொத்தமாக வெடி வாங்கி, மொத்தமாக பற்ற வைத்து, சத்தமாக வெடிக்க வேண்டிய வெடி, சுத்தமாக வெடிக்கவே இல்லை. மச்சான்கிட்ட மொத்தமாக வெடி வாங்கி, மொத்தமாகப் பற்ற வைத்து, சத்தமாக வெடிக்க வேண்டிய வெடி, சுத்தமாக வெடிக்கவே இல்லை. ஏனென்று கேட்டால், வெடி எப்பொழுதும் தண்ணீரிலேயே இருந்ததனால் முழுவதும் நமத்துப் போய்விட்டன.

*(மேசையைத் தட்டும் ஒலி)* வெடி தண்ணீரிலே இருந்ததனால் முழுவதும் நமத்துப் போய்விட்டன. வியாபாரம் படுத்துவிட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வியாபாரம் படுத்ததனால், இரண்டு நாட்களுக்கு முன்பு விற்காத சரக்கை மொத்தமாக டெல்லிக்கு எடுத்துக்கொண்டுபோய், அங்கே வியாபாரம் செய்யலாமா என்று பார்த்தார். அங்கே வியாபாரம் செய்யலாம் என்று பார்த்தால், *(குறுக்கீடுகள்)* இன்றைக்கு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. *(குறுக்கீடுகள்)* யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பட்டாசு வியாபாரத்தைப் பற்றிதான் பேசுகிறார். இல்லை. பட்டாசு வியாபாரத்தைப் பற்றிதான் பேசுகிறார். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதில் யார் பெயரையும் சொல்லாமல், அவர் பட்டாசு வியாபாரத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* இல்லை, அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. தீபாவளி சமயம் என்பதால், அவர் பட்டாசு வியாபாரத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* இல்லை, அதெல்லாம் ஒன்றுமில்லை. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், உட்காருங்கள். இல்லை, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, எல்லோரும் உட்காருங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயும் வியாபாரம் 'ஃபனால்' என்று பத்திரிகையில் இன்றைக்கு செய்தி வந்திருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் அமைதியாக உட்கார வேண்டும். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். இல்லை, இல்லை. இது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* இதெல்லாம் முறையல்ல. நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் தகராறு செய்யவே வந்திருக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. உங்களுடைய பெயரைக் குறிப்பிடவில்லை. உங்களுடைய பெயரைக் குறிப்பிடாதபோது நீங்கள்



கேட்கக்கூடாது. *(குறுக்கீடுகள்)* இது முறையல்ல. உங்கள் இடத்தில் போய் உட்காருங்கள். நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. *(குறுக்கீடுகள்)* உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள்.

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்பு வந்து நின்று பேச முயன்றனர்.)*

பிற்பகல் *1–10*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை பார்க்கும் மக்கள் என்ன கேட்கிறார்களென்று சொன்னால். . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)* அதற்குப் பிறகு கிளாரிபிகேஷன் ஏதாவது இருந்தால் பேசலாம். *(குறுக்கீடுகள்)* அவர் பேசி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)* இல்லை, அவர் பேசி முடிக்கட்டும். வாய்ப்புத் தருகிறேன்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்திகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற மக்கள் என்ன கேட்கிறார்களென்று சொன்னால். . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும், வாய்ப்புத் தருகிறேன். அவர் பேசி முடித்த பிறகு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* இப்போது வாய்ப்புத் தர முடியாது. அவர் பேசிக்கொண்டிருக்கிறார். இடையிலே வாய்ப்புத் தர முடியாது. அவர் பேசி முடித்த பிறகு உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். பேசி முடித்த பிறகு நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர், நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்திகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற மக்கள் *(குறுக்கீடுகள்)* என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று சொன்னால், "ஏற்காடு மலை ஏறி எம்.எல்.ஏ. ஆக

முடியாதவர்களெல்லாம் Aeroplane ஏறி டெல்லிக்கு ஏன் போனார்களாம்" என்று சொல்லி எள்ளி நகையாடுகிறார்கள். (குறுக்கீடுகள்) அதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இறுதியாக ஒன்றைச் சொல்லி, என் உரையை முடிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்ன பிறகும் நீங்கள் பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும், உட்காருங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றைச் சொல்லி என் உரையை முடிக்கின்றேன். (குறுக்கீடுகள்) கர, கர குரலில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் இறுதியாக வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? திரும்பத் திரும்ப நீங்கள் சத்தம் போட்டுப் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. பேரவைத் தலைவரைப் பார்த்து இதுபோல் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்)

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள், இறுதியாக வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசிக் கொண்டேயிருப்பது முறையல்ல. வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்த பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்த பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் கேட்கும்போது வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருவது என்பது பேரவைத் தலைவருடைய முடிவு.

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் தரையில் அமர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*



இதுவெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) முறையாக நீங்கள் உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள். இல்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. நான் இவ்வளவு சொல்லியும் கேட்காமல் தொடர்ந்து பேரவைத் தலைவரை முற்றுகையிட்டு, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிற காரணத்தினாலே, பேரவைத் தலைவருடைய நிகழ்ச்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினாலே, பேரவைக்குத் தொடர்ந்து தொல்லை கொடுக்கிற காரணத்தினாலே, அவைக் காவலர்கள் தே.மு.தி.க. உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன்.

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

என்னுடைய அனுமதியில்லாமல் தே.மு.தி.க. உறுப்பினர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. டாக்டர் விஜயபாஸ்கர், நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்திகளையெல்லாம் பார்க்கின்ற மக்கள் "ஏற்காடு மலை ஏறி எம்.எல்.ஏ. ஆக முடியாதவர்களெல்லாம் Aeroplane ஏறி டெல்லிக்கு ஏன் போகிறார்களாம்" என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

நான் இறுதியாக ஒன்றைச் சொல்லி முடிக்கின்றேன். கர, கர குரலில் கற்பனைத் தமிழை விற்பனைத் தமிழாய் விற்றுவிட்டு தமிழ்த் தாய்க்கு விலை கண்டவர்கள் மத்தியில் தமிழ்த் தாய்க்குச் சிலை கண்டவர் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக் காவலர்கள், லாபியில் நின்று கோஷம் போடுவதற்கு அனுமதிக்காமல் அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** தமிழ்த் தாய்க்கு விலை கண்டவர்கள் மத்தியில் தமிழ்த் தாய்க்குச் சிலை கண்டவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Times Now தொலைக்காட்சியில் Thiru Arnab Goswami–க்கு அளித்த ஆங்கிலப் பேட்டியில் மாண்புமிகு அம்மா அவர்கள் இப்படி கூறுகிறார்கள். "வாழ்க்கையை அதன் பாதையிலே சந்தித்து வருகின்றேன்; அரசியலில் எனக்கென ஓர் எதிர்காலத்தை நான் திட்டமிட்டது இல்லை; அரசியலுக்காகத் தயார்படுத்திக் கொண்டதும் இல்லை; இப்படியெல்லாம் வர வேண்டுமென்று எப்போதும் விரும்பியதுமில்லை;" ஒரு முறையல்ல, மூன்று முறை முதலமைச்சராக ஆகியிருக்கின்றேன். "I don't have any national ambition for myself. I have an ambition for my country. I want my country, I want India to be the super power in the world, not one of the super powers, the super power in the world." (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, எனக்கு தேசிய அளவில் இலட்சியம் ஏதுமில்லை; ஆனால், இந்தியாவுக்கென ஒரு இலட்சியம் உள்ளது. உலகிலேயே இந்தியா வலிமைமிக்க வல்லரசாக, வலிமைமிக்க ஒரே வல்லரசாக வர வேண்டுமென நான் விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வலிமையைக் கொண்டுவர தேசப்பற்றுமிக்க, உறுதியான தலைவர் பதவிக்கு வர வேண்டுமென்று எங்கள் அம்மா அவர்கள் தேசப்பற்று உறுதியோடு பதிலளித்த அந்தப் பேட்டியைக் கண்டோம்; புளகாங்கிதம் அடைந்தோம்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பேட்டியிலே உதிர்த்த வார்த்தைகள் எல்லாம் ஏதோ வாக்கியத்தை வடிவமைத்துத் தரும் வெறும் வார்த்தைகள் அல்ல; இந்திய மக்களின் எதிர்கால வாழ்க்கையை வடிவமைக்கக்கூடிய, நிர்மாணிக்கக்கூடிய வைர வரிகள் அவை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேர்பட்ட தலைமையின்கீழ் பணியாற்ற என்ன பாக்கியம் செய்தோம் தாயே! நாங்கள் என்ன பாக்கியம் செய்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) தனக்கென இலட்சியம் கொள்ளாது, தாய் நாட்டின் இலட்சியத்திற்காக தன்னையே அர்ப்பணிக்கத் துணியும் தங்களைத் தவிர, வேறு யார் இனி இந்த இந்தியாவை வழிநடத்த முடியும் என்ற கருத்தை இங்கே நான் முன்வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கேள்வி



எங்கும் எதிரொலிக்கின்றது. இந்தக் கேள்வி நாடெங்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. ஆம், இந்தியாவை வழிநடத்த இப்படிப்பட்ட தலைவரல்லவா வேண்டும் என்பது ஒட்டுமொத்த இந்திய மக்களின் ஏக்கம்; வரும் நாடாளுமன்றத் தேர்தல் அந்த ஏக்கத்தைத் தீர்க்கும்; இது தீர்க்கம். அம்மா! தாயே! எங்கள் உதிரத்தின் ஒவ்வொரு துளியும், உயிர்த் துடிப்பின் ஒவ்வொரு நொடியும் உமக்கென்றே கொண்டுள்ளோம் தாயே! உமக்கென்றே கொண்டுள்ளோம் தாயே! எமக்கென்று வாழ்ந்து வரும் உத்தமத் தாய் தங்களுக்கு செய்நன்றி மறவாது, செஞ்சோற்றுக் கடன் தீர்க்க எம்மோடு, எம் பரம்பரையின் ஒட்டுமொத்த ஆயுள் காலமும் ஒருபோதும் போதாது, அம்மா. ஒருபோதும் போதாது. அம்மா, நாங்கள் கண்மூடி சாகும்போதும், கனல்மீது வேகும்போதும், தங்கள் முடி ஆளும் சூழல் ஒன்றே போதும், எம் குடி வாழும், தமிழ்க் குடி வாழும், நாளை இந்தியக் குடி வாழும்; இது சத்தியம் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு அப்படித்தான் வர வேண்டும். (குறுக்கீடு) கீழிருந்துதான் வர வேண்டும். (குறுக்கீடு) கட்சித் தலைவர்கள்தானே. (குறுக்கீடு) இல்லை, இன்றைக்கு கட்சித் தலைவர்கள்தானே. (குறுக்கீடு) கீழிருந்துதானே வரும். (குறுக்கீடு) இன்றைக்கு முழுவதும் எதிர்க்கட்சித் தலைவர்கள்தான் பேச வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மானியக் கோரிக்கையின்போது இங்கிருந்து வரும். (குறுக்கீடு) இல்லை, எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசுகிற வரிசை, அங்கிருந்துதான் வர வேண்டும். அங்கிருந்துதான் வரும். முறை அதுதானே. (குறுக்கீடு) இல்லை, எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசுகிறபோது கீழிருந்து வருவதுதான் முறை. (குறுக்கீடு) அந்த ஆர்டர்தான். சரியாக இருக்கிறது. (குறுக்கீடு) இன்றைக்கு சரியாகத்தான் போடப்பட்டுள்ளது. (குறுக்கீடு) இன்றைக்கு அந்தக் கணக்கு இல்லை. முன்பு பேசிய இருவரும் சட்டமன்ற கட்சி உறுப்பினர்கள். தற்பொழுதுதான் எதிர்க்கட்சித் தலைவர்களின் வரிசை ஆரம்பிக்கிறது. (குறுக்கீடு)

எதிர்க்கட்சிகள் தலைவர் வரிசை இப்பொழுதுதான் ஆரம்பித்துள்ளது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் பேச ஆரம்பித்து, பிறகு வரிசையாக உங்களுக்கு வரும். இன்றைக்கு நீங்கள் பேசி முடிக்க வேண்டும். நாளை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் பேசி நிறைவு செய்வார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்த கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே எங்கள் கருத்துகளைப் பதிவு செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பினைத் தந்திருக்கிற தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

சற்றேறக்குறைய 1½ இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டுக்கு செலவழிக்கிற வகையிலே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே முதல் துணை நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். தமிழக சட்டமன்ற வரலாற்றிலே இந்த அளவிற்கு மிக அதிகமான நிதி ஒதுக்கீடு, 1½ இலட்சம் கோடி ரூபாயை எட்டுகிற அளவிற்கான ஒரு நிதி ஒதுக்கீடு இதுவரையிலே அமைந்ததில்லை. அப்படிப்பட்ட ஒரு நல்ல முயற்சியை முன்வைத்திருக்கிற மிகச் சிறந்த, தலைசிறந்த நிருவாகியான, மிகச் சிறந்த, தலைசிறந்த மக்கள் நலப் பணியாளரான, போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலினாலே இத்தகைய நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது என்கிறபோது நான் உண்மையாகவே இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே பாராட்டுவதற்கு, எடுத்துச் சொல்வதற்கு, நன்றி கூறுவதற்கு ஏராளமான கூறுகள் இருந்தாலும்கூட, நான் அவற்றைக் குறிப்பிடுவதற்கு முன்னால், அவற்றையெல்லாம் தெளிவாக எடுத்துரைப்பதற்கு முன்னால், ஒரு சிலவற்றை இங்கே பதிவு செய்வது என்னுடைய கடமையாக இருக்குமென்கிற உணர்வோடு சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



தமிழகத்திலே ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள், தமிழக மக்கள் தொகையிலே 20 சதவிகிதம் பேர் இருக்கிறோம். 20 சதவிகிதம் பேர் என்பது தமிழக மக்கள்தொகையிலே ஐந்திலே ஒரு பங்கு. இந்த ஐந்திலே ஒரு பங்கு மக்களில் 80 சதவிகித மக்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழே இருக்கிறவர்களாக இருக்கிறார்கள். இந்த மக்கள்தான் உழைப்பு, உற்பத்தி, அரசியல், வேளாண்மை என பல களங்களிலும் மிகையானவர்களாக, முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறவர்களாக இருக்கிறார்கள். இந்த மக்களின் வளர்ச்சி என்பது, ஒட்டுமொத்தத் தமிழர்களின் வளர்ச்சியாக, ஒட்டுமொத்த மாநில மக்களின் வளர்ச்சிக்காக இருக்கக்கூடும் என்பதனாலே, அந்த மக்களின் வளர்ச்சிக்கும், இந்த மக்களின் நலன்களுக்கும் பிற்காலத்திலே வழிகோலுவதற்குத் துணையாக நிற்கும் என்கிற உணர்வோடு நான் சிலவற்றை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்த மக்கள்தொகை 20 சதவிகிதமாக இப்போது இருக்கிறபொழுது, இடஒதுக்கீடு என்பது 18+1. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18; மலைவாழ் மக்களுக்கு 1 என்று 19 ஆகத்தான் இருக்கிறது. ஆனால், சட்டபூர்வமாகவே 20 சதவிகித மக்கள்தொகை இருப்பதாக நம்முடைய மாநில அரசின் புள்ளிவிவரம் சொல்கிறது. ஆகவே, மாநில அரசின் அதிகாரத்திற்கேற்ப மத்திய அரசின் அனுமதியோடு இடஒதுக்கீட்டை உயர்த்துவதற்கு நமக்கு உரிமைகள் இருப்பதனாலே இதை 20 சதவிகிதமாக உயர்த்திட வேண்டுமென்கிற நெடுநாளைய கோரிக்கையை, நீண்ட நாள் கோரிக்கையை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். இப்படி சிலவற்றை எல்லாம் நான் எடுத்து வைப்பதற்குக் காரணம், சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் இதற்கு விடியலோ, தீர்வோ எப்பொழுது கிடைக்கும் என்றால், எப்பொழுதெல்லாம் தமிழகத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராக வந்திருக்கிறார்களோ, அப்பொழுதுதான் இந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்திருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்திலே நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். நம்முடைய துணை நிதிநிலை அறிக்கையிலே, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கு, அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காக 543 கோடி ரூபாயை நாம் ஒதுக்கியிருக்கிறோம். இன்னும்கூட Special Component Plan–சிறப்பு

உட்கூறு திட்டத்தின் அடிப்படையிலே நிதி ஒதுக்கலாம். நான் ஒன்றை இங்கே சொல்லியே ஆகவேண்டும்.

செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள கிராமத்திலே முதுகலைப் பட்டம் பெற்ற தாழ்த்தப்பட்ட ஒரு மாணவன் அமெரிக்கா சென்று தன்னுடைய மேல் படிப்பை, ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்பி அதற்காக விண்ணப்பித்தபோது, அந்த விண்ணப்பம் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, அதில் முடக்கம் ஏற்பட்டது. அப்போது நான் உள்பட இங்கேயிருக்கிற பொதுவுடைமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் பரிந்துரைத்தோம். முதல்முறையாக ஒரு ஆதி திராவிட மாணவன் அமெரிக்கா சென்று படிப்பதற்கு ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவழித்து, இன்றைக்கு உதவி புரிந்திருக்கிறார்கள் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையாகவே, தமிழகத்திலே இருக்கிற ஒன்றரை கோடி ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–25

ஒரு தனிப்பட்ட மாணவனுக்கு ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அவன் உயர் கல்வி பெறவேண்டும்; அமெரிக்காவை வெறும் வரைபடத்திலோ, மடிக்கணினியிலோ, திரைப்படத்திலோ அல்லது செய்தித்தாள்களிலோ பார்த்தறிந்திருந்த அவன், இன்றைக்கு அந்த அமெரிக்க மண்ணுக்குப்போய், மேல் படிப்பு பெற்று, ஆராய்ச்சி படிப்பு முடித்து, முனைவர் பட்டத்தோடு தாயகம் திரும்புகிற வகையிலே, ஒரு தாயாக, 'உன் உணர்வுகள் தளர்ந்து போகாமல், உன் முயற்சிகள் வீணாகப் போகாமல், உன் எண்ணம் வெறும் கனவாகப் போகாமல், அதை நிறைவேற்றித் தருவதற்கு நான் இருக்கிறேன்' என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக அந்த உத்தரவைச் சட்டமன்ற உறுப்பினராகிய என்னுடைய பரிந்துரையின் பேரில் வழங்கியிருக்கிறார்கள் என்று நினைக்கிறபோது, நான் அவர்களை எவ்வளவு வாழ்த்தினாலும், வரவேற்றாலும், பாராட்டினாலும் தகும்.



எந்தவொரு பொருளாதார வளர்ச்சியையும் இந்த அரசு செய்யலாம். ஆனால், கல்வி வளர்ச்சியை தாழ்த்தப்பட்ட, தலித் மக்களுக்குத் தராத வரையிலே, அவர்கள் முழுமையான விடுதலையைப் பெற முடியாது. ஆகவே, கல்வியைத் தருவதுதான் ஒரு அரசாங்கத்தின் முதல் பணியாக இருக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தின் தந்தை பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே, பாபா சாகிப் அம்பேத்கரைப்போல இன்னும் பல நூறு அம்பேத்கர்கள் உருவாகிற வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறபோது, அதற்காக நன்றி கூறி பதிவு செய்வது மிக மிகத் தேவை என்பதனாலே, அதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்த காலத்திலே, அன்றைக்கு Protector of Depressed Classes என்று சொல்லப்படுகிற, தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலர் என்று முதன்முதலாக ஒரு ஆணையர், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நியமிக்கப்பட்டார். பிரிட்டிஷ் காலத்திலேயே இப்படிப்பட்ட ஒரு பதவி இருந்தது. Protector of Depressed Classes என்கிற ஒரு பதவி இருந்தது. அந்தப் பதவியில் இருந்தவராலே வழங்கப்பட்ட நிலங்களெல்லாம் Depressed Classes Land (D.C. Land) என்று இன்றைக்குப் பதிவேடுகளிலே இருக்கின்றது. அப்படி அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட 12 இலட்சம் ஏக்கர் நிலம், இன்றைக்குப் பல்வேறு கைகள் மாறி, அதனுடைய நிலை மாறி, பல ஆக்கிரமிப்பாளர்களிடம் இருக்கிறது. ஆகவே, அந்த நிலங்களையெல்லாம் மீட்டெடுக்க வேண்டும் என்று பல கோரிக்கைகள் வெளி அரங்குகளிலேயும் இருந்து கொண்டிருக்கிறது. இதற்காகப் பல இயக்கங்களும் உருவாகியிருக்கின்றன. இந்தக் கோரிக்கைகள் பல நேரங்களிலே அப்படியே அடங்கிப் போயிருக்கின்றன. அடக்கப்பட்டிருக்கின்றன. சில நேரங்களிலே பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன.

1996–லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே, அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே, 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், பஞ்சமி நில மீட்பு ஆணையத்தை உருவாக்குவோம்' என்று சொன்னார்கள். 1996–லே சொன்னவர்கள், 2001–லே, பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஆட்சி முடிகிற கடைசி

தருவாயிலே, பஞ்சமி நில மீட்பு ஆணையம் என்று ஒரு ஆணையத்தை உருவாக்கினார்கள். வழக்கம்போல ஒடுக்கப்பட்ட மக்களைப் பிரித்தாளுகிற வகையிலே, மூவரை அதனுடைய உறுப்பினர்களாகப் போட்டு, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. மருதமுத்து அவர்கள் தலைமையிலே அந்த ஆணையத்தை அமைத்தார்கள். இந்த மருதமுத்து ஆணையம் செயல்படத் தொடங்குவதற்கு முன்பாகவே, நீதியரசர் மருதமுத்து அவர்கள் மறைந்துவிட்டார்கள். அந்த ஆணையம் அப்படியே செயலிழந்துவிட்டது. அதற்குப் பிறகு அந்த ஆணையம் எந்தவித அதிகாரமும் இல்லாமல், செயலிழந்துவிட்டது. போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக தமிழகத்திலே ஆட்சிக்கு வந்தபோது, ஒரு அற்புதமான திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். இரண்டு ஏக்கர் நிலம் வாங்குவதற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் எவரேனும் முன்வந்தால், அவர்கள் விண்ணப்பித்தால், அதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் மானியமாகத் தந்து, மீதியைக் கடனாகத் தரலாம் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னாலே வந்த அரசு அதைக் கிடப்பிலே போட்டுவிட்டது.

*பிற்பகல் 1–30*

பஞ்சமி நிலம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கான நிலம். அது எந்த வகையிலோ, எத்தனை கை மாறினாலும், அதற்குச் சொந்தமானவர்கள் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள்தான் என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஓய்வு பெற்ற நீதியரசர் சந்துரு அவர்கள் இதற்காக ஒரு நீண்ட தீர்ப்பையே வழங்கியிருக்கிறார்கள். இந்த நிலையிலே பஞ்சமி நில மீட்பு ஆணையத்தை நாம் மீண்டும் உருவாக்கி, மறைக்கப்பட்டிருக்கின்ற 12 இலட்சம் ஏக்கர் பஞ்சமி நிலத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அந்த ஆணையத்தை உருவாக்குவதற்கு நமக்கு நிருவாகச் சிக்கல்கள் ஏற்படுமேயானால் மாண்புமிகு அம்மா அவர்கள் 2001–ல் கொண்டுவந்த திட்டமான, 2 இலட்சம் ரூபாய் மானியத்தோடு 2 ஏக்கர் நிலம் வாங்குவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிக் கடன் வழங்கப்படும் என்ற அந்தத் திட்டம் அதற்குப் பின்னர் வந்த ஆட்சியிலே செயலிழந்திருக்கிறது; அதையாவது மீண்டும் ஒரு இலக்கோடு, ஒரு தொகையோடு நிர்ணயிக்க வேண்டும் என்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், இப்பொழுதெல்லாம் ரியல் எஸ்டேட் தொழில் மிகப் பெரிய அளவிற்கு, ஒரு ஆதிக்கத் தொழிலாக, மாநில அளவில் அல்ல, தேசிய அளவில் அல்ல, சர்வதேச அளவிலே, உலகளாவிய அளவிலே அப்படியொரு ஆதிக்கம் இன்று ரியல் எஸ்டேட் தொழிலிலே இருக்கின்றது. ஆகவே, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை பெறுவதிலே, நகர்ப்புறங்களிலே அவர்களுக்குரிய 3 சென்ட் நிலம் பெறுவதிலே ஏகப்பட்ட சிரமங்கள் உருவாகின்றன. இப்பொழுது இருக்கும் நிலையில், இப்பொழுது விற்கிற விலைக்கு அரசாங்கம் பணம் தந்து, அரசாங்கத்தின் மதிப்பீட்டிற்கேற்றவாறு நிதி ஒதுக்கித் தந்து, அந்த நிலத்தைப் பெற்று உரிய தாழ்த்தப்பட்டவருக்கு 3 சென்ட் நிலத்தை வழங்க முடியுமா என்பது ஒரு கேள்விக்குறியாகவே ஆகிவிட்டது. அந்த அளவிற்கு ரியல் எஸ்டேட் ஆதிக்கம் செலுத்துகிறது. ஆகவே, ஒன்று பஞ்சமி நில மீட்பு ஆணையத்தை நாம் உருவாக்க வேண்டும் அல்லது அம்மாவின் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு நாம் வழிவகை செய்யவேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். இன்னும் நிறைய பேர் பேசவேண்டியிருக்கிறது.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** அதைப்போலவே, தமிழக தேர்வாணையத் தேர்வுகளிலே, முதல் நிலை, இரண்டாவது நிலை, மூன்றாம் நிலைத் தேர்வுகள் இருக்கின்றன. முதல் நிலைத் தேர்வைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 35 வயது வரையறை என்றும் இருக்கிறது. முதல் நிலைத் தேர்வுகளைப் பொறுத்தவரையில், ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகின்ற தேர்வாக இல்லை. சில நேரங்களிலே 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற அளவில், ஏற்படுகின்ற பற்றாக்குறையை, தேவையைப் பொறுத்துதான் இந்தத் தேர்வுகள் அமைகின்றன. இத்தேர்வுகள் உடனடியாக, ஆண்டாண்டுக்கு நடக்கின்ற தேர்வுகளாக இல்லை. சந்தர்ப்பவசமாக,

32 வயதை எட்டியிருக்கும் ஒருவர் இந்தத் தேர்வை எழுதத் தொடங்கி, முதல் தேர்வுக்குப் பின்னால் அதில் ஒருவேளை தோல்வி காண்பாரேயானால், அடுத்த முறை தேர்வு எழுதவே வாய்ப்பில்லாமல் போகும். ஆகவே, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத்தின் முதல் நிலைத் தேர்வை எழுதுவதற்கு 40 அல்லது 45 வயதை உச்ச வரம்பாகக் கொள்ளலாம். இப்பொழுது வேலைவாய்ப்புத் துறையில் 45 வயதை நாம் உச்ச வரம்பாக வைத்திருக்கிறோம். வேலை கொடுப்பதைப் பொறுத்தவரையில், இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் அந்த வயது வரம்பினை நாம் உயர்த்தியிருக்கிறோம். ஆகவே, அந்தத் தேர்வுகளுக்கான வயதினையும் உயர்த்தினால், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வசதியாக இருக்கும் என்கின்ற அந்த உணர்வோடு, இதுகுறித்து மாநில அரசு பரிசீலிக்க வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன்.

ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆசிரியர் தேர்வு வாரியத்தில் மதிப்பெண்கள் அடிப்படையில்–இது ஒரு தேசிய கொள்கை என்ற அடிப்படையில் ‘TET’ அடிப்படையில் அந்தத் தேர்வு நடைபெறுகிறது. அந்தத் தேர்வு ஒட்டுமொத்தமாக இடஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் நடத்தப்படுகிறது என்றாலும், வேலைவாய்ப்பு நியமனம் என்று வருகின்றபொழுது, மதிப்பெண்கள் அடிப்படையில் நியமனம் வருகிறது என்பதால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உடனுக்குடன், சரியான சந்தர்ப்பத்திலே வேலைவாய்ப்பு வழங்குவதில் ஒரு பின்னடைவு ஏற்படுகிறது. ஆகவே, அதை முறையாக, every stroke–கிலும் every batch–லும் தாழ்த்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடு அமைவதற்கான உரிய நடவடிக்கையை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை இங்கே நான் அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

இதைப்போன்ற சில பிரச்சினைகளைச் சரியான நேரத்தில் இந்த அவையிலே பதிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டுவருகின்றபோது, நான் கடந்த காலத்திலும் பார்த்திருக்கிறேன், நிகழ்காலத்திலும் பார்த்திருக்கிறேன், மிகச் சரியான தீர்வு இந்த மக்களுக்குக் கிடைக்கும். ஒரு ஆதரவுக்கரமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்



விளங்குவதால், அவர்களுடைய வளர்ச்சிக்கு அவர்கள் எப்போதும் உறுதுணையாகச் செயல்பட்டிருக்கிறவர் என்கிற வகையிலே இந்தப் பிரச்சினைகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*பிற்பகல் 1–35*

இந்த நிதிநிலை அறிக்கை மிகச் சிறப்பான ஒரு நிதிநிலை அறிக்கை. இந்திய அளவிலே 28 மாநிலங்களிலே, தொழில் வளர்ச்சியிலானாலும், சட்டம்–ஒழுங்கிலானாலும், வேளாண்மை உற்பத்தியிலானாலும், நிருவாகத் திறனிலானாலும் எதைத் தொட்டாலும் அதிலே தமிழக அரசு முன்னணி மாநிலமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்திய நாட்டிற்கே வழிகாட்டும் ஒரு மாநிலமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதைக் கடந்த மூன்று ஆண்டு கால இந்த அரசின் நிதிநிலை அறிக்கைகளும், அரசினுடைய நடவடிக்கைகளும் மிகத் தெளிவாகப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சட்டமன்றத்திற்கு ஆதாரமாக இருக்கக்கூடியது மக்கள் மன்றம். மக்கள் மன்றம் ஒவ்வொரு முறையும், இந்தச் சட்டமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு மிகச் சிறப்பான ஆதரவைத் தந்து கொண்டிருக்கிறது. சங்கரன்கோவிலைப்போல, புதுக்கோட்டையைப்போல, ஏற்காட்டிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மூன்று ஆண்டு கால மக்கள் நலப் பணிகளுக்கான திட்டங்களின் மூலமாக, மகத்தான வெற்றியை, மாபெரும் வெற்றியை அந்தத் தொகுதிக்கு ஈட்டித் தரும். அதுதான் மக்கள் மன்றத்தினுடைய ஆதரவு, சட்டமன்றத்தினுடைய ஆதரவு. அப்படி மக்கள் மன்றத்திலே, மகத்தான ஆதரவைப் பெற்றிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்ல நடவடிக்கைகள் தொடர்வதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இருக்கிற இந்தச் சிறப்பான செயற்கரிய திட்டங்களுக்குப் பாராட்டுகளையும் இந்த நேரத்தில் பதிவு செய்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் இடஒதுக்கீடு முறையில் தேர்வு பெற்ற,

ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்றும், சில தடைகள் அதில் இருப்பதாகவும், சிலர் பின்தங்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாகவும் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். ஆசிரியர் தகுதித் தேர்வைப் பொறுத்தவரையில் தேசிய கல்விக் குழுமம், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் என்பது சில தகுதிகளின் அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று 2010 ஆம் ஆண்டில் ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கின்றது. அதன் அடிப்படையிலேதான், இப்பொழுது ஆசிரியர் தகுதித் தேர்வுகளை நடத்தி, ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அப்படி தகுதித் தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்களை, முறையான இடஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் ஆசிரியர்கள் தேர்வுசெய்யப்பட்டு பணியமர்த்தப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சமி நிலங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பஞ்சமி நிலங்களை, சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு வழங்குவதில் அரசினுடைய நிபந்தனை மீறப்பட்டிருந்தால், அதனை ஆய்வு செய்து, அரசின் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஓராண்டு காலத்திலே மட்டும், தமிழகத்தில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 25,565 வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சாதனை படைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ச்சி பெற்ற பிற்பாடு இடஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



தெரிவித்தார்கள். நன்றி. ஆனால், தேர்ச்சி பெறுவதற்குத்தான் இடஒதுக்கீடு தேவைப்படுகிறது. பல்லாயிரம் ஆண்டு காலம் அடித்தட்டில் வாழ்ந்திருக்கக்கூடிய தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் இவர்களுக்கான தேர்ச்சிக்கு இடஒதுக்கீடு தேவைப்படுகிறது. அது பல்லாண்டுக் காலமாக தமிழக அரசால் பின்பற்றப்பட்டு வந்த ஒரு நடவடிக்கையாகும். ஆகவே, தேர்ச்சி பெறுவதற்கே இடஒதுக்கீட்டைக் கொண்டு வரவேண்டும். மற்ற மாநிலங்களில் இது அமல்படுத்தப்படுகிறது. உச்ச நீதிமன்றத்தின் வழிக் காட்டுதல் இருந்தாலும், மத்திய அரசினுடைய வழிக் காட்டுதல் இருந்தாலும், மற்ற மாநில அரசுகள் இதனைப் பின்பற்றுகின்றன. ஆகவே, அதனை நம்முடைய தமிழக அரசும் பின்பற்ற வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர். (குறுக்கீடு) நீங்கள்தான் பேசப் போகிறீர்களே டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேசும்போது சொல்லுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ச்சி பெறுவதற்கே இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பது முறையற்றது. பொதுவாக குழந்தைகளுக்குக் கல்வி என்பது அவசியம். அவர்களுக்குத் தகுதியான கல்வி போதிக்க வேண்டும். ஆகவே, அவர்கள் படிப்பதற்கு வழங்கப்படும் இடஒதுக்கீடு என்பது வேறு. படிப்பதற்கு, கல்வியறிவு பெறுவதற்கு இடஒதுக்கீடு சலுகைகள் வழங்குவது என்பது வேறு; ஆனால், ஒரு முறையான கல்வியை, தகுதியான கல்வியைப் பெறுவதற்கு இடஒதுக்கீடு என்பது தேவையற்றது. அதிலே அவர்களுக்குத் தேர்வு வைத்து, அந்தக் கல்வியைப் போதிப்பதற்கு தகுதியானவர்கள் யார் என்பதைத் தேர்ந்தெடுத்து, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கல்வியைக் கற்றுக் கொடுத்தால்தான், குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டிய கட்டாயக் கல்வி, அந்த உரிமை போய்ச் சேர வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்தக் கட்டாயக் கல்வி அமல்படுத்தப்படுகிறது. அதிலும் தேசிய கல்விக் குழுமம், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் ஒரு விதியை வைத்திருக்கிறார்கள். அரசே நடத்துகிற பள்ளியாக இருந்தாலும்

சரி, தனியார் நடத்துகிற பள்ளியாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களுக்கான தேர்வை வைத்து, யார் யாரெல்லாம் ஆசிரியர் பணிக்குப் போக விரும்புகிறார்களோ, அவர்களுக்கு ஒரு தகுதித் தேர்வு வைத்து, அந்தத் தகுதித் தேர்வின் அடிப்படையில் குழந்தைகளுக்குப் பாடம் நடத்துவதற்கு தகுதி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்து தகுதியுள்ளவர்களை வைத்து அந்தக் குழந்தைகளுக்கு;க் கல்வி கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இது கொண்டுவரப்பட்டது.

பிற்பகல் 1–40

இடஒதுக்கீடு என்பது வேலைவாய்ப்புக்கு மட்டும்தான். இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்களுக்கான மார்க்குகளைக் குறைப்பது என்பது தேவையற்றது. இது குழந்தைகள் நல்ல முறையிலே படிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட திட்டம். ஆகவே, குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கத் தகுதி இருப்பவர்களைத் தேர்வு செய்து ஆசிரியர்களாகப் பணியமர்த்துவதில் தவறில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14–வது சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மூன்றாவது முறையாக வெற்றி பெற்று முதல்வரான பிறகு தமிழ்நாட்டு மக்களினுடைய கோரிக்கைகளை எல்லாம், அவர்கள் கோரிக்கை வைக்காதபொழுதே தேர்தலில் வாக்குறுதியாகத் தந்து, தந்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றி இந்தியாவிலேயே ஜனநாயக அரசியலை எப்படி மாண்புடன் நடத்திட வேண்டுமென்பதற்கு உலகத்திற்குச் சான்றாக விளங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலம் இரண்டரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலே, சொன்ன வாக்குறுதிகளை திட்டங்களாக மக்களுக்குச் சென்று சேர்ப்பதிலே அரசு நிருவாகம் முனைப்போடு செயலாற்றி வருவது நம்முடைய இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே மிகச் சுருக்கமாகவும், அதேசமயத்தில் பொருள்படவும் தெரிவிக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குறிப்பாக, இந்திய அரசியல் வரலாற்றில் நிதிநிலை அறிக்கையிலேயோ அல்லது ஆளுநர் அறிக்கையிலேயோ அரசின் கொள்கை விளக்க நிலைகளிலேகூட இல்லாத மக்களுடைய சில பிரச்சினைகளை அரசு நிறைவேற்றி இருக்கிறது என்பதற்குச் சான்றாக, இந்திய அரசியல் ஆட்சித் துறை வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு வறட்சியினாலே பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு 1,000 கோடி ரூபாய்க்கும் மேலாக அள்ளித் தந்து விவசாயிகளுடைய துயரத்தை, துன்பத்தைப் போக்கிய ஒப்பற்ற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு; மகிழ்ந்து பாராட்டப்பட வேண்டிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

சாமானிய மக்கள், சுதந்திரம் பெற்று 65 ஆண்டுகள் கடந்த பின்பும்கூட, வருவாய் ஆவணங்களைக் கோரி விண்ணப்பித்து இன்னமும் வருவாய் அலுவலகங்களிலே காத்துக் கிடக்கின்ற நிலைமையை மாற்றி மக்களின் வசிப்பிடங்களுக்கே சென்று வருவாய் ஆவணங்களைத் தந்து மக்களினுடைய துன்பத்தை, சிரமத்தைப் போக்குவதற்காக கொண்டுவரப்பட்ட திட்டம்தான் அம்மா திட்டம். அந்தத் திட்டத்தின்மூலம் வருவாய் ஆவணங்களை உடனுக்குடன் ஏழையெளிய மக்களுடைய, (மேசையைத் தட்டும் ஒலி) சாமானிய மக்களுடைய கரங்களில் கொண்டு சேர்க்கின்ற அரசு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

அதுபோன்று, முதலமைச்சருடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இந்தியாவிலேயே வேறு எந்த அரசாலும் இவ்வளவு செம்மையாகப் செயல்படுத்தப்படவில்லை. நட்சத்திர விடுதிகளைச் சொந்தமாக வைத்திருக்கின்ற பெரிய செல்வந்தர்கள், மிகப் பெரிய தொழிலதிபர்கள் எல்லாம் பெறுகின்ற மருத்துவ வசதியை, சாமானிய கடைசி மனிதனும் அதுபோன்ற உயர்ந்த மருத்துவமனைகளுக்குச் சென்று இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சையை முடித்துக்கொண்டு, நோய் களைந்து அவன் மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக உயிர் வாழ்வதற்கு உத்தரவாதத்தைத் தந்த ஒரே அரசு, இந்தியாவிலேயே, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான். அப்படிப்பட்ட இந்த அரசினுடைய காப்பீட்டுத் திட்டத்திற்குப் பெயர் முதலமைச்சருடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.

[திரு. உ. தனியரசு] [2013 அக்டோபர் 29

நோய் களைந்து உயிர்க் காக்கும் மக்களுக்கான இந்தக் காப்பீட்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மாவின் பெயரைச் சூட்டுவதுதான் சாலச் சிறந்தது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏனென்றால், ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் நோயிலே சிக்கித் தவித்த சாமானிய மக்களுக்கு இப்போது நோய் என்றால் என்னவென்றே தெரியாத அளவிற்கு, நோய் வரும் முன்பே கண்டறிய முடிகிறது. நோய் வந்த பின்பு காப்பீட்டுத் திட்டத்தினுடைய நோக்கம் நிறைவேறும் வகையில் அதற்கான சிகிச்சை தமிழகத்திலே மிகச் சிறப்பாக அளிக்கப்படுகிறது.

பிற்பகல் *1–45*

சாதாரண மூட்டு வலி, இப்போது 40, 45, 50, 55, 60 வயதில் வருகிற மூட்டு வலி, இரண்டு கால்களிலும் இருக்கிற மூட்டுகள் வலியில்லாமல் இருக்க சிகிச்சை பெறுவதற்கு தனியார் மருத்துவமனையில், பெரிய மருத்துவமனை என்று சொல்லக் கூடிய புகழ்பெற்ற மருத்துவமனைகளில் ரூ.3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. இதுபோன்ற அதிக செலவில் செய்துகொள்ளக்கூடிய அறுவை சிகிச்சையைக்கூட நமது அரசு காப்பீட்டுத் திட்டத்திலே செய்துகொள்ளலாமென்பதே பலருக்குத் தெரியாது. ஒரு சாதாரண ஏழை விவசாயி ஒருவருடைய 2 கால் மூட்டையுமே மாற்ற வேண்டிய நிலைமை. அவரிடம் ஒரு கால் மூட்டை மாற்றுவதற்கு மட்டும்தான் பணம் இருக்கிறது; அந்த சிகிச்சைக்குத் தேவையான ஒரு இலட்சத்து 60,000 ரூபாயையும் அவர் கடனாக வாங்கிக்கொண்டு வருகிறார். அப்பொழுது நான் சொன்னேன், அம்மாவினுடைய ஆட்சியிலே, நீங்கள் ஆட்டை விற்று, மாட்டை விற்று, கடனை வாங்கி ஒரு இலட்சத்து 60,000 ஆயிரம் ரூபாயில் மூட்டு மாற்று அறுவை சிகிச்சைக்குச் செல்லவேண்டியதில்லை. அம்மா அவர்களுடைய பொதுக் காப்பீட்டுத் திட்டத்திலே இந்த சிகிச்சையை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். இல்லை, அரசு காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை பெறும்போது தகுதி குறைவான சாதாரண உபகரணங்கள் பொருத்துவார்களென்று மருத்துவர்கள் சொல்வதாக ஊருக்குள் பேசிக்கொள்கிறார்கள் என்றும், பெரிய தனியார் மருத்துவமனையில் சிகிச்சை செய்து கொண்டால் சிகிச்சையும் நன்றாக இருக்கும், நல்ல உபகரணங்களைப் பொருத்துவார்கள் என்றும் அந்த விவசாயி அறியாமையில் கூறினார். நான் மருத்துவரிடமும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடமும் கேட்டேன். இல்லை, மிகப் பெரிய செல்வந்தருக்கு என்ன உபகரணத்தைக் காலில் பொருத்துவோமோ அதே கம்பெனியின்



2013 அக்டோபர் 29] [திரு. உ. தனியரசு]

உபகரணத்தைத்தான் ஏழை விவசாயிக்கும் பொருத்துகிறோம் என்று சொன்னதற்குப் பிறகு, அந்தத் தாயார், அரசு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், ஒரு ரூபாய்கூட செலவில்லாமல் அந்தத் தனியார் மருத்துவமனையிலேயே சிகிச்சை எடுத்துக்கொண்டு பூரணமாகக் குணமாகி நல்வாழ்வு வாழ்கிறார். அப்படி எத்தனையோ தாய்மார்கள், எத்தனையோ முதியவர்கள், எத்தனையோ நோயாளிகள் அரசு காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை பெற்று பலனடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் திட்டத்திற்கு அம்மாவின் பெயரைச் சூட்டிட வேண்டும். அது சாதாரணத் திட்டமல்ல. தினம் தினம் மக்களுக்கு நோயினால் ஏற்படும் துன்பத்தைத் தீர்க்கும் ஒரு மகத்தான திட்டம். அது தமிழகத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுவது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிறப்புகளுக்கெல்லாம் சிறப்பு. அதற்காகவும் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

சட்டம்–ஒழுங்கு. இவ்வளவு கால அரசியல் வரலாற்றிலேயே வேறு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு சாதி மோதலோ, மத மோதலோ, அரசியல் கலவரங்களோ இல்லாமல் மிக அமைதியான ஒரு மாநிலமாகத் திகழ்வது தமிழகம்தான். தமிழகத்தில்தான் உலக நாடுகளிலிருந்து மாணவர்கள் வந்து கல்வி கற்கிறார்கள். இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து இங்கு வந்து கல்வி கற்கிறார்கள். பல்வேறு பகுதிகளிலிருந்து மாணவச் செல்வங்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்து கல்வி கற்பதற்கும், எல்லா வகையான துறைகளிலும் தொழில் செய்வதற்கும், அனைத்துப் பிரிவு மக்களும் மகிழ்வோடு, அமைதியோடு வாழ்வதற்கும் உறுதியைத் தந்த அரசு; சட்டம்–ஒழுங்கைச் செம்மையாகப் பாதுகாப்பதிலே உறுதியான அரசாக இருக்கிற அரசு; பாகுபாடில்லாமல் நடுநிலையோடு செயல்படுகிற அரசாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விளங்கி வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

காவேரி நதிநீர்ப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை ஆகியவற்றில், உச்ச நீதிமன்றம் வரை சென்று, வரலாற்று உரிமையை மீட்டெடுத்தவர் நம்முடைய ஒப்பற்றத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை அரசியலுக்கிடையே நடந்த பிரச்சினையாக இருந்தாலும், காவேரி நதிநீர்ப் பிரச்சினை இரண்டு மாநிலங்களினுடைய பிரச்சினையாக இருந்தாலும், பதற்றமான சூழ்நிலைகளையெல்லாம் மிக மென்மையாகக் கையாண்டு,

தமிழர்களினுடைய பரம்பரை நீர் உரிமையை சட்டபூர்வமாகப் பெற்றுத் தந்த ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

நெய்வேலி பொதுத் துறை நிறுவனத்தினுடைய பங்குகளை மன்மோகன் சிங் தலைமையில் இயங்கும் காங்கிரஸ் அரசு விற்க முயற்சித்தது. தொழிலாளர்கள் பதற்றப்பட்டுப் போராடினார்கள். இந்தியாவினுடைய வரலாற்றிலேயே மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத் துறை நிறுவனத்தினுடைய பங்குகளை மாநில அரசு பெற முடியும், அப்படி பெற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, இந்தியாவிற்கே, ஏன் உலகத்திற்கே ஒரு முன்மாதிரியைத் தந்து, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தினுடைய தொழிலாளர்களுடைய அச்சத்தைப் போக்கி, அந்தப் பங்குகளைப் பெற்று, தமிழர்களின் மானத்தைக் காத்த, ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அல்லவா!

தமிழக மீனவர்களுடைய உயிர்களைப் பாதுகாத்து, தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பிற்கு அம்மா அவர்கள் வந்ததிலிருந்து இதுவரை ஒரு மீனவருடைய முடியைக்கூட சிங்கள இராணுவம் தீண்ட முடியவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தகவல் வருவதற்கே மாண்புமிகு முதல்வர் பதற்றப்பட்டு பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறார். மீனவர்களைப் பாதுகாப்பதற்கு இந்திய இராணுவம் தயாராக இல்லையென்றால், காவல் துறையை அனுப்பியாவது பாதுகாப்புத் தருவேன் என்று ஒரு கட்டத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகக் கவனமாகச் சொன்னார்கள். அதன்பிறகு மீனவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். உடைமைகள் பாதுகாப்பாக இருக்கின்றன.

பிற்பகல் 1–50

தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு ஈரான் நாட்டு சிறைக் கூடத்திலே மாதக் கணக்கிலே கிடந்தபொழுது, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அல்லவா அவர்களை பத்திரமாக மீட்டுவந்து, இலட்சக்கணக்கான ரூபாய் நிதியை அவர்களின் குடும்ப மகிழ்ச்சிக்காகத் தந்து, பாதிக்கப்பட்ட 20–க்கும் மேற்பட்ட மீனவர்கள் படகு வாங்குவதற்கு கோடிக் கணக்கிலே ரூபாயைத் தந்து, மீனவ மக்களுடைய வாழ்வைச் செழிக்க வைத்ததிலும், அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி வளர்ப்பதிலும் மாண்புமிகு



புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகரானவர் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் வேறு யாராவது இருந்தது உண்டா? அப்படி மீனவர்களுக்காக அளப்பரிய நன்மைகளைச் செய்து வருகின்றார்கள்.

ஈழத் தமிழர்கள் ஜனநாயக உரிமையைப் பெறுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தொடர்ந்து குரல்கொடுத்து வருகிறார்கள். ஈழத் தமிழர்களுடைய இன்னலைக் களையவும், ஏற்கெனவே ஈழத்தில் தமிழர்கள்மீது இனப் படுகொலை நடத்திய ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என்று அறிவிக்கவேண்டும், இலங்கையை நட்பு நாடு என்று சொல்வதை நிறுத்திக்கொள்ளவேண்டும், பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும், என்றெல்லாம் இலங்கையை தொடர்ந்து சர்வதேச நிலைகளிலே உரிய நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்காக நம்முடைய சட்டமன்றத்திலே தீர்மானத்தைக் கொண்டுவந்து தமிழர்களுக்குப் பாதுகாப்பு அரணாக இருக்கின்றவர் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தீபாவளிக்கு பொதுத் துறை நிறுவனங்களின் தொழிலாளர்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பே 20 சதவீத போனசினை உடனடியாகத் தந்து தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மணியடிக்கப்பெற்றது) சமூக நலத் துறையின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளில் பொது விநியோக முறை மிகச் சரியாக நடைபெறுகிறதா என்பதை ஆய்வு செய்ய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், எங்களுடைய மாவட்டத்திற்கு வந்தார்கள். அந்த ஆய்வுக் கூட்டத்திலே எங்களுடைய மாவட்டத்தினுடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்களும் கலந்து கொண்டார்கள். அந்தத் துறையிலே, கடைசி மனிதனுக்குக்கூட குடும்ப அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையில்லாமல் விரைவாக, தரமாக கிடைக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்கான கூட்டம் அது. கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு முன்பு, அந்த மாவட்டம் முழுவதும் இருக்கின்ற ஒவ்வொரு ரேஷன் கடைகளிலும் தரமான பொருள்கள் கிடைக்கிறதா என்பதை ஆய்வு செய்தார்கள். அப்போது மண்ணெண்ணெய் ஒருசிலருக்கு தாமதமாக கிடைத்தது, ஒருசிலருக்குக் கிடைக்கவில்லை என்று புகார் வந்த உடனேயே அது ஏன் கிடைக்கவில்லை என்று உச்ச நீதிமன்ற வழக்கறிஞரைவிட கூடுதலாகக் கவனம் எடுத்து விவாதித்து அவற்றைக் கண்டறிந்து

அங்கு முறைகேடாக ஒருசிலர் பெற்றிருந்த ரேஷன் அட்டைகளையெல்லாம் பறிமுதல் செய்து குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுத்தார்கள். அப்படி தங்குதடையில்லாமல் தரமான உணவுப் பொருட்கள் ஏழையெளிய மக்களுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்கின்ற நேர்மையான, வெளிப்படையான நிருவாகம் தமிழகத்தினுடைய ஆட்சித் துறையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலேதான் நடக்கிறது.

நம்முடைய வேதாரண்யம் தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நேற்று வினாவிலே கேட்டார்கள். வேதாரண்யம் அரசு மருத்துவமனையிலே பிரசவம் பார்ப்பதற்கேற்ற வசதி இல்லாத காரணத்தால் நாகைக்கும், திருத்துறைப்பூண்டிக்கும் மக்கள் செல்ல வேண்டிய நிலை இருக்கின்றது. எனவே, வேதாரண்யம் அரசு மருத்துவமனையிலே பிரசவம் பார்ப்பதற்கேற்ற வசதி செய்து தர வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கமான பதிலில் சட்டமன்ற உறுப்பினர் கேட்ட வேதாரண்யம் அரசு மருத்துவமனை பற்றி எதுவுமே இல்லாததால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தானாக முன்வந்து தாய்க்குலத்தினுடைய, கருவுற்ற தாய்மார்களுடைய இன்னல்களை அவர்களின் விருப்பத்தைத் தெரிந்துகொண்டு வேதாரண்யம் அரசு மருத்துவமனையிலே உடனடியாக பிரசவப் பிரிவு தொடங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று எழுந்து நின்று பதில் சொன்னார்கள், அது வரலாறு. அப்படியெல்லாம் கடைசி மனிதனுடைய நலன்களிலிருந்து, உலகளாவிய அரசியல் கோரிக்கைகள்மீதும், கொள்கைகள்மீதும் பற்றுகொண்டு, தமிழ்ச் சமூகத்தின் மீது மாறாத பற்றுகொண்டு, மக்களை நேசிக்கின்ற உத்தமத் தலைவராகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிவருகிறார்கள். ஒன்றிரண்டு சின்ன கோரிக்கைகளை மட்டும் நம்முடைய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். நிறைய பேர் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு பிரச்சினை. ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகம் வசிக்கின்ற ஒரு தெருவிலே 100 வீடுகள் இருந்தால் 5 பேர்களுக்கு வெள்ளை அட்டை இருக்கிறது. இந்த வெள்ளை



அட்டை இருந்தால் மிக்சி, கிரைண்டர், மின் விசிறி கிடைப்பதில்லை. 100 பேர் மகிழ்ச்சியாக வாங்குவதைப் பார்க்கும்போது அந்த 5 பேர்கள் புலம்பிக்கொண்டு இருப்பதைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. அதை மாண்புமிகு அம்மா அவர்களிடம் சொல்லி யாராவது ஏழையாக இருந்து, தகுதியாக இருந்து, வெள்ளை அட்டையைத் தவறாகப் பெற்றிருந்தால் அதை பச்சை அட்டையாக மாற்றி அவர்களுக்கும் அரசினுடைய திட்டத்தைத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்கள் இதனை அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்குக் கொண்டு போகவேண்டும். அது மாதிரி மின் பற்றாக்குறையில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. உ. தனியரசு:** மின் கம்பங்கள் இல்லாமல் 6 மாதம், ஒரு வருடமாக சில பேர் மின் இணைப்பு இல்லாமல் இருக்கிறார்கள். மின் கம்பம் சிறிய விஷயம். அதை உடனடியாகத் தடையில்லாமல் கொடுத்து மின் இணைப்பு கொடுக்கவேண்டும். விவசாயிகள் பாவம், சின்ன சின்ன அளவிலே, கிராம அளவிலே பால் விநியோகம் செய்யும் விவசாயிகள் இப்போது புலம்ப ஆரம்பித்திருக்கிறார்கள். பால் கொள்முதல் விலையை இயன்ற அளவு உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி பாராட்டி நிறைவு செய்கின்றேன். நன்றி வணக்கம்.

*பிற்பகல் 1–55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் துணை நிதிநிலை அறிக்கை விவாதம் நடக்கும் இவ்வேளையில் இந்த அரசு பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவுற்று, ஆயிரக்கணக்கான சாதனைகள் படைத்து, மூன்றாம் ஆண்டில் சாதனைகள் படைத்து வரும் மாண்புமிகு தமிழக

முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் திரு. ரா. சரத்குமார் அவர்கள் சார்பாக பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எங்கள் சமத்துவ மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. ரா. சரத்குமார் அவர்களுடைய தாயார் இயற்கை எய்திய தகவல் அறிந்ததும், தாங்கள் அனுப்பிய இரங்கல் கடிதம் துயரத்தில் ஆழ்ந்திருந்த தலைவர் குடும்பத்திற்கு மிகுந்த ஆறுதல் அளித்தது. தாயுள்ளத்தோடு அவர்களது துயரத்திலும், மன வேதனையிலும் பங்குகொண்ட தங்களுக்கு சமத்துவ மக்கள் கட்சியினுடைய தொண்டர்கள் சார்பாகப் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மக்கள் நலன் கருதி புதிய திட்டங்கள் மற்றும் துணைத் திட்டங்களுக்காக சுமார் ரூபாய் 6 ஆயிரம் கோடிக்கு துணை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகப் பாராட்டுகின்றோம்.

இந்திய திரைப்படத் துறையின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நடத்த, தென் இந்திய திரைப்பட வர்த்தகச் சங்கத்திற்கு ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, வழிகாட்டி, இந்திய வரலாற்றில் இடம் பிடித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வறட்சியை சமாளிக்க விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ஏற்பட்ட செலவினங்களுக்காக 1,046.86 கோடி ரூபாய் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு பொங்கலுக்கு விலையில்லா வேட்டி, சேலைகள் வழங்குவதற்காக பட்ஜெட்டில் 350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் நூல் விலை உயர்வால், கூடுதலாக ரூபாய் 136.36 கோடி இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது வரவேற்கத்தக்கதாகும்.

மேலும், கல்வி உதவித்தொகை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ரூபாய் 549 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.



ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்கு இணை உணவு அளிக்கும் செலவிற்காக வரவு–செலவுத் திட்ட மதிப்பீடான 190 கோடி ரூபாய்க்குமேல் கூடுதலாக ரூபாய் 228.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு சூரிய சக்திகள்மூலம் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்துக்கொடுக்க ரூபாய் 80 கோடிக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

குடிநீர்த் திட்டத்திற்காக ரூ.51.36 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு அளித்துள்ளது. 2,323 தகுதியுள்ள கிராமப்புற வறுமை ஒழிப்பு சங்கங்களுக்குச் சமுதாய முதலுதவி நிதியாக ரூபாய் 10 இலட்சம் வழங்க ரூபாய் 232.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்திற்கு ரூபாய் 260 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரக் காவலர்களுக்கான உணவுப் படி நாள் ஒன்றுக்கு 100 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கின்றது. 10 ரூபாயில் ஒரு லிட்டர் குடிநீர் வழங்கிய அம்மா அவர்களுக்கு நன்றி. அம்மா, இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத மாபெரும் திட்டம் 'அம்மா குடிநீர்த் திட்டம்'. இந்தியத் திருநாடே இத்திட்டத்தைப் பாராட்டுகிறது. 'ஜீவ நதியாய் வருவாள், நம் தாகம் தீர்த்து மகிழ்வாள்' என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கு ஏற்ப (மேசையைத் தட்டும் ஒலி) 'பயணிகளின் தாகத்தைத் தீர்த்து வைத்த அம்மா' என்று கோயம்பேடு பஸ் ஸ்டாண்ட்டில் ஒவ்வொரு பயணியும் சொல்வது மிகவும் சந்தோஷமாக உள்ளது.

தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் மத்திய அரசின் செயல்பாட்டினை எங்களது சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் திரு. ரா. சரத்குமார் அவர்கள் சார்பாக வன்மையாகக் கண்டிக்கின்றோம். மற்றவர்கள் பேசுவது எல்லாம் வேஷம், வெறும் வேஷம் அம்மா. அம்மா உங்கள் கையில் நாளைய பாரத தேசம் என்று சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011, 2012, 2013 ஆகிய இந்த மூன்று ஆண்டுகளில் இந்த மாமன்றத்தில் மிக முக்கியமான மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன.*

*பிற்பகல் 2—00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *ஒன்று, 2008, 2009 ஆம் ஆண்டுகளில், ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து, மனித உரிமை மீறல் புரிந்த அதிபர் ராஜபக்சே அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். சுதந்திரமான சர்வதேச விசாரணை ஆணையத்திற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். கச்சத் தீவு மீட்டெடுக்கப்பட வேண்டுமென்ற தீர்மானங்களைத் தொடர்ந்து கடந்த 24 ஆம் தேதி அன்று இதே அவையில் வரக்கூடிய நவம்பர் மாதம் நடைபெறவிருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்னும் தீர்மானத்தை, சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய கட்சியின் தலைவர்கள் மட்டுமல்ல, உறுப்பினர்கள் மட்டுமல்ல தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆதரவோடு, உலகெங்கும் வாழக்கூடிய, ஆறு கண்டங்களில் வாழக்கூடிய 8 கோடி தமிழ் மக்களின் ஆதரவோடு அந்தத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டது. ஆனால், அந்தத் தீர்மானத்தை சிறிதுகூட மத்திய அரசு கவனத்திலேகொள்ளாமல், இந்திய நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டிலே கலந்துகொள்வார் என்று அறிவித்திருப்பது இந்தச் சட்டமன்றத்தை அவமதித்ததாக நான் கருதவில்லை., உலகெங்கும் வாழக்கூடிய 8 கோடி தமிழ் மக்களையே அவமதித்ததாக நான் கருதுகிறேன். அதை, நான் புதிய தமிழகம் கட்சியின் சார்பிலே இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.*

*2013—2014 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையிலே சில முக்கியமான கருத்துகளை முன்வைக்க நான் கடமைப்பட்டுள்ளேன். கடந்த 2012—2013 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் வடகிழக்கு, தென்கிழக்குப் பருவமழை பொய்த்துவிட்ட வேளையில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக வளர்ச்சி நிவாரணம் ஒதுக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் பல பகுதிகளில் அந்த வளர்ச்சி*



*நிவாரணம் ஏழையெளிய விவசாயிகளுக்குச் சென்றடையவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். குறிப்பாக, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஓடமாக்குளம், மலைப்பட்டி, இளவளந்தாள், கள்ளத்துக்கிணறு, தென்னம்பட்டி, கொத்தாழி, மணியாச்சி போன்ற சுற்றியிருக்கக்கூடிய ஏறக்குறைய 50—க்கும் மேற்பட்ட கிராமங்கள், அதேபோல தெய்வசெயல்புரம், வல்லநாடு உட்பட ஏறக்குறைய 30—க்கும் மேற்பட்ட கிராமங்களில், ஒரு கிராமத்திற்கு ஐந்தாறு விவசாயிகளுக்கு மட்டுமே அந்த நஷ்ட ஈடு வழங்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான விவசாய நிலங்களைக்கூட தரிசு நிலங்களாக தவறுதலாக ** அதிகாரிகள் பதிவு செய்ததன் விளைவாக. . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, ஆதாரத்தோடு பேசுங்கள். பொத்தாம்பொதுவாகப் பேசக்கூடாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *இதுகுறித்த ஆதாரங்களையெல்லாம் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக அதிகாரிகள் கொடுத்து. . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது ** அதிகாரிகள் ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னம்பட்டி, ஓடமாக்குளம், மலைப்பட்டி, கள்ளத்துக்கிணறு, மணியாச்சி, மருதம்பட்டி, கொள்ளங்கிணறு பகுதி கிராம நிருவாக அலுவலகங்களில் விளை நிலங்கள் தரிசு நிலங்களாக அடங்கல் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. இருப்பினும், ஒட்டப்பிடாரம் தொகுதியினைச் சார்ந்த பரிவல்லக்கோட்டை, மணியாச்சி, மலைப்பட்டி, ஓமனாக்குளம், தெய்வசெயல்புரம் மற்றும் வல்லநாடு போன்ற இதர கிராம விவசாயிகளிடமிருந்தும், மாவட்டத்தின் பிற வட்டங்களிலிருந்தும் தங்களது நிலத்தின் புல எண் விடுபட்டதாகவும், புல எண் மாறுபட்டதாகவும் தெரிவித்து, தங்களது நிலங்கள் விடுபட்டதாகவும் தெரிவித்து, பெயர் மாறுபட்டதாகத் தெரிவித்து பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் வட்டாட்சியர்மூலம் கிராம

** மாண்புமிகு பேரவைத் துணை தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2013 அக்டோபர் 29

கணக்குகளில் ஒப்பிட்டும், விசாரணை மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. விசாரணை அறிக்கையின் அடிப்படையில் அரசு வழிகாட்டுதலின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஒட்டப்பிடாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வறட்சி நிவாரணத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஒட்டப்பிடாரம் வட்டத்திலே மட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 15 கோடியே 61 இலட்சத்து 9 ஆயிரத்து 178 ரூபாய் வறட்சி நிவாரணமாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசினுடைய நிதியாக Post-Matric Scholarship என்று அழைக்கப்படக்கூடிய உயர் கல்விக்கான உதவித்தொகை கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் தமிழகத்திலே வழங்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாக, கடந்த இரண்டாண்டு காலத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களிடத்திலே உயர் கல்வியினுடைய எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. அதற்காக தமிழ்நாடு அரசை நான் பாராட்டுகிறேன். அதேசமயத்தில், பெரும்பாலான தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் இந்த நிதியை மாணவர்களுக்கு முறையாக அவர்கள் கொடுப்பதில்லை. உதாரணத்திற்கு 1,000 மாணவர்கள் ஒரு கல்லூரியிலே பயில்கின்றார்கள் என்று சொன்னால், 200 மாணவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொன்னால், ஒரு மாணவருக்கு சராசரி முப்பது ஆயிரம் ரூபாய் என்று சொன்னால், 60 இலட்சம் ரூபாய் வருகிறது. அந்தப் பணத்தை அப்படியே அந்த நிருவாகம் வாங்கி வைத்துக்கொள்கிறது. அந்தப் பணத்தை அவர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டும். கொடுப்பதே இல்லை.



2013 அக்டோபர் 29]

பிற்பகல் 2–05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில் இந்தத் திட்டத்தை, அதாவது உயர் கல்வி பெறுபவருக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தை கொண்டுவந்தவர் மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பது உங்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில், சில தனியார் பொறியியல் கல்லூரிகளில், சில தனியார் மருத்துவக் கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்கள்கூட அரசாங்கத்தினுடைய ஒதுக்கீடு இல்லாமல், Management quota-ல் சேரக்கூடிய மாணவர்களுக்குக்கூட இந்தத் திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு இருக்கக்கூடிய கல்விக் கட்டணம் முழுவதையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு ஏற்றுக்கொள்கிறது. குறிப்பாக, ஆதி திராவிட மாணவர்கள், பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவர்கள், மதம் மாறிய கிறிஸ்துவ மாணவர்களுக்கெல்லாம் அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருவாய் இரண்டரை இலட்சம் ரூபாய்க்கு உள்ளேயிருந்தால், அவர்களுக்குரிய முழு கட்டணத்தையும் நம்முடைய அரசே ஏற்றுக்கொள்ளும். இந்த நிலையில், பொறியியல் கல்லூரிகளில் கவுன்சலிங் மூலமாக சேருகின்ற மாணவர்களாக இருந்தாலும் சரி, அல்லது Management quota-ல் சேரக்கூடிய மாணவர்களாக இருந்தாலும் சரி, தனியார் கல்லூரிகளில் சேருகின்றபோது அவர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது. இதற்கான முழு கல்விக் கட்டணத்தையும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு ஏற்றுக்கொள்கிறது. அப்படி ஏதாவது சில குறிப்பிட்ட கல்லூரிகளில் அந்த மாணவர்கள் கட்டிய கட்டணம் தொடர்பாக கோரிக்கை வந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கல்லூரியில் இந்த மாணவருக்கான கட்டணத்தை வசூல் செய்து வைத்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுத் தெரிவிப்பாரேயானால் அந்தக் கல்லூரிமீது இந்த அரசு விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கும். துறை வாயிலாக அனைத்துக்

கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சுற்றறிக்கையில் ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும், பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கல்விக் கட்டணத்தை வசூல் செய்யக்கூடாது. அரசாங்கமே அந்த முழுக் கட்டணத்தைச் செலுத்திவிடும். அனைவருக்கும் அரசாங்கத்தின் மூலமாக கல்விக் கட்டணம் கட்டப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருசில கல்லூரிகளில் நடக்கக்கூடிய தவறுகளை எதிர்காலத்தில் தடுத்திடும் வண்ணம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

*__திரு. அ. சவுந்தரராசன்:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சுற்றறிக்கையை எல்லாக் கல்விக்கூடங்களுக்கும் அனுப்பியிருப்பதாகக் கூறினார்கள். அந்தச் சுற்றறிக்கை நகலை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுப்பது அவசியம் என்று நான் கருதுகின்றேன். பல நேர்வுகளிலே அது நமக்குக் கிடைக்காமல் போகிறது. பத்திரிகையிலே முழுமையாக இந்தச் சுற்றறிக்கை இடம் பெறுவது இல்லை. ஆகவே, அதுபோன்ற தகவல்களைக் கொடுத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோருகின்றபடி சட்டமன்ற உறுப்பினர்கள் செயல்பட இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் கல்லூரிகள் இந்தக் கட்டணத்தை வசூல் செய்து



வைத்துள்ளார்கள், அவர்கள் திருப்பிக் கொடுக்கவில்லை என்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். அப்படி ஏதாவது ஒரு கல்லூரியில், ஏதாவது ஒரு மாணவரிடத்தில் வசூல் செய்திருப்பதாக ஆதாரத்துடன் கொடுத்தால் அந்தக் கல்லூரிமீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எண்ணற்ற கல்லூரிகளின் பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தர நான் தயாராக இருக்கின்றேன். இந்தத் தவறுகள் நிகழாவண்ணம் தடுத்திட வேண்டுமென்று சொன்னால், மாணவர்களுடைய வங்கிக் கணக்கிலேயே E.C.S. முறையில் இந்தப் பணத்தைச் செலுத்துவது சிறந்ததாக இருக்கும் என்றும், அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கொண்டுவந்ததன் நோக்கம் என்னவென்று பார்க்க வேண்டும். பொதுவாக இந்தத் திட்டம் கொண்டுவந்ததன் நோக்கமே தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள், பழங்குடியின மக்கள் உயர் கல்வியில் சேருகின்றபோது பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கின்றது. சில நேரங்களில் அந்தப் பொருளாதாரம் தடையாக இருப்பதால் அந்த மாணவனால் தொடர்ந்து மூன்று ஆண்டுகாலம், நான்கு ஆண்டுகாலம் அந்தக் கல்விக் கட்டணத்தைக் கட்டமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால்தான் அவர்களுடைய எண்ணிக்கை விகிதம் குறைகிறது. அந்த எண்ணிக்கை விகிதம் குறையக்கூடாது, பாதிக்கப்பட்ட ஆதி திராவிட மாணவர்களும், பழங்குடியின மாணவர்களும் உயர் கல்வியைத் தொடர்ந்து பெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தியாவிலேயே இந்த அற்புதமான திட்டத்தைத் தமிழகத்தில் முதன்முதலாக மாண்புமிகு

அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு பணம், பொருளாதாரம் ஒரு பிரச்சினையாக இருக்கக்கூடாது, பாதிப்பாக இருக்கக்கூடாது என்பதை உணர்ந்துதான் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து தமிழகத்தில் சிறப்பான உயர் கல்வியைப் பெறுகின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 2–10

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** திட்டத்தை நான் குறை சொல்லவில்லை. இந்த அரசினுடைய திட்டங்கள் வரவேற்கக்கூடியவை; பாராட்டக்கூடியவை. இந்தத் திட்டத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகள் முற்றிலுமாகக் களையப்படவேண்டுமென்று சொன்னால், நிருவாகத்திடம் 50 இலட்ச ரூபாய், 60 இலட்ச ரூபாய் முடங்கியிருக்கவிடாமல் ஒவ்வோர் ஆண்டும் அந்த மாணவர்களுடைய வங்கிக் கணக்கிலே செலுத்திவிட்டால் இந்த பிரச்சினையே இருக்காது. எல்லாமே சுமுகமாகிவிடும். அதைமட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகத்தில் இந்தப் பணம் கொடுக்கப்பட்டு, அவர்களுடைய கணக்கில் வைக்கப்பட்டு, சாதிச் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, அந்தக் கல்லூரிகளினுடைய விவரங்களைப் பெற்று அந்த மாணவர்களுக்கு இந்தக் கல்விக் கட்டணம் அனுப்பிவைக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, தயவுசெய்து உரையை நிறைவு செய்யுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அடுத்து, ஆசிரியர் தகுதித் தேர்வில் கடந்த 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகும், 2013ஆம் ஆண்டிலும் சற்றேறக்குறைய 29 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் தகுதி வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. இப்பொழுது மருத்துவக் கல்லூரி, (மணியடிக்கப்பெற்றது) பொறியியல் கல்லூரி, விவசாயக் கல்லூரிகளிலே தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கைக்கு நாம் cut off mark வைக்கின்றோம். மருத்துவக் கல்லூரிகளுக்கு எப்படித் தேர்வு செய்கின்றோமோ அதேபோல, தனியாகத் தேர்வு நடத்த வேண்டும். ஆசிரியர் தேர்விலும் Schedule Caste என்றால் எவ்வளவு, Schedule Tribe என்றால் எவ்வளவு, M.B.C. என்றால் எவ்வளவு, B.C. என்றால் எவ்வளவு என்று தனித்தனியாகப் பிரித்து, ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகத் தேர்வு நடத்த வேண்டும். அண்மையில் தமிழ்நாடு அரசு பார்வையற்றோருக்குத் தனித் தேர்வு நடத்தப்படும் என்று அறிவித்திருக்கின்றது. அதே முறையைக் கையாண்டு இடஒதுக்கீட்டிற்கு எந்தவிதமான குந்தகமும் வராமல் மருத்துவக் கல்லூரித் தேர்வைப்போல, ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கும் நீங்கள் தேர்வு நடத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * மாற்றுத் திறனாளிகளுக்கு, கண் பார்வையற்றவர்களுக்கு இந்த மாதிரி தனித் தேர்வு நடத்தப்படும் என்று ஒரு சலுகை வழங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தனித் தேர்வுகூட அவர்களுடைய மதிப்பெண்களைக் குறைப்பதற்காக இல்லை. தனித் தேர்வர்களை வைத்து சிறந்த முறையில் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, மற்றவர்களுக்கு இணையாக அவர்களும் மதிப்பெண்கள் வாங்கும் அளவுக்கு அவர்களை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

ஆசிரியர் தகுதித் தேர்வுக்குத் தயார்படுத்தி, அவர்களுக்குப் பணி வழங்குகின்ற நோக்கத்தில்தான் இந்தத் தேர்வு நடத்தப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, உரையை நிறைவு செய்யுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *அதாவது இடஒதுக்கீடு என்பது தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் ஏறக்குறைய 60, 70 ஆண்டுகாலமாக இருக்கிறது. ஆசிரியர் தகுதித் தேர்வில் மட்டும் இடஒதுக்கீடு இல்லை என்று சொன்னால் அது ஒட்டுமொத்தமான சமூக நீதிக்கு எதிராக முடியும். ஒருவேளை உச்ச நீதிமன்றம், தீர்ப்பில் 60 சதவிகித மதிப்பெண்கள் பெற வேண்டும் என்று சொல்லியிருந்தாலும்கூட, உச்ச நீதிமன்றத்தில் ஒரு மறு ஆய்வு மனுவை தமிழ்நாடு அரசின் சார்பாகப் பதிவு செய்து, அந்த வழக்கில் விதியைத் தளர்த்தி, தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்களுக்கான இடஒதுக்கீட்டை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு எந்தவிதத்திலும் பாதிக்கப்படாவண்ணம் இடஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். குறிப்பாக 200* point roster *சிஸ்டத்தில்தான் ஆசிரியர்கள் பணியில் நியமிக்கப்படுகிறார்கள். இதில் எந்தவிதமான பாதிப்பும் கிடையாது, எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஆகவே, ஆசிரியர்களுக்கு சில தகுதிகள் இருக்க வேண்டும். தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் தகுதியிருக்கின்ற ஆசிரியர்களைத் தேர்வு செய்து, அவர்களை இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நீங்கள் ஆசிரியர்களாக நியமித்துக் கொள்ளுங்கள் என்று ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது. அதனுடைய அடிப்படையிலேதான், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வை நடத்தி, அதன்மூலம் தேர்வு பெறுபவர்களை, 200* point roster *சிஸ்டத்தின் மூலம் இடஒதுக்கீட்டின்*



*அடிப்படையில்தான் ஆசிரியர்கள் பணியில் நியமிக்கப்படுகிறார்கள். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேச ஆரம்பித்து 14 நிமிடங்கள் முடிந்துவிட்டன. முனைவர் ஜவாஹிருல்லா நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நிறைய நேரம் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) ஏதாவது தொகுதிக் கோரிக்கை இருந்தால் நீங்கள் எழுதிக் கொடுங்கள் அதைப் பதிவு செய்து கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் அதிக நேரம் பேசிவிட்டீர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சரி, பேசுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடஒதுக்கீட்டுக்குப் பாதிப்பில்லாமல் நிரப்பப்படுவதாகச் சொல்கிறார்கள். அதில் நான் கருத்து மாறுபடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உரையை நிறைவு செய்யுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *கடந்த 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் நிரப்பப்பட்ட மொத்த ஆசிரியர் பணியிடங்கள் குறித்து வெள்ளை அறிக்கையைக் கண்டிப்பாக தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டும். ஏனென்று சொன்னால், பொதுவாக ஆசிரியர் பணியிடங்களே கொடுக்கப்படுவதில்லை என்று பெரிய அளவிற்குக் குறைபாடு இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுக்கு விவரமாகக் கொடுத்தார்கள் என்று சொன்னால் அப்பொழுது இந்தக் கேள்வி வராது. ஏனென்றால், இடஒதுக்கீட்டின் அடிப்படையில் முறையாக நிரப்பப்படுவது இல்லை. 4 சதவிகித ஆதி திராவிடர்களுக்குக்கூட ஆசிரியர் பணி கிடைப்பதில்லை என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய தகவல்கள்.* TET *தகுதித் தேர்வுக்கும், இடஒதுக்கீட்டுக்கும் பெரிய* gap *இருக்கிறது.*

தகுதித் தேர்விலேயே தேர்ச்சி பெறாதபோது ஆசிரியர் பணியிடங்களை எப்படி நிரப்ப முடியும்?

பிற்பகல் 2–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகுதியின் அடிப்படையில் பின்தங்கிய ஆதி திராவிட மக்கள் போட்டிபோட்டு செயல்பட முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது தவறு. இன்று மேல்குடி மக்களுக்கு இணையாக ஆதி திராவிட மாணவர்களும் சிறந்தமுறையில் கல்வி கற்று உயர்ந்த இடத்திற்கு வந்துகொண்டிருக்கிறார்கள். பொதுத் தேர்விலேயே அவர்கள் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசைப் பொறுத்தவரையில், இடஒதுக்கீட்டில் எந்த மாற்றமும் கிடையாது. இட ஒதுக்கீட்டிற்கு வருகின்றபோது ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர் ஆசிரியராக இருந்தாலும் தகுதியானவர்கள் வரவேண்டும் என்பதற்காகத்தான் தகுதித் தேர்வு வைக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே இவர்களும் தேர்வு பெறுகிறார்கள், அந்தப் பதவிக்கு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் நிறைய கருத்துகளைச் சொல்லிவிட்டீர்கள். அவையெல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இடஒதுக்கீடு முழுமையாக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடஒதுக்கீடு முழுமையாக்கப்பட்டுதான் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, இந்த இரண்டு ஆண்டுகளில், தமிழ்நாட்டிலே ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வு நடத்தி இதுவரையில் 51,757 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தகுதித் தேர்வு எழுதி, போட்டியிலே வெற்றிபெற்றவர்கள் அத்தனைபேரும் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் எந்தவிதமான பிரச்சினையும் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்த விவாதத்திலே பங்குகொண்டு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக கருத்துரைகளை எடுத்துரைக்க வாய்ப்பு தந்தமைக்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கூட்டத் தொடரிலே கடந்த 24 ஆம் தேதி இந்த நூற்றாண்டில் நடைபெற்ற மிகப்பெரிய இனப் பேரழிவில்— இலங்கையிலே, நம்முடைய தமிழ்ச் சொந்தங்கள் கொன்று குவிக்கப்பட்ட நாட்டிலே நடைபெறக்கூடிய காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டிலே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிடுகிறபோது, **என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்திவிட்டேன். அந்த வார்த்தையைத் திரும்பப்பெற்று, ‘மாற்றுத் திறனாளிகள்’ என்று திருத்திக்கொள்ள அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேற்கண்ட திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** காமன்வெல்த் உச்சி மாநாட்டிலே இந்தியா எந்த வடிவத்திலும் பங்குகொள்ளக்கூடாது, காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து இலங்கையை நீக்க வேண்டுமென்று தமிழக மக்களுடைய உணர்வின் பிரதிபலிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றியமைக்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற சிறப்பான முறையிலே ஆதரவு தந்த அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, இலங்கையின் வட மாகாணத்திலே என்ன நடக்கின்றது என்பது தமிழக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குத் தெரியவில்லை என்ற ஒரு விஷமத்தனமான கருத்தை, இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் சொல்லியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதுபோல, பிரதமர் பங்குகொள்ளாவிட்டாலும், வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. சல்மான் குர்ஷித் அவர்கள் பங்குகொள்ளப்போவதாக ஒரு பேட்டியிலே குறிப்பிட்டிருப்பதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழக சட்டமன்றம் ஏகமனதாக நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தைக் கருத்தில்கொண்டு மத்திய அரசு ஒட்டுமொத்தமாக காமன்வெல்த் மாநாட்டில் பங்குகொள்ளக்கூடாது என்ற ஒரு வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தக் கூடுதல் துணை மதிப்பீடுகளில் பேசும்போது, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு நெம்மேலியிலுள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை மேம்படுத்துவதற்கு ரூ.51.39 கோடி நிதியை ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதேநேரத்தில், கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். இராமநாதபுரத்திலே இந்த நிதியாண்டே கடல்



நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம் 100 கோடி ரூபாய் செலவிலே அமல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பணிகள் எந்த நிலையிலே இருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், இராமநாதபுரத்தின் பல்வேறு பகுதிகளிலே இப்போது கடுமையான குடிநீர்ப் பஞ்சம் இருக்கின்றது. காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய குழாய்களிலே உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. குடிநீருக்கான அந்தத் தண்ணீர் சில இடங்களிலே வேறு பயன்பாட்டுக்காகத் திருப்பிவிடப்படக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. கீழக்கரை, இராமேஸ்வரம் நகராட்சி உட்பட பல்வேறு பகுதிகளிலே இருக்கக்கூடிய இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–20*

தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய நிகழ்வு மிகுந்த வருத்தத்திற்குரிய ஒன்றாக இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இரண்டு தினங்களுக்கு முன்பு தனுஷ்கோடிக்கு அருகிலே இலங்கைக் கடற்படையினரால் நம்முடைய மீனவர்களுடைய படகு துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான நிலைமையைப்பற்றியெல்லாம் எழுதியிருக்கின்றார்கள். இதிலே மிக கவனிக்க வேண்டிய ஒரு அம்சம் என்னவென்றால், திரு. வாஜ்பாய் தலைமையிலே தேசிய ஜனநாயகக் கட்சியினுடைய ஆட்சி டெல்லியிலே நடைபெற்றபோதுதான் நம்முடைய தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 59 விசைப் படகுகள் இலங்கையினால் அரசுடைமையாக்கப்பட்டது. அந்த நிலையை சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். தமிழக மீனவர்களுடைய 35 படகுகள் இன்னும் இலங்கையிலே இருக்கின்றன. அதேபோல 75 மீனவர்கள் இன்னும் இலங்கை சிறையிலே வாடி வருகின்றார்கள். சமீபத்திலே 5 விசைப் படகுகளை இலங்கை அரசு அரசுடைமையாக்கி இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறோம். இந்த நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கு நாம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். இது ஒரு பக்கம். இன்னொருபுறம் இப்படி இலங்கைக் கடற்படையினரால் பிடித்துச் செல்லக்கூடிய மீனவர்கள் சிறையிலே இருக்கக்கூடிய காலங்களிலே நம்முடைய

தமிழக மீன் வளத் துறையின் சார்பாக அவர்களுடைய குடும்பத்திற்கு நிவாரண நிதி வழங்கப்படுகிறது. அந்த நிவாரண நிதி சில நேரங்களிலே அவர்கள் விடுதலை பெற்ற பிறகு வந்து சேருகின்றது. என்னுடைய கோரிக்கை என்னவென்றால், அவர்கள் சிறையில் இருக்கக்கூடிய அந்தக் காலக்கட்டங்களிலே வாரத்திற்கு ஒருமுறை அந்த நிதி வழங்கப்பட்டால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீனவர்கள் இன்னும் இலங்கைச் சிறையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அவர்களுக்கு இன்னும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு நிவாரணம் வழங்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு நாளைக்கு ரூபாய் 250 வீதம் வழங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கைச் சிறையிலே இருந்து கொண்டிருக்கும்போது, அந்த மீனவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிவாரணம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். சமீபத்தில்கூட, நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 32 மீனவர்கள் சிறையிலிருந்து வருவதற்கு முன்பாகவே நிவாரணம் வழங்கிய அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக பல்வேறு வகைகளிலே முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். குறிப்பாக, இலங்கை மற்றும் தமிழக மீனவர்களுக்கிடையிலே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். அந்தப் பேச்சுவார்த்தை சென்னையிலே நடைபெற வேண்டுமென்று மாண்புமிகு இந்திய பிரதமருக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர்



அவர்கள் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். அந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்பாகத் தமிழக மீனவர்களுடைய பிரதிநிதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து தங்களுடைய கோரிக்கைகளை எடுத்துரைத்து, அவர்களுடைய வழிகாட்டுதலின் அடிப்படையிலே, அந்தப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டுமென்று விரும்புகின்றார்கள். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே கல்லணைக்கு அருகிலே 1901 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு பழமையான பள்ளிவாசல் இருக்கின்றது. திருவெறும்பூரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலும், திருக்காட்டுப்பள்ளியிலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவிலும் இந்த ஒரே பள்ளிவாசல்தான் இருக்கின்றது. கல்லணை கட்டிய கரிகால் சோழனுக்கு தமிழக அரசு அங்கே ஒரு மணிமண்டபம் கட்டி வருகின்றது. அந்த மணிமண்டபத்துக்கு சற்று தொலைவிலே இருக்கக்கூடிய இந்தப் பள்ளிவாசலுக்கு அருகில் இருக்கக்கூடிய வீடுகளை முதலிலே பொதுப் பணித் துறையினர் இடித்தார்கள். அதற்குப் பிறகு அதனுடைய சுற்றுச்சுவரையும், கழிப்பறையையும். . .

பிற்பகல் 2–25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தன்னிகரில்லா மாண்புமிகு முதலமைச்சர், நம்மையெல்லாம் வழிநடத்தி வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு கல்லணைக் கட்டிய கரிகால்சோழனுக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டும், அவருடைய நினைவை தமிழ்கூறும் நல்லுலகம் போற்ற வேண்டும், நன்றி மறவா இனம் தமிழினம் என்று உலகுக்கு எடுத்துரைக்கின்ற வகையிலே மணிமண்டபம் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அம்மணிமண்டபம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தி, மணிமண்டபப் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைப் பெற்று இந்தக் கேள்வியை இங்கு எழுப்பியுள்ளார்கள். உருவாக்குகின்ற பணியை மட்டுமே புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் அரசு செய்யுமே தவிர, உருக்குலைக்கின்ற எவ்வித செயலையும் கிஞ்சித்தும் இந்த அரசு செய்யாது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலங்களிலே காவேரியிலே இழந்த உரிமைகளை மீட்டு, டெல்டா மாவட்ட மக்களுக்கு மட்டுமல்லாது. தமிழகத்தின் ஒட்டுமொத்த மக்களுக்கும் குடிநீர் ஆதாரமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற காவேரிக்கு உச்ச நீதிமன்றம்மூலம் ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தி, தமிழக மக்களின் வயிற்றிலே பால் வார்த்தவர் அம்மா என்பதைத் தமிழகம் என்றும் மறந்துவிடாது. அப்படிப்பட்ட தாய் தமிழக மக்களைத் தன் குழந்தைகளாக ஏற்று, தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என் வாழ்வின் குறிக்கோள் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அம்மாவின் அரசிற்கு களங்கம் கற்பிக்க முற்படுவது மிகவும் அபத்தமான செயல் என்பதைத் தெரிவித்து, சமீபகாலமாக உங்கள் நடவடிக்கைகளில் தெரிகிற மாற்றம், ஒரு பழமொழியை எனக்கு நினைவுபடுத்துகிறது. "கூடா நட்பு கேடாய் முடியும்" என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இடிக்கின்ற நடவடிக்கை எதையுமே இந்த அரசு செய்யாது, அம்மாதிரி எதுவும் நடைபெறாது என்று இந்த நேரத்திலே உறுதியாகக் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேரிலே கண்ட காட்சியைத்தான் சொன்னேன். அந்தப் பள்ளிவாசலும், அதனுடைய சுற்றுப்புறங்களும் பாதுகாக்கப்படும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். பத்து நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** இப்போதுதான் தொடங்கியிருக்கின்றேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் கோட்டையிலுள்ள பழமையான பள்ளிவாசலில் முஸ்லிம்கள் தொழுகை நடத்துவதற்காக தமிழ்நாடு வக்ஃபு வாரியம் தன்னுடைய நேரடி நிருவாகத்திலே அந்தப் பள்ளிவாசலை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சென்னையிலே



1892 ஆம் ஆண்டு தாஹிர்சாகிப் தெருவிலே ஓர் உருது ஆசிரியர் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, நீண்ட எகாலமாகச் செயல்பட்டு வந்தது. ஆனால், அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே ஏழு பணியிடங்களிலே முதல்வர், ஆங்கிலத் துறை, Physical Director ஆகிய மூன்று இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு, உருது ஆசிரியர் பணியிடம் காலியாக இருந்ததன் காரணமாக அந்தப் பயிற்சிப் பள்ளியை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை இந்த அரசு மாற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதிலே பாரபட்சம் காட்டப்படுவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதில் பாரபட்சம் எதுவும் காட்டப்படவில்லை. இன்னும் நூல்களைக் கொள்முதல் செய்கின்ற பணியே துவங்கவில்லை. தற்போதுதான் அதற்கென்று ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு 16 உறுப்பினர்களைக் கொண்டது. அவர்கள் நூல்களின் தரத்தை ஆய்வு செய்து, அவற்றைப் படித்துப் பார்த்து, நல்ல நூல்களைத் தேர்வு செய்து, சரியான முறையிலே அந்தக் குழுமூலம் நூல்கள் வாங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் நேரம் முடிந்துவிட்டது. பதினொரு நிமிடங்களுக்குமேல் பேசிவிட்டீர்கள். நீங்கள் முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

பிற்பகல் 2—30

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள காலியிடங்கள் நிரப்பப்படும் என்று மே 2012—ல் அரசாணை வெளியிடப்பட்ட பிறகும்கூட, இதுவரை தமிழக அரசு உதவி பெறும் சிறுபான்மைக் கல்லூரிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 2008—2011 ஆம் ஆண்டு வரை அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 3,120 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்பதை அறிந்து, அதை நிரப்புவதற்கு உடனடியாக ஆணை வழங்கினார்கள். அதனுடைய அடிப்படையில், மண்டலக் கல்வி இணை இயக்குநர், கல்லூரி முதல்வர் மற்றும் இரண்டு இணைப் பேராசிரியர்கள் ஆகியோர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஒவ்வொரு கல்லூரிக்கும் சென்று, அந்தக் காலிப் பணியிடம் எதனால் ஏற்பட்டது; இறப்பால் ஏற்பட்டதா, பணி ஓய்வின் காரணமாக ஏற்பட்டதா; ஏற்கெனவே இருக்கக்கூடிய பாடங்களில் மாணவர்களின் சேர்க்கை பற்றிய விவரங்கள் ஆகியவற்றை அறிந்து, ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்கும். அதன்பின்பு, ஒவ்வொரு கல்லூரிக்கும் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆணை வழங்கப்படுகிறது. இதனுடைய அடிப்படையில், இதுவரையில் 56 கல்லூரிகளில் 733 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமிருக்கின்ற கல்லூரிகளுக்கும் அந்தக் குழு சென்று ஆய்வு செய்து, அறிக்கை அனுப்பிய பிறகு, அரசு அனுமதி அளித்து, அப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசி



முடித்துவிட்டீர்களல்லவா? (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லணையில் கரிகாலன் மணிமண்டபத்திற்கு அருகில் மசூதி, இந்துக் கோயில்கள் இருக்கின்றன. அந்த மணிமண்டபத்திற்குப் போவதற்கு இடையூறாக இருக்கிறதென்று மாவட்ட நிருவாகம் அங்கு வசிக்கின்ற 5 முஸ்லிம் குடும்பத்தினரிடமும், இந்துக் குடும்பத்தினரிடமும் மாற்றிடம் தருகிறோம், இதுதான் வழி என்று பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. பேசி சுமுகமான முடிவு காணப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ், பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர்களும் உங்களுக்கு விளக்கம் கொடுத்துவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மசூதி மட்டுமல்ல, இந்துக் கோயிலும் இருக்கிறது. மாவட்ட நிருவாகம் இருதரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. திருவையாறு சட்டமன்ற உறுப்பினரும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார். சுமுகமான முறையில், மாற்று இடம் வழங்கி அல்லது அவர்கள் மனது புண்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் உரையை முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. தமிழகத்திலுள்ள மின்சார நிலையைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் உரையை முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** ஒரேயொரு நிமிடம் தாருங்கள். பிரச்சினைப்பற்றி நான் சொல்லப் போவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேச ஆரம்பித்து 14 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** ஒரேயொரு நிமிடம் தாருங்கள். பிரச்சினைகளை நான் சொல்ல வரவில்லை. தமிழகத்திற்கு எங்கிருந்தெல்லாம் மின்சாரம் வருகிறது என்று சொல்லும்போது, கூடங்குளம் அணு உலையிலிருந்து மின்சாரம் வரவில்லை என்று அவர்கள் சொல்லவில்லை. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாக அந்த இயக்குநர் சொல்கிறார். ஆனால், Tamil Nadu Regional Load Despatch Centre–லும், Tamil Nadu Power Transmission Centre–னுடைய website–லும் இன்று காலையில் பார்த்தாலும்கூட, கூடங்குளத்திலிருந்து மின்சாரம் தமிழ்நாட்டிற்கு வரவில்லை என்ற ஒரு நிலைதான் இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில், அரசாங்கத்தின் சார்பாக இதைப்பற்றி விளக்கம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணு மின் நிலையம் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. மத்திய அரசின் அணுமின் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. உங்களுக்கு வருவது போன்று, எங்களுக்கும் தகவல்தான் வரும். இப்பொழுது முதன்முதலாக உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 200 மெகா வாட் அளவிற்கு உற்பத்தியைத் தொடங்கி, பிறகு நிறுத்தி, மீண்டும் ஆய்வுகளை செய்து, மீண்டும் உற்பத்தியைத்



தொடங்கியிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. படிப்படியாக மின் உற்பத்தியை அதிகரித்து, டிசம்பர் மாத இறுதிக்குள் 1,000 மெகா வாட் மின் உற்பத்தியை முதல் அலகில் எட்டப்படும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மின் உற்பத்தி நாளுக்குநாள் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தப்பட்டு நவம்பர் மாதத்தில் ஏறத்தாழ 500 மெகா வாட் அளவையும், டிசம்பர் மாதத்தில் 1,000 மெகா வாட் அளவையும் எட்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது 200 மெகா வாட் அளவில் மின் உற்பத்தியை செய்து, மின் தொகுப்பிலே இணைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் உரையை முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் அணு உலை போராட்டக்காரர்கள்மீது போடப்பட்ட அனைத்து வழக்குகளையும் தமிழக அரசு வாபஸ் பெற வேண்டுமென்று, மே மாதம் 6 ஆம் தேதி, உச்ச நீதிமன்றமும், ஜூலை மாதத்தில் சென்னை உயர் நீதிமன்றமும் பரிந்துரை செய்திருக்கின்றது. அந்த வழக்குகளை வாபஸ் பெற்று, அங்கு சுமுகமான நிலை ஏற்படுவதற்கு தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவை நடவடிக்கைக் குறிப்புகளில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தொகுதி கோரிக்கைகள்:**

இராமேஸ்வரம் அக்னி தீர்த்தத்தில் ஏற்படும் சுகாதார சீர்கேட்டைச் சீர்செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரவலாக பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட காட்டுநாயக்கர் சமுதாய மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு பழங்குடியினர் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள உச்சிப்புளி கடற்படை விமான நிலைய விரிவாக்கத்தால் கிராம மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்புல்லாணி ஒன்றியம், சேதுக்கரை பஞ்சாயத்திற்குட்பட்ட சேதுக்கரை, கோரைக்குட்டம், மேலப்புதுக்குடி, சின்ன கோவில் ஆகிய கிராமங்களில் இயங்கும் இறால் பண்ணைகளால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்தவும், நீர் ஆதாரங்கள் மேலும் மாசடையாமல் இருக்கவும் அரசு போர்க்கால நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இராமேஸ்வரம் தீவின் கடைக்கோடியில் இருக்கும் தனுஷ்கோடி பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராமேஸ்வரத்திலுள்ள ஜெட்டி—படகு தளத்தில் கூடுதல் படகுகள் நிறுத்தும் வகையில் புதிய படகு தங்கு தளம் அமைக்க வேண்டும்.

மேலும், சூறைக் காற்று, பருவகால மாறுதல் போன்ற நேரங்களில் மீனவர்களின் படகுகள் திசை மாறிச் செல்வது, படகுகள் மூழ்குவது போன்ற சம்பவங்களின்போது படகுகளை மீட்கவும், காணாமல் போகும் மீனவர்களை மீட்கவும், இறந்த மீனவர் உடலை மீட்கவும் அதிவிரைவு மீட்புப் படகுகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாம்பன் வடக்கு மற்றும் தெற்கு கடற்பகுதிகளில் மீனவர்கள் வலைகளை உலர்த்தவும், வலைகளை சரி செய்யவும் நிழற்குடைகள் அமைத்துத் தர வேண்டும்.

களிமண் குண்டு பகுதியில் சுமார் 100 நாட்டுப் படகுகள் உள்ளன. அனைத்து படகுகளுக்கும் மானிய விலையில் டீசல் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் நகர், 20—வது வார்டு, அருப்புக்காரத் தெரு பகுதி மக்களுக்குப் பழைய நியாய விலைக் கடையிலிருந்து தனியாகப் பிரித்து புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், வண்ணாங்குண்டு கிராமம், முஸ்லிம் தெரு குடியிருப்புப் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, பள்ளிவாசல் பகுதியில் ஏற்கெனவே



இயங்கி வந்ததைப்போல மீண்டும் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட ஆவன செய்ய வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டம், செம்படையார் குளம் ஊராட்சியிலுள்ள உசிலங்காடு வலசை கிராமத்தில் இயங்கி வந்த பகுதிநேர நியாய விலைக் கடையை மீண்டும் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டும்.

இராமநாதபுரம் தொகுதி, வாலாந்தரவை முஸ்லிம் தெரு பகுதி மக்கள் சுமுகமான முறையில் பொருட்கள் வாங்க வசதியாக, தனியாக பள்ளிவாசல் இடத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

இராமநாதபுரம் தொகுதி, திருப்புல்லாணி ஒன்றியம், தாதநேந்தல் ஊராட்சிக்குட்பட்ட பள்ளப்ப சேரி கிராமத்தில் மீண்டும் நியாய விலைக் கடை செயல்பட ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். உங்களுக்கு 7 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 நிமிடங்கள் தாருங்கள். கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கூடுதல் செலவிற்கான முதல் துணை மானியக் கோரிக்கையில் சொல்லப்பட்டுள்ள கிராமப்புற வறுமை ஒழிப்பு, சங்கங்களுக்குப் பண ஒதுக்கீடு, நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் வழங்கும் திட்டம் போன்ற அனைத்துத் திட்டங்களையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால், அத்திட்டங்களையெல்லாம் நிறைவு செய்வதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அந்தப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டிக்கொள்கிறேன்.

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு குறை தீர்ப்பாயத்தை மாவட்டந்தோறும் அமைத்து, விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் பணப் பயன் மற்றும் நிபந்தனையற்ற ஓய்வூதியம், உயர் கல்வி வரை கல்வி உதவித்தொகை அளிக்க வேண்டுகிறேன்.

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2013 அக்டோபர் 29

கல் குவாரிகள், அரிசி ஆலைகள், செங்கல் சூளைகள், கைத்தறி, விசைத்தறி, விவசாயத் தொழிலாளர்களுக்குத் தற்காலிக குடும்ப அட்டை, குடியிருப்பு, குழந்தைகள் கல்வி போன்றவற்றை அமல்படுத்த வேண்டுமென்று வேண்டுகிறேன். இரண்டு கோடி அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனுக்காக 2.1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகின்றேன்.

பிற்பகல் 2–35

கன்னியாகுமரி மாவட்டத்தில் 48 கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 1,500 நெசவாளர் குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன. நம்முடைய அரசு பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறது. ஆனால், நெசவாளர்கள் கிராமத்தில் மட்டுமல்ல, நகர்ப்புறத்திலும் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, அவர்களுக்கும் பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித் தர வேண்டுகின்றேன். புறம்போக்கு நிலம் இருக்கிறது. என்னுடைய தொகுதிக்கு அருகில் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியின் எல்லையில் 13 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. நட்டாலம் கிராம சர்வே எண் 926/3–ல் அரசு பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் ஏழை நெசவாளர்கள் பயன்படுத்தக்கூடிய வகையிலே வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 10,000 நெசவாளர்களுக்கு 260 கோடி ரூபாய் செலவில் விலையில்லா வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். இது நகர்ப்புறங்களுக்கும், பேரூராட்சிப் பகுதிகளுக்கும் பொருந்தாது. ஆகவே, கிராமங்களில் உள்ளவர்களுக்கு மட்டும்தான் இந்தத் திட்டம் பொருந்தும். நீங்கள் பேரூராட்சிக்கு அருகே அல்லது நகர்ப்புறங்களுக்கு அருகேயுள்ள கிராமப் பகுதிகளில் நெசவாளர்களுக்குப் பட்டா கொடுக்கின்றபோது அந்த பட்டாக்கள் கிடைத்தவுடன், கட்டாயம் வீடு கட்டிக் கொடுப்பதற்குத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், மூன்று நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன். என்னுடைய மாவட்டத்தில் 22–7–2013 அன்று ஒரு பந்த் நடைபெற்றது. 21–7–2013 ஆம் தேதியன்று, பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. எம்.ஆர். காந்தி என்பவரை யாரோ தாக்கிவிட்டார்கள். அந்தப் பிரச்சினையின் காரணமாக 22–7–2013 அன்று எங்கள் மாவட்டத்தில் பெரிய பந்த் ஒன்றை நடத்தினார்கள். அந்த பந்திலே சுமார் 100 வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. போக்குவரத்துத் துறைக்கு சுமார் இரண்டரை கோடி ரூபாய்க்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டது. கல்விக்கூடங்கள் மூடப்பட்டன. சாதாரண வாழ்க்கை பாதிக்கப்பட்டது. சேலத்தில் திரு. ரமேஷ் என்பவர் படுகொலை செய்யப்பட்டார் என்று இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் அங்கே பெரிய பந்த் நடத்தினார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. அரசு பஸ்கள் நொறுக்கப்பட்டன. நடவடிக்கை இல்லை. சமீபத்தில் பாட்னாவில் 27–10–2013 அன்று குண்டு வெடிப்பு நடந்தது. அதில் சுமார் 50–க்கும் அதிகமான போக்குவரத்து வாகனங்கள், அரசு பஸ்கள் அடித்து நொறுக்கப்பட்டன. ஆனால், மாவட்ட நிருவாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் கேட்கிறேன், பா.ம.க.–விற்கு ஒரு நீதி பாரதிய ஜனதா கட்சிக்கு ஒரு நீதியா? தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது சில கருத்துகளை இங்கே பதிய வைத்திருக்கின்றார்கள். அது தவறான கருத்து. மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரை தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களுக்கும் ஒரே மாதிரியான நீதி பரிபாலனம்தான் செய்துகொண்டு வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தின்முன் அனைவரும் சமம். அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, அனைவருக்கும் சமமான நீதி என்ற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 அக்டோபர் 29

அவர்கள் நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு தமிழகத்தை அமைதிப் பூங்காவாக, அமைதி மாநிலமாக வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நன்றி சொல்கிறேன். இந்த அரசு சட்டம்—ஒழுங்கை சரியாக நடத்தும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால், ஒரு விஷயம். பாரதிய ஜனதா கட்சியிடமிருந்து அவர்கள் ஏன் நஷ்ட ஈடு வாங்கக்கூடாது என்ற கேள்வியை நான் முன்வைக்கிறேன். பாரதிய ஜனதா கட்சியிடமிருந்து நஷ்ட ஈடு வாங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள்.

பிற்பகல் 2—40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பவங்கள் நடைபெற்று, பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** ஆனால், ** அதையும் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்று சொல்லி. . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் திரும்பத் திரும்ப தவறான கருத்தை இங்கே பதிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்று செயல்பட்டுக் கொண்டிருப்பவர். முதலில் அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொண்டு, தன்னுடைய பேச்சை அவர் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் அடுத்த விஷயத்திற்கு வாருங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், நான் அதைச் சொன்ன விதம் வேறு. அதை நான் விட்டுவிடுகிறேன். எனவே, நீங்கள் அதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

வளைகுடா நாடுகளுக்கு எண்ணற்ற பெண்கள் வீட்டு வேலைக்காகச் செல்கிறார்கள். அவர்கள் மிகவும் ஏழைகள். தங்களுடைய குடும்பத்தைத் தலைநிமிரச் செய்வதற்காக அவர்கள் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் வாழ்கின்றவர்கள். ஆனால், அங்கு அவர்களுக்கு உரிய சம்பளம் கிடைக்காமல், கொத்தடிமைகளாக வெளிநாடுகளில் இருக்கிறார்கள். எனவே, அவர்களை மீட்டு, அவர்களுக்கு உரிய நிவாரணம் அளித்து, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜேஜி. பிரின்ஸ்] [2013 அக்டோபர் 29

அரசுக்கு உண்டு. அரபு நாடுகளில் உள்ள சிறைச்சாலைகளில் சுமார் 4,480 பேர் இருக்கிறார்கள்; அவர்கள் பல்வேறு வழக்குகளில் அச்சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மீட்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.

தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகத்தில் நடத்துனர்கள், டெக்னிஷியன்கள் மற்றும் தமிழக அரசுப் பணியில் சேருவதற்கான வயது உச்சவரம்பை உயர்த்த வேண்டும். காரணம், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்பவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அவர்களுக்கு அரசுப் பணி கிடைப்பதற்கு வயது உச்சவரம்பு தடையாக உள்ளது. இதனால் அவர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சமீபத்தில் மத்திய அரசு சார்பில் 100 விமான நிலையங்கள் அமைக்கவிருப்பதாக பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு கேட்டுக் கொண்டால், நிச்சயமாக மத்திய அரசு தருவதற்குத் தயாராக இருக்கிறது. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வாய்ப்புத் தரவேண்டும். அங்கே ஒரு விமான நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசுக்கு நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டும் என வேண்டுகிறேன். (குறுக்கீடு) நான் விமான நிலையம்தான் கேட்கிறேன்.

அடுத்து, எங்களுடைய மாவட்டத்தில் 68 அனுமதி பெற்ற மணல் குடோன்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) உரையை முடித்துவிடுகிறேன். அந்த மணல் குடோன்களுக்கு அனுமதி இருக்கின்றது. ஆனால், அந்த மணல் குடோன்களில் மணலைத் தேக்கி வைப்பதற்கு வாய்ப்பே இல்லை. மாவட்ட நிருவாகம் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதன் காரணமாக அங்கு யாரும் வீடு கட்ட முடியவில்லை. யாரும் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, கன்னியாகுமரியில் 68 stock yards இருந்தன என்பது உண்மை. ஆனால், அந்த stock yards–க்கு எங்கிருந்து மணல் கொண்டுவரப்பட்டது போன்றவை குறித்து ரெக்கார்டுகள்



2013 அக்டோபர் 29] [திரு. பி. தங்கமணி]

சரியாக இல்லாத காரணத்தினால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை ஆய்வு செய்து இரத்து செய்திருக்கிறாரேயொழிய, வேறு எந்த உள்நோக்கமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். முறையான கணக்கு எதுவுமில்லை; எங்கிருந்து மணல் வந்தது? அதை எங்கே கொண்டு சென்றார்கள்? அங்கு இருக்கும் ஸ்டாக் என்ன என்பவை குறித்து எந்தவிதமான ஆவணமும் இல்லாத காரணத்தினால், அது இரத்து செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஜேஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், நீங்கள் இனிமேலாவது கட்டுமானத்திற்கு உரிய மணலைத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், நீங்கள் அரசு குடோன்களை அமையுங்கள்; தேவையான மணலைத் தாருங்கள். அங்கு ** சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜேஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆண்டுக்கு 25 இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். அவர்களுக்குச் சரியான ஓட்டல்கள் இல்லை. நாம் அதை உலகத் தரம்வாய்ந்த ஒரு சுற்றுலாத் தலம் என்று சொல்கிறோம். எனவே, அந்த வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தை உலகத் தரம்வாய்ந்த ஒரு சுற்றுலாத் தலமாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய கோரிக்கையை ஏற்று, குளச்சல் மீன்பிடித் துறைமுகப் பணிகளுக்காக ரூபாய் 87.75 கோடியும், இரணியல்கோட்டையை அழகுபடுத்துவதற்காக 3 கோடி ரூபாயும்,

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2013 அக்டோபர் 29

நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமரி மாவட்ட மக்களின் கனவுத் திட்டமான இரப்பர் தொழிற்சாலை, இன்னும் கனவாகவே உள்ளது. அதை அரசு சார்பில் தொடங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் மொத்தம் 5,898.19 கோடி ரூபாய் நிதியைக் கூடுதலாக ஒதுக்குவதற்கு வகைசெய்யும் சில முக்கிய திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். இவற்றில் 4,829.67 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 1,068.52 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 2–45

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துகளை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். பயங்கரவாத செயல்களைத் தடுக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையை கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் பாராட்டுகிறேன். தமிழகத்தில் இந்து மதத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டதும், சேலம் ஆடிட்டர் படுகொலை செய்யப்பட்டதையும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் பேசும்போது ** என்று சொன்ன வார்த்தைகள், நான் சொன்னது உட்பட, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 அக்டோபர் 29]

**திரு. எம். ஆறுமுகம்:** தமிழகத்தில் இந்து மதத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டதையும், சேலம் ஆடிட்டர் படுகொலை செய்யப்பட்டதையும் விசாரணை செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாநிலத்தில் பல பகுதிகளிலும் பல சிறப்பு விசாரணைக் குழுக்கள் அமைக்க உத்தரவிட்டார்கள். இதில் 14–8–2013 ஆம் தேதி மிகவும் பதட்டமான உக்கடம் பகுதியில், கோவை சிறப்பு விசாரணைக் குழு வீரத்துடனும், விவேகத்துடனும், துரிதமாகவும், தங்களது உயிரையும் துச்சமாக நினைத்து, முகம்மது அன்சார் என்பவரிடமிருந்து கைத்துப்பாக்கி மற்றும் 53 துப்பாக்கிக் குண்டுகளையும் கைப்பற்றினார்கள். 14–2–1992–ல் நடந்த கொடூரமான குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் பிறகு, நிகழவிருந்த மிகப் பெரிய பொது அமைதியையும், சட்டம்-ஒழுங்கையும் பாதிக்கும் சதிச் செயலை முறியடித்துள்ளதை கோவை நகர மக்கள் வாழ்த்துகிறார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு, திருநெல்வேலி காசிம் என்பவரது வீட்டிலிருந்து சுமார் 17 கிலோ வெடிமருந்தை பறிமுதல் செய்து, எதிரிகளையும் கைது செய்துள்ளார்கள். இக்காவலர்களுக்கும், கோவையில் துப்பாக்கி மற்றும் துப்பாக்கிக் குண்டுகளைக் கைப்பற்றியவர்களுக்கும், மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பண வெகுமதி அளித்து திருப்திப்படுத்தியதோடு அல்லாமல், பதவி உயர்வும் அளித்து தாயுள்ளத்துடன் கௌரவப்படுத்தியுள்ளார்கள். இதில் ஈடுபட்ட அனைவருக்கும் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நிற்காமல், காவல் துறை அதிகாரிகள் யாராக இருந்தாலும்கூட, சரி சமமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக, கோவையில், தங்கள் வீட்டிலேயே பெட்ரோல் வெடிகுண்டுகளைத் தாங்களே வீசிக் கொண்டும், தம்மை சிலர் கடத்திச் சென்றுவிட்டார்கள் என்று நாடகமாடியதையும், கோவையில் மத மோதல்களைத் தூண்டிவிட முயற்சித்த மத வெறியர்களை, இந்துத்வா கொள்கை படைத்தவர்களைப் பிடிப்பதில் மாநகரக் காவல் துறையினர் துரிதமாகச் செயல்பட்டுள்ளார்கள். இந்த நடவடிக்கை, தமிழகத்தின் ஒட்டுமொத்த காவல் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன். யாராக இருந்தாலும், அரசு தன் கடமையைச்

செய்யும் என்று நிலைநிறுத்தியுள்ளதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி பாராட்டுகிறது, வரவேற்கிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு வாரியம் குரூப் 1–க்கு ஒவ்வோர் ஆண்டும் தேர்வு நடைபெறுவதில்லை. இத்தேர்வு பல ஆண்டுகளுக்குப் பின்னால் நடைபெறுகின்ற காரணத்தினால், அவர்களுக்கு குரூப்–1 தேர்வு எழுதுவதற்கான வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலையில், அவர்கள் தேர்வு எழுதுவதற்கான வயதை 42 ஆக உயர்த்தி அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை என்பது காலம் கடந்துகொண்டே செல்கின்றது. எனவே, அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுடைய ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையை உடனடியாக அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசித் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு commutation தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியதை இந்த நேரத்திலே நான் பாராட்டுவதோடு, வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டா வழங்குவதற்கு வரன்முறைப்படுத்தக்கூடிய திட்டத்தை கால நீட்டிப்புச் செய்ய வேண்டும். காட்டுப் பாதை, ஓடைப்புறம்போக்கு, பள்ளவாரி போன்றவை வகைமாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அம்மா திட்டத்தின்மூலம் இதுவரை பயனடைந்தவர்களின் விவரத்தைத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் மாற்றுத் திறனாளிகள், முதியோர், விதவைகளுக்கு அம்மா திட்டத்தின்மூலம் உத்தரவிடப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் இன்னும் வழங்கப்படவில்லை. உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் மனைகளில் காலம் காலமாகக் குடியிருப்பவர்களிடம் பகடி வசூலிக்கப்பட்டதை மாற்றி, சதுர அடிக் கணக்கில் வாடகை



என்று வசூல் செய்வதைத் தவிர்த்து பழைய முறையில் பகடி என்ற அடிப்படையில் வசூல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–50

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்மா திட்டத்தின் மூலமாக பயன்பெற்ற பயனாளிகளின் விவரங்களைக்கேட்டு, இங்கே வினாவாக எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், அதிகாரிகளைத் தேடி மக்கள் சென்ற நிலையை மாற்றி, மக்களைத் தேடி அதிகாரிகள் செல்லக்கூடிய அம்மா திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டிலே பெறப்பட்ட மனுக்களின் மொத்த எண்ணிக்கை 33,13,792 ஆகும். அதில் 31,35,712 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு இந்திய வரலாற்றிலேயே, வருவாய் துறையினுடைய (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றில் ஆறு மாத காலத்தில் 31 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்ட வரலாறு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு முறை வரன்முறைப்படுத்தக்கூடிய இந்தத் திட்டம் முடிவுற்றதாகச் சொல்லியிருக்கிறார்கள். கால நீட்டிப்புச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அரசு

தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களுக்கு, தனியார் தோட்டத் தொழிலாளர்கள் பெற்று வரும் ஊதியத்தைப்போல நாள் ஒன்றுக்கு ரூ.204.25–ம் மற்றும் பஞ்சப்படி வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையில் தினக் கூலி ஊழியராகப் பத்து ஆண்டுகளுக்கு மேலாக 1,326 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதைப் பற்றி சட்டமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லப்பட்டது. கேரள மாநிலத்தில், ஓய்வுபெற்ற கூட்டுறவு ஊழியர்களுக்கு அவர்கள் வாங்கக்கூடிய சம்பளத்தில் பாதியை ஓய்வூதியமாக வழங்குகிறார்கள். இதுபோல் தமிழகத்திலும் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ரீதியாக ஓய்வூதியம் பற்றி ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே இந்த சட்டமன்றத்தில் பேசப்பட்டது. இப்போது தொழிலாளர்களின் சங்கத் தலைவர்கள், நம்முடைய பதிவாளர்களையெல்லாம் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எப்படி அதனை நடைமுறைப்படுத்துவது, அந்தச் சங்கங்கள் நீடித்திருக்க என்ன செய்ய வேண்டும், ஏற்கெனவே ஓய்வுப் பெற்றவர்களுக்கும் எப்படி ஓய்வூதியம் கொடுப்பது, இனி ஓய்வு பெறுபவர்களுக்கு எப்படி ஓய்வூதியம் கொடுப்பது போன்றவற்றையெல்லாம் கலந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நெல் குவிண்டாலுக்கு ரூ.2,500 எனவும், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4,000 எனவும் அரசு விலை நிர்ணயம் செய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாநகரம், வார்டு எண் 13–ல், வெங்கடாபுரத்தில் உள்ள வெங்கடசாமி வீதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டு வந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பு மன்றமான புபேஷ்குப்தா மன்றத்திற்கு 22–10–2013 அன்று சுமார் 2.00 மணியளவில் சில சமூக விரோதிகள் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துள்ளார்கள். இதனால் அந்தப் படிப்பகத்தில் இருந்த டேபிள், நாற்காலிகள், தலைவர்களின் புகைப்படங்கள், விலையுயர்ந்த புத்தகங்கள், மூங்கில் தட்டிகள், மேற்கூரை ஆகியவை நாசமாகியுள்ளன. தீயிட்டு கொளுத்திய சமூக விரோதிகளைக் கைது செய்ய வேண்டுமென்று காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. F.I.R.–ம் போட்டுள்ளார்கள். இவர்கள் யார் என்பது பி.11 காவல் துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கும் அதிகாரிகளுக்குத் தெரியும் என்று சொல்லப்படுகின்றது. எனவே, இந்தச் சமூக விரோதிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம், வால்பாறையில் ஆறு மாத காலமாக காட்டு யானைகளுடைய அட்டகாசம் சகிக்கவே முடியவில்லை. யானைகள், தொழிலாளர்கள், அதிகாரிகள், குடியிருப்பு பகுதிகள், அங்கன்வாடி மையங்கள், மஸ்டர் ரோடு, ரேஷன் கடை ஆகியவற்றை இடித்துத் தள்ளி நாசப்படுத்தி விடுகின்றன. இதனால் தொழிலாளர்கள் பணிக்குச் செல்ல முடியவில்லை. பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் வழியில் யானைக் கூட்டங்கள் வழி மறிப்பதனால் மக்கள் மத்தியில் பயமும், அச்சமும் ஏற்பட்டுள்ளது. யானைகளுடைய அட்டகாசத்தைக் கட்டுப்படுத்தி, பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–55

வால்பாறையில் இருக்கக்கூடிய கூட்டுறவு அர்பன் வங்கி வாங்கியிருக்கக்கூடிய கடனைக் கட்டுவதற்கு அவர்கள் தயார். அந்த வட்டியை இரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். எனவே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அந்த வட்டியைத் தள்ளுபடி செய்தால் வாங்கியிருக்கக்கூடிய ஒட்டுமொத்தக் கடன்களையும் இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் கட்டி விடுவார்கள் என்று இந்த நேரத்திலே சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை நீங்கலாக தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மாவட்டங்களை, வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்தார்கள். கோவை மாவட்டத்தில் தென்னை விவசாயம், நெல் விவசாயம் பாதிக்கப்பட்டு, அதுசம்பந்தமாக மாவட்ட நிருவாகமே வறட்சியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்பதற்கான முன்மொழிவுகளை அரசிற்கும், அதிகாரிகளுக்கும் அனுப்பியும்கூட, இதுவரை கோவை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, தென்னை விவசாயமாக இருந்தாலும் சரி அல்லது நெல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளாக இருந்தாலும் சரி, பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை. எனவே, நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டில் வறட்சி பாதித்த மாவட்டங்களைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்டா மாவட்டங்களுக்கு 542 கோடி ரூபாயும், டெல்டா அல்லாத பிற மாவட்டங்களுக்கு 835 கோடி ரூபாயும் வறட்சி நிவாரணமாக அறிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மாவட்டமான கோவையில் மட்டும் 19,322 விவசாயப் பெருமக்களுக்கு 5 கோடியே 82 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வறட்சி பாதித்த



அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக முன்மொழிவுகள் பெறப்பட்டதன் அடிப்படையிலே அனைத்துப் பயிர்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட்டிருக்கிறது. கணக்கெடுப்பின்போது கோவை மாவட்டத்தில் தென்னை மரங்கள் பாதிப்பு தென்படவில்லையென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளுக்கு அந்தக் குறிப்பிட்ட பயிர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழகத்திலே முதியோர் உதவித் தொகை வழங்கப்படவில்லையென்று இதற்கு முன்னால் ஒரு வினாவை எழுப்பினார்கள். முதியோர் உதவித் தொகையைப் பொறுத்தவரையிலே, கடந்த தி.மு.க. ஆட்சியிலே முதியோர் உதவித் தொகையாக வெறும் 500 ரூபாய் மட்டும்தான் வழங்கினார்கள். அவர்களுடைய கடந்த ஐந்தாண்டுக் காலமும் ஆட்சிக்காலம் நிறைவடைகின்றவரை 23 இலட்சத்து 68 ஆயிரத்து 231 பயனாளிகளுக்கு மாதம் 500 ரூபாய் என்ற அளவிலேதான் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலே 500 ரூபாய் என்றிருந்த முதியோர் உதவித் தொகையை 1,000 ரூபாயாக உயர்த்தி உத்தரவு வழங்கி, இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே மட்டும் தமிழகத்திலே 37 இலட்சத்து 46 ஆயிரம் பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஒரு சிறப்பான நிலையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி இந்த முதியோர் உதவித் தொகைக்காக மட்டும் வருடம் ஒன்றுக்கு 3,980 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முதியோர் உதவித் தொகை வழங்குவதிலே இறந்தவர்களுடைய கணக்கெடுப்பு இப்போது நடைபெற்று வருகிறது. அதுமட்டுமல்லாமல், தகுதி இல்லாதவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டிருந்தால் அதை எல்லாம் ஆய்வு செய்து, அந்தப் பட்டியலிலிருந்து நீக்கக்கூடிய நடவடிக்கைதான் எடுக்கப்பட்டு வருகிறது. தகுதி உள்ளவர்களாக இருந்தால் மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து முதியோர் உதவித் தொகையை வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதத்தில் இருந்து அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்ற புகார்தான் என்னிடத்தில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கக்கூடிய விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும் அது என்னவென்று சரிபார்த்துக்கொள்கிறேன்.

வால்பாறை பகுதியில் யானைக் கூட்டம் இன்றைக்கு மட்டுமல்ல, கார்த்திகை மாதம் தொடங்கினாலே, சபரிமலைக்குப் போகிறவர்கள் அதிகமானவர்கள் என்பதால், அந்தக் கூட்டத்தைப் பார்த்து, அங்கு இருக்கக்கூடிய யானைகள் எல்லாம் migrate ஆகி வால்பாறைக்கு வந்து dump ஆகின்றன. அதனால் இன்னும் நெருக்கடிகளும், சிக்கலும் கூடுதலாகும். இதுவரை 4 பங்களாக்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. 4, 5 குவாட்டர்ஸ் இடிக்கப்பட்டிருக்கின்றன. அங்கன்வாடிகள் இடிக்கப்பட்டிருக்கின்றன. யாருக்கும் பாதுகாப்பில்லாத சூழ்நிலை உள்ளது. எனவே, காட்டிலாகா அதிகாரிகள் கூடுதலான கவனம் எடுத்துக் கொண்டு, கும்கி யானைகளை அங்கே வரவழைத்து காட்டு யானைகளை விரட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–00

வால்பாறைப் பகுதியில் இருக்கக்கூடிய சாலைகள் பேருந்துகள் செல்ல முடியாத அளவிற்கு. மிகவும் மோசமாக இருக்கின்றன, அரசு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் செல்லக்கூடிய பாதைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அதேபோன்று ஹை ஃபாரஸ்டு எஸ்டேட், வில்லோனி எஸ்டேட் வன்னிமேடு எஸ்டேட் இன்னும் இப்படி பல்வேறு எஸ்டேட்டுகள் இருக்கக்கூடிய சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. எஸ்டேட் நிருவாகம் சாலைகள் போடுவதற்குத் தயாராக இல்லை. எனவே, அரசாங்கம் இந்தச் சாலைகளைப் போடவில்லையென்று சொன்னால், ஒன்று மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படி



மாநகராட்சியிடம் ஒப்படைக்காவிட்டால் நம்முடைய மாநில நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டால் மட்டுமே அவர்கள் போடுவார்கள், அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்று சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மத்திய அரசு, எதிலாவது விண்ணை முட்டும் சாதனை புரிய வேண்டும் என்பதற்காக விலைவாசியைப் பறக்கவிட்டிருக்கிறது. ஏழை மக்கள் தாங்கொண்ணாதவகையில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு கொடுமையை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

உத்தரப் பிரதேசம், ஜோன்பூர் மாவட்டத்திற்குப் பெங்களூருவிலிருந்து ஒரு லாரி சென்றது. அந்த லாரியை ஓட்டிச்சென்ற ஓமலூர் தாலுகாவைச் சேர்ந்த தன்ராஜ், முனியன் என்ற இரண்டு ஓட்டுநர்களும் 7–10–2013 அன்று இரவு சுட்டுக்கொல்லப்பட்டனர். லாரியில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள் என்ன தெரியுமா? 400 மூட்டை வெங்காயம். விலைவாசியின் ஒரு பரிமாணம் இது. ஏதோ, தங்கம் போல், வெள்ளி போல், காய்கறி விலை இன்றைக்கு ஏறிக்கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளம் தான் இது. கொல்லப்பட்ட அந்தத் தமிழக ஓட்டுநர்கள் இருவரின் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பண்டிகைக் காலங்களில், விலைவாசியால் ஏற்பட்டிருக்கிற கொடுமைக்கு நிவாரணம் அளிக்க, சக்திக்கேற்ற அனைத்தையும் நம்முடைய மாநில அரசு செய்ய வேண்டுமென்று நான் கோருகிறேன். தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விலைவாசி

ஏற்றத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். விலைவாசியைப் பொறுத்த வரையில் மத்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்டிருக்கிற டீசல் விலை உயர்வுதான் அதற்குக் காரணமாக இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல்வேறு விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்து, விலைவாசியினைக் கட்டுக்குள் வைத்திருக்கிறார்கள் என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள், கொல்லப்படுவதும், கொடுமைப்படுத்தப்படுவதும் தொடர்கிறது. மத்திய, மாநில அரசுகள்இருதரப்பு மீனவர்களையும் அழைத்து உடன் இருந்து பேச வேண்டும். இதுபோன்ற பேச்சுவார்த்தைமூலம்தான் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று நான் பதிவு செய்கிறேன்.

தமிழக மக்களின் கவலைகளையோ, மாண்புமிகு முதலமைச்சரின் கடிதங்களையோ கண்டுகொள்ளாத மத்திய அரசின் போக்கு கண்டிக்கத்தக்கது.

தொழிலாளர்களின் சங்கம் சேரும் உரிமையும், கூட்டுபேர உரிமையும் தொழில் நிறுவனங்களில் மறுக்கப்படுகின்றன. Hyundai, Nokia, Siemens, Fenner India, Foxconn, Dharani Sugars போன்ற தொழிற்சாலைகளில் சங்கம் அமைத்ததற்காகவே தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டுள்ளனர். அப்படியே சங்கம் அமைத்தாலும், நிர்வாகத்தினர் பேச முடியாது என்று கூறி கூட்டுபேர உரிமையை மறுக்கின்றனர். நூற்றாண்டுக்கணக்கில் நிலை நிறுத்தப்பட்டுள்ள இந்த உரிமைகளை முதலாளிகள் மதித்து நடப்பதைத் தொழிலாளர் நலத் துறை உறுதி செய்ய வேண்டும். தொழிற்சங்க அங்கீகாரச் சட்டம் இயற்றப்பட வேண்டும். பயிற்சியாளர் எண்ணிக்கை மொத்தத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையில் 20 சதவிகிதம் என்று வரையறுக்கப்பட வேண்டுமென நிலையாணைச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தம் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு





மேலாக மத்திய அரசாங்கத்திடம் நிலுவையில் இருக்கிறது. அங்கே கேட்டால், தமிழக அரசிடம் நாங்கள் விளக்கம் கேட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இங்கே தொழிலாளர் நலத் துறையோ, நமது சட்ட அமைச்சகமோ அதை விரைவுபடுத்தி, விளக்கம் தந்து முடித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Foxconn கம்பெனியில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் நிருவாகம் ஒப்பந்தம் போடுகிறது. இதைத் தொழிலாளர் நலத் துறை இரத்து செய்ய வேண்டும்.

அங்கன்வாடித் திட்டத்தைச் சீர்குலைக்கும் மத்திய அரசின் முடிவை மாநில அரசு எதிர்க்க வேண்டும். அங்கன்வாடி, சத்துணவு, டாஸ்மாக் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியமும், அரசு ஊழியர் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும், வேலை மறுக்கப்பட்ட மருத்துவப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டும்.

அரசுப் போக்குவரத்தில் ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கப்படாமல் உள்ளது. நீதிமன்றத்திலே இருக்கிற ஒரு சட்டப் பிரச்சினையை நாங்கள் அறிவோம். விரைவாக அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி செய்து, அனைத்துச் சங்கங்களையும் அழைத்துப் பேசி, இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 3–05*

பேச்சுவார்த்தையில் ஒருவரைக் கூப்பிட்டு இன்னொருவரை விட்டால்தான் சட்டப் பிரச்சினை. அனைவரையும் அழைக்கின்றபோது எங்கே சட்டப் பிரச்சினை இருக்கிறது? ஆகவே, உச்ச நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓய்வுபெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஓய்வுக் காலப் பயன்களின் இரண்டாண்டு நிலுவை மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விழாவில் கலந்துகொள்ள இயலாமல் போனவர்களுக்கு காசோலை வழங்குவதிலே சுணக்கம் இருக்கிறதென்று அந்தத் தொழிலாளர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு கடந்த மாதம் வரை, அதாவது கடந்த 30–9–2013 வரை ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்குண்டான முழுத் தொகை, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வழங்கப்படாமல் இருந்த தொகை உட்பட, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களே நேரடியாகக் கலந்துகொண்டு, அரங்கத்தில் இருந்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் ஓய்வுபெற்ற 25 தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டு, எஞ்சியிருக்கின்ற தொழிலாளர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மற்றத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய வங்கிக் கணக்கிலே செலுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைகள், ஓய்வுபெற்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. யாரேனும் விடுபட்டிருந்தால் அவர்கள் நாடினால் உரிய முறையில் உடனடியாக அவர்களுக்குண்டான தொகை வழங்கப்படும். அதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். முந்தைய 5 ஆண்டுகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வழங்கப்படாமல் இருந்த 185 கோடி ரூபாய் நிதியோடு சேர்த்து, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 257 கோடி ரூபாய் நிதியை ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளார்கள். அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய வரலாற்றில் ஒரே தவணையில் 257 கோடி ரூபாய் வழங்கிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வுபெற்ற தொழிலாளர்கள், தொகையைப் பெற்றவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியைச் செலுத்தி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. 20 சதவிகித போனஸ் எல்லோருக்கும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், கனிம வளத் தொழிலாளர்களுக்கு அந்தத் தருணத்திலே அறிவிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அவர்கள் வருத்தத்தில் இருக்கிறார்கள். ஆகவே, விரைவில் அவர்களுக்கும் தீபாவளிக்கு முன்பாக 20 சதவிகித போனஸ் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே நேரடியாக வந்து சொன்னார்கள். பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கின்றேன். அதனால் கூடியவிரைவில் பேச்சுவார்த்தை முடிந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு போனஸ் அறிவிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது பல்வேறு கம்பெனிகளில் தொழிற்சங்கம் தொடங்குவதில் சிரமம் இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே ஒரு சிறிய திருத்தம். நோக்கியா கம்பெனிக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் சங்கத்தினுடைய தலைவராக இருக்கின்றார். இதுவரை என்னிடத்திலே இதுபோன்ற ஒரு குறையைச் சொல்லவில்லை. இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. குறைந்தபட்சம் 10 சதவீதம் போனஸ் என்று பொதுத் துறை சம்பந்தப்பட்ட தொழில்களிலே அறிவிக்கப்பட்ட நிலையில், குடிநீர் வாரிய ஊழியர்களுக்கு மட்டும் 8.33 சதவீதம் என்று இருக்கிறது. அவர்களுக்கு மட்டும் ஒரு குறைபாடாக இது நடந்துவிட்டது என்று நினைக்கிறேன். எனவே, அதை சீர்செய்து*

அவர்களுக்கும் 10 சதவீதம் போனஸ் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிண்டியிலே இருக்கின்ற சிட்கோ தொழிற்பேட்டையில், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்க்குச் சொந்தமான 11 ஏக்கர் நிலத்தை குடியிருப்புப் பயன்பாட்டிற்கு விற்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகிறோம். இப்படி சிட்கோ தொழிற்பேட்டையில் ஒதுக்கப்பட்ட அந்த நிலத்தை வீட்டு மனைகளுக்காக அல்லது மற்றவற்றிற்காகப் பயன்படுத்த நாம் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூற்று தவறான கூற்று என்பதை நான் அவையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படியொரு எண்ணம் அரசுக்கு தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–10

**திரு. அ. சவுந்தரராசன்:** நான் கேள்விப்பட்டதைத்தான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் எனக்கு மிகுந்த ஆறுதல் அளிக்கிறது. சிட்கோ தொழிற்பேட்டையில் இருக்கின்ற நிலம் எதுவாக இருந்தாலும் அதை நிச்சயமாகத் தொழிலுக்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்கிற நோக்கத்தில்தான் நான் அதைத் தெரிவித்தேன். சிட்கோ தொழிற்பேட்டையில் குறு சிறு தொழில்களுக்கான நிலத்திற்கு அதீத விலை தீர்மானிக்கப்படுகிறது. ஹுண்டாய் போன்ற பெரும் நிறுவனங்களுக்கு காட்டப்படும் சலுகை இவர்களுக்குக் காட்டப்படுவதில்லை. உதாரணத்திற்கு காக்களூர் சிட்கோ எஸ்டேட்டில் 2012–2013–ல், ஒரு ஏக்கருக்கு ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாய் என்று விலை அறிவிக்கப்பட்டது. ஓராண்டிற்குப் பிறகு 2013–2014–லே ஒரு ஏக்கருக்கு 6.53 கோடி ரூபாய் என்று விலை அறிவிக்கப்பட்டது. அதாவது, ஒரே ஆண்டில் 4 மடங்கு நில விலை ஏற்றம். சிறுதொழிலுக்கான முதலீடு அளவே 5 கோடி ரூபாய்தான். அவர் ஒரு ஏக்கருக்கு 6.53 கோடி ரூபாய் செலுத்த வேண்டுமென்று சொன்னால், எப்படி தொழிலை நாம் ஊக்கப்படுத்த முடியும்? எனவே, என்னுடைய ஆலோசனை என்னவென்றால்



அரசு ரியல் எஸ்டேட் செய்யாமல், நீண்டகால குத்தகைகளுக்கு, தொழில் முனைவோருக்கு நாம் நிலம் கொடுத்தால் நிலமும் நம்மிடமே இருக்கும், தொழிலும் நடக்கும். 6.53 கோடி ரூபாய் என்ற அளவுக்கு எல்லாம் பணம் கொடுத்து நிலம் வாங்குகிற நிலையிலே சிறு தொழிலதிபர்கள் இல்லை என்பதைப் பணிவாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோல 5–7–2013–லே ஓர் ஏக்கர் 3.13 கோடி ரூபாய் என்று விளம்பரம் செய்யப்பட்டது. ஒரு மாதம் கழித்து 5–8–2013–ல் அதே நிலம் 2.18 கோடி ரூபாய் என்று விளம்பரம் செய்யப்பட்டது. இதற்குப் பிறகு நிறைய பேர்கள் விண்ணப்பித்தார்கள். விண்ணப்பித்தவர்களை இண்டர்வியூவுக்கு அழைத்துப் பேசுகிறபோது உங்களிடம் 6.53 கோடி ரூபாய் ஓர் ஏக்கருக்கு இருந்தால் வாருங்கள், இல்லாவிட்டால் வர வேண்டாம் என்று அதிகாரிகள் சொல்லிவிட்டார்கள். ஏன் மூன்று மாதத்திற்குள் இந்த நில விஷயத்தில் இவ்வளவு பெரிய குளறுபடி நடக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை, இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அரசு விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது, சிறு தொழிலாக இருந்தாலும்கூட, இருக்கின்ற நிலைமையைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்பொழுது அரசு ஒரு நிலத்தை கையகப்படுத்துகின்றது. கையகப்படுத்தியதற்குப் பின்னால் வழக்கு தொடுக்கின்றார்கள் உயர் நீதிமன்றத்திலே. நாங்கள் ஒரு விலையை நிர்ணயம் செய்ததற்குப் பின்னால் நீதிமன்றம் அதற்குமேல் இரண்டு மடங்கு தர வேண்டும், மூன்று மடங்கு தரவேண்டும் என்று ஆணையிட்டு விடுகின்றது. அதற்குப் பின்னால்தான் இந்த விலை ஏறுகிறதேயொழிய அரசாக எந்தவிதத்திலும் ரியல் எஸ்டேட் செய்கின்ற வணிக நோக்கத்தோடு செயல்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும். தொழிற்சாலைகள் வரவேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபோன்ற நிலங்களை எடுத்து சிறு தொழிலாக இருந்தாலும் சரி, பெரிய தொழிலாக இருந்தாலும் சரி அவர்களை வர வைக்க வேண்டும், வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காக

[திரு. பி. தங்கமணி] [2013 அக்டோபர் 29

நிலங்களை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அங்கே இருக்கின்றவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கின்றபோது அது 5 ஆண்டுகள் கடந்தும்கூட அதற்குரிய தொகை இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று உயர்த்தி ஆணையிட்டு விடுகின்றார்கள். அதன்வாயிலாகத்தான் பண்ணுகிறோமேயொழிய 20 சதவீதம் மட்டும்தான் சர்வீஸ் சார்ஜ் வாங்கி, என்ன நம் விவசாயிகளுக்குக் கொடுக்கின்றோமோ அதற்குமேல் 20 சதவீதம் மட்டும்தான் சிப்காட் ஆக இருந்தாலும் சரி, சிறு தொழிலாக இருக்கிற சிட்கோ–ஆக இருந்தாலும் விலையை நிர்ணயிக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீருடைப் பணியாளர்கள் தேர்வு ஆணையம்மூலம் பணியமர்த்தப்படுகிற காவல் துறை, தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு இடையே ஊதியம், பதவி உயர்வு, உணவுப் படி போன்றவற்றிலே வித்தியாசம் இருக்கிறது. ஏற்கெனவே காவல் துறைக்கும், வனத் துறைக்கும் இந்த வித்தியாசம் இருந்து அது சரி செய்யப்பட்டுவிட்டது. அதைப் போலவே தீயணைப்புத் துறையிலே பணியாற்றுபவர்களுக்கும் குறைபாட்டை நீக்கி சீர்செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முறைசாரா வாரியத்தில் உள்ள தலித் தொழிலாளர்களுக்கான பலன்களுக்கு ஆகும் செலவை தலித் துணைத் திட்டத்தில் இருந்து எடுக்கக் கூடாது என்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

முறைசாரா நல வாரியம், முத்தரப்புக் குழுவை உடனே அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உயிர் பறிக்கும் மோட்டார் பைக் ரேஸ் என்ற பெயரில் அநேகமாக எல்லா பெரிய நகரங்களிலும் மிக ஆபத்தான விளையாட்டிலே இளைஞர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை எடுத்து இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 29] [திரு. அ. சவுந்தரராசன்]

கௌரவக் கொலைகள் என்ற அநாகரிகக் கொடுமைகள் தொடர்கின்றன. ** அதிகரித்தவண்ணம் இருக்கின்றன. ஆகவே, ஒரு பெரிய கருத்துப் பிரச்சாரத்தையும், கடும் தண்டனையையும் நம்முடைய அரசாங்கம் வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

T.N.P.S.C. Group-I தேர்வு எழுதுவோருக்கு வயது வரம்பை இதர பல மாநிலங்களைப் போலவே 45 வயதாக உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதர பல மாநிலங்களில் அது இருக்கிறது. இங்கேயும் மிகப் பெரிய அளவுக்கு அந்தக் கோரிக்கையை அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதேமாதிரி அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பணியில் சேருவதற்கான வயது வரம்பை நாம் ஓட்டுநர்களுக்குத் தளர்த்தி இருக்கிறோம். நடத்துநர்களுக்கும், டெக்னீஷியன்களுக்கும் அதேபோல தளர்த்த வேண்டிய தேவை இருக்கிறது. ஏனென்றால் 18 வருடம், 19 வருடம் பணி மூப்பு employment exchange–ல் இருப்பவர்களுக்குக்கூட போக்குவரத்துக் கழகங்களில் வேலைக்கு எடுக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது தனியாரிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற பலருக்கு வேலைவாய்ப்பு தரவேண்டியிருக்கிறது என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

பகுதிநேர ஆசிரியர்கள், கணினி ஆசிரியர்கள் முழுநேரப் பணிதான் செய்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு 5,000 ரூபாய் சம்பளம்தான் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அவர்களை முழு நேர ஆசிரியர்களாக்கி ஒரு பள்ளிக்கு ஒரு கணினி ஆசிரியர் போட வேண்டும். இது கணினி யுகம். பள்ளிக்கு ஒரு முழுநேர கணினி ஆசிரியர் நியமிக்க வேண்டும் என்றும் மற்ற ஆசிரியர்களுக்கு இணையான சம்பளம் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊனமுற்றவர்களில், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு 45 சதவீதத்திற்கு மேல் ஊனம் இருந்தாலே உதவித் தொகை கிடைக்கிறது. மற்ற ஊனமுற்றவர்களுக்கு 60 சதவீதத்திற்கு மேல் ஊனம் இருந்தால்தான் உதவித் தொகை என்பது தொடருவது சரியல்ல. பல மாநிலங்களிலே இது குறைக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவிலே குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இங்கேயும் அதேபோல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பணிகளிலே மூன்று சதவீதம் ஒதுக்கீடு குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு சீராக அமலாக்கப்பட வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு, வழக்குகள் போட்டுத்தான் இந்தச் சட்டச் சலுகையை நிலைநாட்ட வேண்டியிருக்கிறது. இப்பொழுதுகூட மின்சார வாரியத்திலே 3 சதவீத இட ஒதுக்கீடு வேண்டும் என்று ஒரு வழக்கு நிலுவையில் இருக்கிறது. ஆகவே, இதை எல்லாம் நம்முடைய மாற்றுத் திறனாளிகள் துறையும், சம்பந்தப்பட்ட பொதுத் துறைகளும் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு அந்த இடஒதுக்கீட்டுச் சட்ட உரிமையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகையை இப்போது வருவாய்த் துறை வழங்கிக் கொண்டிருக்கிறது. இதை மாற்றுத் திறனாளிகள் துறையே வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வருவாய்த் துறை வழங்குவதால், ஆண்டு வருமானம் 25 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக இருக்கக் கூடாது என்பது போன்ற பல சிக்கல்களும், பிரச்சினைகளும் ஏற்பட்டு பலருக்கு அதனாலே பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, மாற்றுத் திறனாளிகள் துறையே அவர்களுக்கான உதவித் தொகையை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 3–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சவுந்தரராசன் அவர்கள் பேசுகின்றபோது ** அதிகரித்திருக்கிறது என்கிற கருத்தினை இங்கே பதிய வைத்தார்கள். அவரிடம் அந்த ஆதாரங்கள் இருந்தால், ஆதாரங்களைத் தந்தால் அவைக் குறிப்பில் ஏற்றலாம்; இல்லையென்றால் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அ. சவுந்தரராசன்:** ** என்று பத்திரிகைத் தகவல்கள் அடிப்படையிலே, வழக்குகள் அடிப்படையிலேதான் நான் சொல்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகைத் தகவல்களை வைத்தெல்லாம் பேச முடியாது. ** பற்றி தெரிவித்த கருத்துகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** புகாராக வந்திருக்கலாம், ஆனால் விசாரணை செய்யப்பட்டு, அவை நிரூபிக்கப்பட்டால் மட்டுமே அவர் கருத்துகள் தெரிவிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் கடந்த ஆகஸ்டு மாதம் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த தவுபிக் சுல்தானா என்ற மாணவி பாலியல் பலாத்காரத்திற்கு இலக்காகி அந்தப் பெண் கொலை செய்யப்பட்டு, அவரது உடல் இரயில்வே இருப்புப் பாதை அருகே கண்டெடுக்கப்பட்டது. அந்த வழக்கைத் தமிழக அரசு சி.பி.சி.ஐ.டி.-யிடம் ஒப்படைத்திருக்கிறது. மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. விரைவிலே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திடம் கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாற்றுத் திறனாளிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மறுவாழ்வு நல அதிகாரியை நியமிக்க வேண்டும். இப்போது 14 மாவட்டங்களிலே அப்படிப்பட்ட அதிகாரிகள் இல்லை. மூன்று மாவட்டத்திற்கு ஓர் அதிகாரி என்றுகூட இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணி ஓய்வுபெற்று சில பேர் சென்றுவிட்ட காரணத்தால் அந்த இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. மறுபடியும் பதவி உயர்வுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது, உடனடியாகத் தீர்வு செய்யப்பட்டு அந்தக் காலிப் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு வருமான உச்சவரம்பை முன்னிட்டு உதவித் தொகை வழங்குவதில் இடர்ப்பாடுகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் வருவாய்த் துறையின் மூலமாக உதவித் தொகை வழங்கப்படுகிறது. வருமான உச்ச வரம்பை கருத்திலேகொண்டு அவர்களுக்கு உதவித் தொகை மறுக்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறு. ஆகவே, மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலுள்ள புலயர் என்னும் சாதியினர் 1976 வரை எஸ்.டி. பிரிவில் இருந்தனர். அதற்குப் பிறகு அவர்கள் எஸ்.சி. பிரிவிற்கு மாற்றப்பட்டுவிட்டனர். நம்முடைய அரசு, பழங்குடியின மக்களுக்கான ஆய்வு நிறுவனத்தை ஆய்வு செய்யச் சொன்னார்கள். அவர்கள் ஆய்வு செய்து புலயர் என்ற சாதியினர் பழங்குடியினர்தான் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்த சிபாரிசு அடிப்படையிலே மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய மாநில அரசு எழுதி அவர்களை எஸ்.டி. பட்டியலில் சேர்க்க வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாலிடெக்னிக் பரீட்சை முன்பு எழுத இயலாதவர்கள், தேர்ச்சி பெறாதவர்கள் ஆகியோருக்கு இன்னுமொரு முறை எழுதுகின்ற வாய்ப்பை, அரசு வழங்க வேண்டும். Employability என்கிற ஒரு பெரிய கேள்வி நமக்கிருக்கிறது, அதற்குப் பயன்படும். அந்த அடிப்படையில் அவர்களுக்கு அந்த வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தில் வீட்டிற்குப் பணம் செலுத்தியவர்களில் பலருக்கு இன்னும் கிரையப் பத்திரம் கிடைக்கவில்லை. அந்த நிலத்தை வகைமாற்றம் செய்தபின்தான் கிரையப் பத்திரம் வழங்க முடியும் என 30 ஆண்டுகளாக நம்முடைய குடிசை மாற்று வாரியம் சில நேர்வுகளில் சொல்லிக்கொண்டிருப்பது சரியல்ல. கிரையப் பத்திரம் கொடுத்தவர்களுக்கு பட்டா வழங்கப்படாத நிலையும் இருக்கிறது. கிரையப் பத்திரம் கொடுத்துவிட்டார்கள். பட்டா வழங்கப்படவில்லை. மக்களுக்குப் பட்டா வழங்கத் தேவையான நிலவகை மாற்றங்களை குடிசை மாற்று வாரியமும், வீட்டு வசதி வாரியமும் விரைவாக ஒன்றுக்கொன்று பேசி முடிவெடுப்பதன் மூலமாக அந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



சென்னையில் இருக்கிற மஸ்தான் தோட்டம் என்கிற இடத்திலே 17 பேர் பணம் கட்டிவிட்டார்கள். இன்னும் மூன்று பேர் பணம் கட்டவேண்டிய இடத்திலே இருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலேயும் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மிகவும் கருணைகூர்ந்து அதிக நேரம் செலவழித்து முழுவதையும் பரிசீலித்தார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினைகளில் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புது ரேஷன் கார்டுகள் வழங்குவதில் கொஞ்சம் வேகம் காட்ட வேண்டுமென்கிற பிரச்சினை இருக்கிறது. இதுகுறித்து மக்கள் நிறைய கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மிக்சி, கிரைண்டர், மின் விசிறி போன்றவை என் தொகுதியிலேயே கொடுக்க வேண்டியது நிறைய இருக்கிறது. இரண்டரை ஆண்டுகள் முடிந்துவிட்டன. பாதிபேருக்காவது கிடைத்திருக்க வேண்டும். ஆனால், இப்போது கால்பகுதி பேருக்குத்தான் கிடைத்திருக்கின்றது. ஆகவே, தொகுதி மக்கள் எம்.எல்.ஏ.–க்களை சூழ்ந்துகொண்டு . . .

பிற்பகல் 3–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முற்றிலும் உண்மைக்கு மாறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே

[திருமதி பா. வளர்மதி] [2013 அக்டோபர் 29

சொல்லிக்கொண்டிருக்கின்றார். நானும், மாண்புமிகு சட்ட மன்றப் பேரவை உறுப்பினரும் அவருடைய தொகுதிக்குப் போய் மிக்சி, கிரைண்டர், மின் விசிறி கொடுத்துவிட்டு வந்தோம். பாதி தந்திருக்கின்றார்கள். இன்னும் தொடர்ந்து தர இருக்கின்றோம். அதற்குள்ளாக அவசரப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொத்தமாக இல்லை என்று சொன்னால், அது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** நான் மொத்தமாகக் கிடைக்கவில்லை என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 வருடங்களில் அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. உங்கள் தொகுதியில் உள்ள அனைவருக்கும் 5 வருடத்திற்குள் கிடைத்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரைண்டர், மிக்சி, மின் விசிறியைப் பொறுத்தவரையிலே முதலாவது ஆண்டு 25 இலட்சம் நபர்களுக்கும் அடுத்த ஆண்டிலிருந்து 5 ஆண்டுக் காலத்திற்குள் 35 இலட்சம் பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுவிடும். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது காலத்திலே படிப்படியாக 5 ஆண்டுக் காலத்திற்குள் கிரைண்டர், மிக்சி, மின் விசிறி ஆகியவை முழுமையாக வழங்கப்படும் என்பதையும், இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தவிதமான அச்சமும் கொள்ளத் தேவையில்லை எனவும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 29]

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டு வழங்குவதிலே தாமதம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ரேஷன் கார்டுகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் தகுதியுள்ளவர்கள் யார் எல்லாம் மனு கொடுக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் 60 நாட்களுக்குள்ளாக ஆய்வு செய்து ரேஷன் கார்டு வழங்கப்பட வேண்டும் என்ற உத்தரவினை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். அப்படி எந்தப் பகுதியில் வரவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், அவர்கள் குறிப்பிட்டு சொல்கின்ற இடத்திற்கு உடனடியாக ரேஷன் கார்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** அதாவது மிக்சி, கிரைண்டர் வழங்கப்படாது என்றோ இந்த ஆட்சி 5 ஆண்டுகளுக்குள் அதை நிறைவேற்றாது என்ற சந்தேகமோ, பயமோ எனக்கு இல்லை. அது நிறைவேற்றப்படும் என நம்புகின்றேன். ஆனால், இரண்டரை ஆண்டுகளாகிவிட்டன, பாதியாவது வந்திருக்க வேண்டாமா என்று நான் தொகுதிக்குப் போகிறபோது என்னை மக்கள் சூழ்ந்துகொண்டு தகராறு செய்கிறார்கள். அந்த அளவுக்கு அதிலே அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறது, எதிர்பார்ப்பு இருக்கிறது என்று சொல்ல வருகின்றேன். ஆகவே, அவற்றை வேகமாகக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை துறைமுகம் 130 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஒரு பெரிய துறைமுகம். இந்தியாவில் இருக்கின்ற அனைத்து காலநிலைக்கும் ஏற்ப செயல்படுகின்ற, 365 நாட்களில் ஒரு நாள்கூட நிற்காமல் செயல்படுகின்ற, புயலாலும் மற்றும் எதனாலும் நிற்காமல் செயல்படுகிற ஒரு சிறப்புக்குரிய துறைமுகம். அந்தத் துறைமுகம் இன்றைக்குப் படிப்படியாக பல சிக்கல்களுக்கு ஆளாகி வருகின்றது. மத்திய அரசாங்கம் அதைக் கெடுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. அந்தத் துறைமுகத்தைப் புதுப்பிப்பதற்கு மதுரவாயல் வரையில் ஓர் உயர்மட்ட சாலையைப்

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 அக்டோபர் 29

போடுவது அவசியம் என்று கருதி நாமும், மத்திய அரசு, துறைமுகம் எல்லோரும் சேர்ந்து ஒரு திட்டத்தை உருவாக்கினோம். அந்தச் சாலைப் பணி இப்போது விரைவுபடுத்தப்படாமல் இருக்கின்ற காரணத்தினால், அந்தத் துறைமுகம் பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றது. ஆகவே அந்தச் சாலையை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாலத்தைப் பற்றி உயர் நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை விவாதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். உயர்மட்ட சாலைப் பற்றிய வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது. அதை இங்கே விவாதிப்பது மரபு அல்ல. ஆகவே, அதைப் பற்றி இங்கு இதற்குமேல் விவாதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மேம்பாலம் அமைப்பது சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதனால், அதை இங்கே விவாதிக்க வேண்டாம். உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகின்றேன். கைத்தறித் துறையின் ஓய்வூதியதாரர்களுக்கு 6, 7 மாதங்களாக சேலம், ஆத்தூர், ராசிபுரம் பகுதிகளிலே இருக்கின்றவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை என்று புகார் சொல்கின்றார்கள். அதை விரைவுபடுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஆர்டர் போடப்பட்டு எல்லா சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் ஒரு வார காலத்திற்குள் அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2013 அக்டோபர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

பிற்பகல் 3–25

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. விருதுநகர் மாவட்டத்திலும், தேனி மாவட்டத்திலும் தென்னை மரங்கள் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறது. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 2 இலட்சம் தென்னை மரங்கள் பாதிப்புக்கு ஆளாகியிருக்கின்றன என்று சொல்கின்றார்கள். ஆகவே, பாதிப்படைந்த அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுப்பது குறித்து அரசு, மாவட்ட நிருவாகத்தோடு கலந்து பேசி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் 'அம்மா உணவகம்' திறப்பதற்காகக் கட்டடப் பணிகள் துவக்கப்பட்டன. பணிகள் துவங்கிய நிலையிலேயே நிற்கின்றன. விரைவில் அங்கே கட்டடம் கட்டி அந்த மருத்துவமனையிலேயிருக்கின்ற நோயாளிகள் பயன்பெறத்தக்க வகையிலே அந்த உணவகத்தைத் திறக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## தொகுதி கோரிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பெரம்பூர் தொகுதியில் உள்ள கேப்டன் காட்டன் கால்வாய்க்கு சுற்றுச் சுவர் அமைக்க வேண்டும். கால்வாயை ஆழப்படுத்தி, ஆகாயத்தாமரை அகற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன். அந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது. இதற்காக தமிழக அரசிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பணி விரைவாக நடப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

கொடுங்கையூர் குப்பைமேடு பிரச்சினையினால் அரசு மண்டல வாரியாக குப்பையை கையாள்வதற்கு கோரிக்கை வைத்தேன். அரசு அங்கேயே விஞ்ஞானபூர்வமாக பயன்படுத்தி மின்சாரம், உரம் போன்றவை தயாரிக்கப் போகிறோம் என்று அறிவித்தது. இதற்கிடையில் துர்நாற்றம் வராமல் குப்பைகளை வெகுதூரம் எடுத்துச் சென்று கொட்டுவது என்று முடிவு செய்தது. இதனால் ஓரளவிற்கு துர்நாற்றம் வராமல் தடுக்கப்பட்டது. இதற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுகிறேன்.

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 அக்டோபர் 29

வட சென்னையில் மூலக்கடை, வியாசர்பாடி பாலப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வியாசர்பாடி பாலம் ரயில்வே பணி, மெட்ரோ குடிநீர் வடிகால் வாரியப் பணிகளை விரைவாக நடத்த அரசு தக்க நடவடிக்கை எடுத்து விரைவாக பணிகளை முடிக்க வேண்டுகிறேன்.

முதலமைச்சர், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி அறிவித்துள்ளார். இது காலத்தின் தேவையாகும். என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இல்லை. தமிழக அரசு சர்மா நகரில் உள்ள உயர்நிலைப் பள்ளியை பெண்களும் இணைந்து படிக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுகிறேன்.

அம்பேத்கர் கலைக் கல்லூரியில் பல புதிய பாடப் பிரிவுகள் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. குறிப்பாக B.A.(Defence), சென்னையிலேயே ஒரு சில கல்லூரியில்தான் உள்ளது. ஆனால், B.A. (Defence) உள்பட தனியார் கல்லூரிகளுக்கு இணையான பாடப் பிரிவுகளுக்கு அனுமதி கொடுத்த முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர்கள் உட்காருவதற்கு வகுப்பறை இல்லை என்று தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 70 இலட்சம் ஒதுக்கியுள்ளேன். கழிவறை வசதி, பாதாளச் சாக்கடை, கழிவுநீர் இணைப்பு இல்லை என்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் பேசினேன். அதன் அடிப்படையில் அதிகாரிகள் உடனடியாக நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி தந்தனர். இவற்றை நிறைவேற்ற அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

தமிழக அரசு நத்தம் வகை மனைகளுக்கு பட்டா கொடுத்து வருகிறது. என்னுடைய தொகுதியிலும் பலர் பட்டா பெற்றுள்ளனர். தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரம்பூர் தொகுதியில் 37–வது வட்டத்தில் தேபர் நகரில் வசிக்கும் இருளர் இன மீனவ மக்களுக்கு 40 ஆண்டுகளுக்குமுன் மாவட்ட ஆட்சியர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளார். மாவட்ட ஆட்சியரிடம் பல தடவை மனுக்கள் கொடுத்துள்ளார்கள்.



2013 அக்டோபர் 29] [திரு. அ. சவுந்தரராசன்]

பக்தவத்சலம் காலனி, சூழ்புனல்கரை போன்ற இடங்களில் வசிப்பவர்களுக்கு விரைவாக பட்டா கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

Small Bus என்பது மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயமாக உள்ளது. என்னுடைய தொகுதி வழியாக 3 Small Buses விட்டிருப்பதற்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் மேல்பட்டி பொன்னப்பன் சாலை வழியாக கண்ணதாசன் நகரிலிருந்தும், பார்வதிபுரத்திலிருந்தும் பெரம்பூர், எக்மோர் ரயில்வே ஸ்டேஷனுக்கு பேருந்து இயக்க வேண்டும். பார்வதி நகரிலிருந்து எழில் நகர் வழியாக திருவொற்றியூர், பெசன்ட் நகர், டைட்டல் பார்க் போன்ற இடங்களுக்கு பேருந்து இயக்க வேண்டும் என்று கோரியிருந்தேன். 37E பேருந்து எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். எம்.கே.பி. நகரிலிருந்து புரசைவாக்கத்திற்கு பேருந்து இயக்க வேண்டும் என்று கோரியிருந்தேன். அரசு விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

பெரம்பூர் தொகுதியில் மின்மாற்றி, கேபிள், மினி பில்லர் ஆகியவற்றை தேவைக்கேற்ப கொடுக்க வேண்டும் என்று கோரியிருந்தேன். மேலும், மின்மாற்றி, கேபிள், பில்லர் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு முன்வைக்கிறேன். பெரம்பூர் தொகுதி மின் அழுத்தத்தை குறைக்க துணை மின் நிலையம் புதியதாக அமைக்கக் கோரிக்கை வைத்தேன். அரசு, துணை மின் நிலையம் அமைக்க உத்தரவாதம் அளித்தது. மின் வாரிய அதிகாரிகள்கூட சிம்சன் எதிரில் அமைக்கப்படும் என்று கூறினார்கள். அரசு நடவடிக்கை மேற்கொண்டு விரைவாக துணை மின் நிலையம் அமைக்க வேண்டுகிறேன்.

B.V. காலனியிலிருந்து பாரதி நகர் வரை மின்சாரம் இல்லாத, பயன்பாட்டில் இல்லாத மின் கம்பம், உயர் அழுத்த மின் கம்பிகள் சாலை, வீடுகளுக்கு மேல் செல்கிறது என்றும் அதை அகற்ற வேண்டும் என்றும் கோரியிருந்தேன். மின்சார வாரியம் பி.வி. காலனி, சாஸ்திரி நகர் வரை அகற்றியுள்ளது. மேலும், பாரதி நகர் வரை அகற்ற வேண்டும் என்று கோரியிருந்தேன். மின் வாரியம் உடனடியாக மின் கம்பிகள், மின் கம்பம் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 அக்டோபர் 29

பெரம்பூர் தொகுதி, சாஸ்திரி நகரில் மீன் மார்க்கெட் அமைக்க முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கே. மகேந்திரன் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டது. மாநகராட்சியும் 86.9 இலட்சம் ரூபாயை மீன் மார்க்கெட் அமைக்க நிதி ஒதுக்கியுள்ளது. அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு மீன் மார்க்கெட் அமையவும், மக்கள் சுகாதாரமாக வாழவும் உதவ வேண்டுகிறேன்.

பெரம்பூர் தொகுதியில் 2,500 குடும்பங்கள் கிருத்துவ மக்கள் உள்ளனர். கிருத்துவ மக்கள் மரித்தால் அடக்கம் செய்ய அவர்கள் வாழும் பகுதி அருகிலேயே இடம் வேண்டும் என்று கோருகின்றனர். மரித்தவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், மாதவரத்தில் இடம் ஒதுக்கியுள்ளதாக கூறுகின்றனர். நான் தமிழக அரசுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் கடிதம் எழுதியுள்ளேன். அரசு, மரித்த கிருத்துவர்களுக்கு மக்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே அடக்கம் செய்ய இடம் ஒதுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

பெரம்பூர் தொகுதியில் அண்ணாசாலை குறுக்குத் தெரு பவித்ரா மருத்துவமனை பின்புறம் அரசு நிலம் உள்ளது. ஒரு சில பகுதியை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மீதியுள்ள இடத்தையாவது மாநகராட்சி கையகப்படுத்தி இளைஞர்கள் விளையாடுவதற்கு விளையாட்டுத் திடலாக மாற்ற வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு பல முறை முறையீடு செய்துள்ளேன். அரசு மேற்குறிப்பிட்ட இடத்தை மாநகராட்சியிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன். இது இளைஞர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

பெரம்பூர் தொகுதியில் சாமந்திப்பூ காலனி, கண்ணதாசன் நகர் போன்ற இடங்களில் பழுதடைந்த பயனற்ற மேல்நிலைத் தொட்டிகள் உள்ளன. அதை அகற்றி, மக்களுக்கு பயன்படும் வகையில் பூங்காவாக, விளையாட்டுத் திடலாக மாற்ற வேண்டும் என்று குடிநீர் வாரியத்திடம் கோரிக்கை வைத்திருந்தேன். அரசு இந்தக் கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டுகிறேன்.

குடிசை மாற்று வாரிய வீடுகளில் கழிவுநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு, வீடுகளில் குடியிருக்க முடியாத நிலை உள்ளது. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உடனடியாக பழுதுபார்க்க ரூபாய் 75 இலட்சம் ஒதுக்கியுள்ளேன். பழுதுபார்க்கும் பணி மிகவும்



2013 அக்டோபர் 29] [திரு. அ. சவுந்தரராசன்]

மந்தமாகவே உள்ளது. அதேபோல் பல இடங்களில் பால்கனி இடிந்து விழுதல், சுவர் இடிந்து விழுதல் நடக்கிறது. இதையும் குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுக்க அரசு உதவி செய்ய வேண்டுகிறேன்.

46—வது வட்டம் பொன்னப்பன் தெரு, தேசிகானந்தபுரம் 1, 2 தெருக்கள், பவர் லைன் போன்ற பகுதிகளில் கழிவுநீர் சாலைக்குமேல் செல்கிறது. இரண்டு வருட காலமாக கழிவுநீர் வாரியத்திடம் புதிய லைன் அமைக்க வேண்டும் என்று முறையிட்டுள்ளேன். அரசு, கழிவுநீர் வாரியம் விரைவாக நடவடிக்கை எடுக்க உதவ வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் புதன்கிழமை (30—10—2013) காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3—25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

39. மனுக்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2013-—2014)

40. மனுக்கள் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை. (2013—2014)

41. மனுக்கள் குழுவின் முப்பத்திரண்டாவது அறிக்கை. (2013—2014)

42. மனுக்கள் குழுவின் முப்பத்துமூன்றாவது அறிக்கை. (2013—2014)

43. மனுக்கள் குழுவின் முப்பத்துநான்காவது அறிக்கை. (2013—2014)

44. மனுக்கள் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை. (2013—2014)

***